# பண்டைய மட்டக்களப்பும் சங்கமன்கண்டி இறக்காவில் சிவாலயமும்

(ஆய்வு)

"கலாபூஷணம்" ஆய்வாளர்
நா. நவநாயக மூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய மட்டக்களப்பும் சங்கமன்கண்டி இறக்காவில் சிவாலயமும்

(ஆய்வு)

"கலாபூஷணம்" ஆய்வார்வலர்

**நா. நவநாயக மூர்த்தி**

(தொல்லியலாளர், இந்து சமய நூலாசிரியர்)

வெளியீடு :

**வானதி பவனம்**

**பனங்காடு, அக்கரைப்பற்று (கி.மா)**

**இலங்கை**

**2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வானதி வெளியீடு - 09**

**பதிப்புத் தரவுகள்**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **பண்டைய மட்டக்களப்பும், சங்கமன் கண்டி இறக்காவில் சிவாலயமும்** |
| வகை | : | சமயம் (ஆய்வு) |
| ஆசிரியர் | : | "ஆய்வார்வலர்" நா. நவநாயக மூர்த்தி |
| மொழி | : | தமிழ் |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| முதற்பதிப்பு | : | ஆடி 2017 |
| வெளியீடு | : | வானதி பவனம்.<br>பனங்காடு, அக்கரைப்பற்று,<br>இலங்கை.<br>தொலைபேசி : 0673678826, 0772729641 |
| கணணி வடிவமைப்பு | : | எப்கே.கொம் *(Effke.com)* - 0786146414<br>அக்கரைப்பற்று. |
| அச்சுப்பதிவு | : | மல்டிஓப்செற் - 0777651002<br>அக்கரைப்பற்று. |
| பக்கங்கள் | : | xviii + 128 |
| விலை | : | 400.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என்னை வாழவைக்கும்
என் அன்னைத் தமிழுக்கு
இந்நூல் சமர்ப்பணம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | வாழ்த்துரை | v |
| 02. | சிறப்புரை | vii |
| 03. | அணிந்துரை | ix |
| 04. | என்னுரை | xii |
| 05. | பண்டைய மட்டக்களப்பு | 1 |
| 06. | மகாவம்சம் கூறும் ஏரகாவில் என்ற சங்கமன் கண்டி இறக்காவில். | 18 |
| 07. | இறக்காவில் கிராமம். சிவாலயம் தோற்றம் | 26 |
| 08. | பௌத்தம் அறிமுகம் | 36 |
| 09. | தமிழ் மன்னர்கள் சேனன், கூத்திகன் எல்லாளன் காலத்தில். | 45 |
| 10. | துட்டகாமினி மன்னன் காலம் தொடக்கம் தமிழ் மன்னர்கள் ஆட்சிக் காலம் வரை (கி.மு 101 - 29 வரை) | 56 |
| 11. | மட்டக்களப்பில் தமிழர் ஆட்சியும் இலங்கை அரசியல் நிலையும் (கி.மு. 29ஆம் ஆண்டு தொடக்கம் மகாசேனன் காலம் வரை) | 64 |
| 12. | கி.பி. முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் | 80 |
| 13. | கி.பி மூன்றாம் நூற்றாண்டில் மட்டக்களப்பும் சங்குமன் கண்டி இறக்காவில் சிவாலயமும். | 90 |
| 14. | கி.பி நாலாம் நூற்றாண்டில் சங்கமன் கண்டி இறக்காவில் சிவலாயம் | 100 |
| 15. | கி.பி நாலாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மட்டக்களப்பு | 109 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வாழ்த்துரை

இலங்கைக்கு உரித்துடைய தொன்மையான இனக்குழு மங்களுள் ஒன்று என்ற வரலாற்றுரிமை தமிழ்ச் சமுதாயத்துக்கு உண்டு. சமய அடிப்படையில் நோக்கும் போது இலங்கையில் இன்று நிலவும் சமயங்களுள் சைவமே அதி தொன்மை வாய்ந்தது. ஆனால் பேரினவாத மனப்பான்மையும், அம் மனப்பான்மையுடன் கூடிய அறிவு அரசியல் தொழிற்பாடுகளும் உண்மையை மூடி மறைப்பதிலேயே கண்ணும், கருத்துமாய் உள்ளன.

இலங்கையின், வடக்கு, கிழக்கு பிரதேசங்கள், தொன்று தொட்டு, தமிழ் வழங்கும் பெரு நிலப்பரப்பின் பகுதிகளாக அமைந்தனவே, சுயாதிபத்தியம் உடைய தமிழரசுகள் பரம்பரை பரம்பரையாக அங்கு நிலை கொண்டிருந்தன. ஐரோப்பியரின் வருகையும், அவர்களின் ஆட்சியும் அதன் பின்னரான உலக அரசியலும், இலங்கைத் தீவின், தமிழ்ப் பிராந்தியங்களின், வாழ்வையும், வளத்தையும் தலைகீழாக மாற்றி விட்டன. சிங்கள அரசுகளுக்கு, தமிழரசுகள் தொடர்பான அச்ச உணர்வு இரத்தத்தோடு கலந்தது. மகாவம்சம் அந்த அச்ச உணர்வை, ஆங்காங்கே வெளிப்படுத்தத் தவறியதில்லை.

ஆங்கிலேயர் ஆட்சியின் பின், இலங்கைத் தீவு அடங்கலும் ஓரரசின் கீழ் வந்து, சிங்கள சமூகத்தைப் பெரும்பான்மைச் சமூகமாக்கிய பின்னும் அந்த அச்ச உணர்வு அடங்கவில்லை. மாறாக ஆணவத்தோடு கலந்து அச்சமாய் முனைப்புற்றது. அத்தகு மனப்பான்மையின், விளைவுகளே சிறுபான்மையினர் மேலான அடக்கு முறைகளின் அதிகரிப்பும் வரலாற்றுத் திரிபுகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தத் தாக்கத்துக்கும் மறுதாக்கம் உண்டு. இது இயற்கை நியதி, பேரினவாதிகள் சிறுபான்மையினரின் வரலாற்றை மறைக்கவும், உரிமைகளை மறுக்கவும் முயலுகின்ற போது, சிறுபான்மையினரின் இன, மத உணர்வுகள் முனைப்புப் பெறுவது அந்த இயற்கை விதிக்கு அமைவானதே! இலங்கையின், வடக்கிலும், கிழக்கிலும் வாழும், தமிழ்பேசும் சமூகத்தவர், தங்கள் வரலாற்றை, மீளவும் கட்டமைப்பதில் அதிக கரிசனை காட்ட வேண்டிய கட்டாய நிலமைக்கு ஆளாகியுள்ளார்கள்.

பல்கலைக் கழகங்களிலும், வெளியிலும் உள்ள, வரலாற்று ணர்வும், அறிவும் உடையவர்கள் தனித்தனியாக தங்கள், தங்கள் ஆற்றலுக்கும், வசதிக்கும் தக்கபடி அதில் ஈடுபட்டுழைக் கிறார்கள். நிறுவன ரீதியாகச் செயற்படுவதற்கான சூழமைவுகள் இல்லாத நிலையில், தனிப்பட்டவர்களின் அறிவும், ஆற்றலும், அக்கறையுமே அவர்களை அவ்வாறு தொழிற்பட வைக்கின்றன.

கிழக்கிலங்கையிலே, நீண்ட நெடுங்காலமாக அவ்வாறு தொழிற்பட்டு வருபவர் அறிஞர் நா.நவநாயக மூர்த்தி அவர்கள், அவருடைய அறிவும் அக்கறையும் அச்சமின்மையும் பாராட்டுக்குரியன. உயர் மட்டங்களில் இருப்பவர்களே அஞ்சி அடங்கியிருக்க, இவர் துணிவோடு தொழிற்படுகின்றார். "பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது" அவரது துணிவும், அறிவும் சமூகத்திலும் தொற்றிப் பரவி விடிவுக்கு வித்தாக வேண்டும் என அவாவி வாழ்த்துகிறோம்.

**காலநிதி. க. இரகுபரன்,**
சிரேஸ்ட விரிவுரையாளர்,
மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்.

23.06.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புரை

இலங்கையின் பூர்வீக வரலாற்றை ஆராயுமிடத்து கிழக்கு மாகாணத்தைத் தவிர்க்க முடியாது. இம்மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு பிரதேசம் தொன்மையானது. இதன் வரலாறுபற்றி மட்டக்களப்புத்தமிழகம், மாகோன்வரலாறு, மட்டக்களப்பின் பூர்வீக சரித்திரம், (மட்டக்களப்புமான்மியம்) போன்ற நூல்களில் அறியலாம். பண்டைய மட்டக்களப்பு பிரதேசம் வெருகலாறுமுதல் கதிர்காமம் வரை பரந்திருந்தது கி.பி நான்காம் நூற்றாண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பின் தென்பகுதி "உன்னரசுகிரி" எனும் அரசியல்பிரிவாக அமைந்திருந்தது. அக்காலத்திலிருந்து வரலாற்றுப் பிரதேசமாக சிறப்புடன் விளங்கியது.

ஆய்வார்வலர் நா. நவநாயக மூர்த்தி அவர்கள் இதுவரை எட்டு நூல்கள் எழுதியுள்ளார். அவரின் ஒன்பதாவது நூலான பண்டைய மட்டக்களப்பும், சங்கமன்கண்டி இறக்காவில் சிவாலயமும் எனும் இந்நூலுக்கு சிறப்புரை எழுதக்கிடைத்தமை பரமனின் பாக்கியமாகவே கருதுகின்றேன். இறைவனால் படைக்கப்பட்ட மனிதனின் ஆயுளைவிட மனிதனால் படைக்கப்பட்ட இலக்கியங்களுக்கு ஆயுளதிகம் என்பதற்கேற்ப வரலாற்றுச்சான்றாக இந்நூலும் வையகத்தில் வாழும் என்பதில் ஐயமில்லை.

இலங்கையின் சிங்களபௌத்த அரசினாலும், நிலங்களைச் சுவிகரித்தக் கொள்ளும் ஆக்கிரமிப்பாளர்களாலும் இலங்கைத் தமிழர்களின் வரலாற்றுச் சிறப்புக்கள் அழிக்கப்பட்டுவருகின்றன. இன்றையதிருகோணமலையின் வரலாற்றுப் பெயர் கோகண்ண என இருந்ததுபோல் பல வரலாற்று இடங்கள் மருவி வேறுபெயர்கள் பெற்றுள்ளன. இதுபோலவே மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் ஏரகாவில் எனும் இடம் சங்கமன்கண்டி இறக்கா பகுதியாக இருந்திருக்கலாம். என்பதை ஆதாரம் காட்டி இந்நூல் விளக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று உண்மைகளை மறைத்தும் பொய்யாக்கியும் புதிதாகப் புனைந்தும் ஆவணப்படுத்தும்போது அதுவே உண்மைச்சான்றென எதிர்காலச்சந்ததியினர் எண்ணலாம். புதைக்கப்பட்ட தமிழரின் வரலாற்றை தோண்டி எடுக்கும் ஆயுதங்களாக இத்தகைய இலக்கியங்கள் இலங்கவேண்டும். எமது பிரதேச தொன்மைபற்றி பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வுகள் செய்து ஆதாரங்களை வெளியிடவேண்டும் என்பதை எனது சிறப்புரையினூடாக நான் கூறவிளைகின்றேன். கிழக்குமாகாண வரலாற்றை தமிழர்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். இது பற்றி நூலாசிரியர் 'பண்டைய ஈழத்தமிழர்" எனும் நூலிலும் கூறியுள்ளார்.

நூலாசிரியரின் பிறந்த இடமான திருக்கோவில் பிரதேசத்தின் தொன்மைபற்றி "திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு" எனும் நூலை வெளியிட்டுள்ளார் இது இப்பிரதேச ஆய்வுக்கு சிறந்த ஆதாரமாகும். ஆசிரியரின் ஐந்தாவது நூலான "தம்பிலுவில் கண்ணகை வரலாறு" 1999இல் வெளியிடப்பட்டது. அப்போது அதன் விலை எண்பது ரூபாதான். இன்று கண்ணகி வழிபாடு பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு அதன் பிரதி ஒன்றைப் பெறுவது மிகச்சிரமமாக உள்ளது முற்றத்து நீரின் முக்கியத்துவும் தெரிவதில்லை.

"திருக்கோவில் பிரதேச இலக்கியவரலாறு" எனும் நூலில் குறிப்பிடப்பட்டவாறு பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் செய்ய வேண்டிய ஆய்வுகளை இல்லத்திலிருந்து கொண்டே இவர் செய்கின்றார் என்பதை இவரது நுண்மாண் நுழைபுலத்து நூதனம் காட்டுகின்றது. இந்நூலானது பார்போற்றும் சான்றாக மிளிரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**திரு. வ. ஜயந்தன்** (வண்ணக்கர்)
திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயம்
திருக்கோவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஒரு நாட்டின் வரலாறு என்பது அந்நாட்டின் அரசு, அங்கு வாழ்ந்த மக்கள் அவர்களின் சமய, சமூக அரசியல் பண்பாட்டம்சங்கள் என்பனவற்றை உலகிற்குத் தெளிவாக அறியச் செய்வதாகும். வரலாற்றை முழுமையான ஆதாரங்களுடன் எடுத்துக் கூறும் போது அதன் உண்மைத் தன்மை சந்தேகங்களிற் கிடமின்றி தெளிவு படுத்தப்படுகின்றது.

இவ்வண்மைகளிற்கமைய ஆய்வார்வலர் திரு. நா.நவசாயக மூர்த்தி எழுதியிருக்கும் "பண்டைய மட்டக்களப்பும் சங்கமன் கண்டி இறக்காவில் சிவாலயமும்" என்ற வரலாற்று நூல் பல்வேறு முதன்மை ஆதாரங்களைத் தேடி சிறந்த முறையில் தெளிவான சிரான சிந்தனையுடன் நெறிப்படுத்தப்பட:டு வரலாற்று நூலாக்கப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கு தென் இலங்கை, தென் கிழக்கிலங்கை போன்ற பிரதேசங்களில் காணப்பட்ட பிராமிச்சாசனங்கள் குகை, பாறைக் கல்வெட்டுக்கள், கல்வெட்டு ஆய்வு நூல்கள், தனது ஆய்வுக் குறிப்புக்கள் போன்றவற்றை முதன்மை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

இந்நூலாசிரியர், இதற்கு முன்பு, பண்டைத் தமிழர் வரலாறு, பண்டைத்தமிழர் பண்பாட்டுக் கோலங்கள் பழந் தமிழர் நடுகற்பண்பாடு ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் போன்ற நூல்களையும்பல்வேறு கட்டுரைகளையும் எழுதி மக்களின் வரலாற்றறிவை மேலோங்கச் செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் ஆரம்ப அத்தியாயத்தில், மட்டக்களப்பின் தோற்றம் அதன் எல்லைகள் அரசர்கள் என்பனபற்றிக் கூறுகின்றார் பெரும்பான்மையாகத் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்தார்கள் என்பதைக் கல்வெட்டு ஆதாரங்கள் மூலம் எழுதப்பட்டுள்ளது. இந்நூலில் கி.மு இரண்டாம் நூற்றாண்டுடிலிருந்து கி.பி 1960 ஆண்டு வரையிலான வரலாற்றுக்காலத்தில் கலிங்க மாகனின் ஆட்சி பற்றியும் அவனால் உருவாக்கப்பட்ட பளுகாமம், சம்மாந்துறை, பாண்மை ஆகிய வன்னிச் சிற்றரசுகள் பற்றித் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களில் கிழக் கிலங்கையில் உருவாக்கப்பட்ட வன்னிச் சிற்றாட்சிப்பிரிவுகள் பற்றிக் குறிப்பிடுகின்றார். இவ்வரலாற்று நூலில் மகாவம்சம் கூறும் ஏரகாவில் என்ற சங்கமன் கண்டி இறக்காவில் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவாலயத்தின் தொன்மை வரலாறு எடுத்துக் கூறப்படுகின்றது இங்கு வாழ்ந்த மக்களின் சமூக, சமய அரசியற் பொருளாதார நிலைகளை விளக்கியுள்ளார்.

மகாசேனனின் ஆட்சிக் காலத்தில் அச்சிவாலயம் அழிக்கப்பட்டு இறக்கா விகாரையைக் கட்டுவித்தான் என்பதை முதன்மை ஆதாரங்களுடன் விளக்குகின்றார். இவ்விறக்கா வில்லு குளம் இன்று வட்டுவான் குளம் என்ற பெயருடன் விளங்குவதையும் படிவெட்டின மலை பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய பிரதேசமாக விளங்கு வதையும் ஆசிரியர் எடுத்துக் கூறுகின்றார். சிவவழிபாடும் சைவசமயமும் பெருங்கற்காலப் பண்பாட்டின் சிறப்பம்சங்கள் என்பதை இறக்காவில் சிவாலயத்தின் மூலம் அறியக் கிடக்கின்றது.

பாண்டியர் ஆட்சிக் காலத்தில் கிழக்கிலங்கையில் பிரபல்யம் பெற்ற துறைமுகங்கள் இருந்துள்ளன. என்பதையும் வர்த்தகம், போக்கு வரத்துக்கள் இடம் பெற்றதையும் 16 பிராமிச் சாசனங்கள் எடுத்துக் கூறுகின்றன. உறுகுணையில் ஆட்சி புரிந்த குறுநில மன்னர்களான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகர், இயக்கர், பாண்டியர், கலிங்கர் என்போர் திராவிட நாகரீகமுடைய இந்து சமயத்தோர் என்று கூறுகின்றார்.

தேவ நம்பிய தீசனுடன் பௌத்தம் அறிமுகமான பின் பல தமிழ்ப் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்றும் சிவாலயமும், பௌத்த வழிபாட்டுத் தலங்களும் காணப்பட்டன. எனக் குறிப்பிடுகின்றார். தீகவாகிபில் பௌத்த குடியேற்றங்கள் தோன்றியதைக் குறிப்பிடு கின்றார் மகாசேனனின் ஆட்சியுடன் கலிங்கச் சிற்றரசர்கள் சிவ வழிபாட்டை விடுத்து சிறு தெய்வவழிபாட்டை ஆரம்பித்தனர் இத்துடன் சங்கமன் கண்டிமுனை இறக்காவில் சிவாலயமும் பொலிவிழக்க ஆரம்பித்தது.

மட்டக்களப்புத் தமிழ் மன்னர்கள் சில காலங்களில் சிங்கள மன்னர்களின் மேலாதிகத்தை ஏற்றிருந்தபோதும் சுதந்திர முள்ள சிற்றரசர்களாகவே ஆட்சி புரிந்தனர். தொலமியின் வரை படத்தில் சங்கமன் கண்டியும் (முனை) அங்கிருந்த கோயிலும் காட்டப்பட்டுள்ளது கோவலனும் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் சங்கமன் கண்டியுடன் வர்த்தகத் தொடர்பு வைத்திருந்ததையும் அறிய முடிகின்றது.

இவ்வாறான ஒரு வரலாற்றுத் தெளிவுடன் எழுதப்பெற்ற இந்நூல் எல்லோராலும் வாசிக்கப்பட்டு தெளிவு பெற வேண்டும் இந்நூலாசிரியர் பல்லாண்டு வாழ்ந்து பல வரலாற்று நூல்களை வெளியிட்டு மாணவர்களிற்கு உதவி செய்ய வேண்டும் என்று கூறி இறைவனை வணங்குகின்றேன்.

**கலாநிதி அனுசூயா சேனாதிராஜா**
முதுநிலை விரிவுரையாளர்
வரலாற்றுப் பிரிவு
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்
26.06.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

பண்டைய ஈழ வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றிருந்த நகரங்களிலொன்றான சங்கமன் கண்டியுடன் சிறுவயது முதல் நெருங்கிய தொடர்பு எனக்கு இருந்துவந்துள்ளது சங்கமன் கண்டியுடனான எனது தொடர்பு உள்ளத்து உணர்வு பூர்வமானது எனலாம். சிறுவனாக விருந்த காலத்தில் வருடா வருடம் சங்கமன் கண்டி சென்று காட்டுப் பிள்ளையார் ஆலயத்தில் பொங்கலிட்டுப் பூசை செய்து சங்கமன் கண்டியானை வழிபட்டு வந்துள்ளேன்.

பிற்பட்ட காலத்தில், சங்கமன் கண்டி பிள்ளையார் ஆலயம் உள்ளிட்ட பண்டைய சங்கமன் கண்டி நகர் பகுதி, மற்றும் இறக்காவெட்டை உள்ளிட்ட பரந்த புறகர்பகுதிகளையும், பல தடவைகள் சென்று மேலாய்வுகள் மேற் கொண்டு வந்தேன் இவ்வேளைகளில், நான் கண்ணால் கண்டு மெய்மறந்து பிரமித்து அனுபவித்த, எழுத்தாவணங்களுக்கு முந்திய, ஆனால் வலுவான சான்றுகளாக அமையும் புதிய கற் காலத்தரவுகள், வரலாற்றுக் காலத் தொல்லியல் சின்னங்கள், மற்றும் வரலாற்று எச்சங்கள் இன்னும் என் நினைவில் உள்ளன.

1990 ஆண்டு யூன் மாதத்திற்கும் 2010ஆம் ஆண்டுக்கு மிடைப்பட்ட காலத்தில் சங்கமன் கண்டி செல்வதையும், சிவலிங்க வடிவில் அருள்பாலித்து வரும் காட்டுப் பிள்ளையாரான சங்க மன் கண்டியானைத் தரிசிப்பதையும் நான் முற்றாகவே தவிர்த்து வந்தேன். அக்கால்ததில், இதனை ஒரு விரதமாகவே நான் மேற்கொண்டு வந்துள்ளதை எனது நெருங்கிய நண்பர்கள் அன்பர்கள் நன்கறிவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கால கட்டத்தில் (1990 - 2010) நான் எழுதி தேசிய நாளிதழ்கள், வாரமலர்கள், மற்றும் விசேட மலர்கள் சஞ்சிகைகள் என்பனவற்றில் வெளிவந்த சில ஆய்வுக்கட்டுரைகளிலும், மற்றும் எனது நூல்கள் சிலவற்றிலும் சங்கமன்கண்டி பற்றிய குறிப்புக்கள்உள்ளன. குறிப்பாக சங்கமன்கண்டி காட்டுப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக விசேட மலரில் (2009) வெளிவந்த எனது ஆய்வுக் கட்டுரையில் பண்டைய சங்கமன் கண்டி நகர் பற்றிய விரிவான குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இதேவேளை, மகாவம்சம் குறிப்பிடும் வரலாற்றுச் செய்தியொன்று எனது கவனத்தை ஈர்த்து வந்தது.

மகாசேனன் என்னும் சிங்கள மன்னன் (கி.பி.325 - 352) இலங்கையின் கிழக்குக் கரையில் அமைந்திருந்த பிரம்ம தேவதைகளின் கோயில்களை அழித்து, அந்த இடங்களில் மூன்று விகாரங்களை நிர்மாணித்தான் கோகர்ண விகாரம், ஏரகாவிலத்தில் ஓர் விகாரம், கலந்தன் என்ற பிராமணனுடைய கிராமத்தில் ஓர்விகாரம் ஆகியனவற்றை அமைத்தான் என்று மகாவம்சம் (M.V அத். 37:40, 41) குறிப்பிடுகின்றது.

இதனை மகாவம்சத்தின் உரைநூலான "மகாவம்சதீக கிழக்குக் கரையில் மகாசேனன் காலத்தில் புகழ்பெற்றிருந்த இம்மூன்று பிரம்ம தேவதைகளின் கோயில்களும் சிவாலயங்கள் என்றும், இவற்றில் ஒரு சிவாலயம் ஏரகாவில் என்ற ஊரில் அமைந்திருந்த தென்றும், உரோகண நாட்டில் நெடுங்காலமாக விருந்த இக்கோயிலை மகாசேனன் அழித்தான் என்றும் கூறுகிறது.

இதேவேளை, மகாவம்சம் நூல்குறிப்பிடும் "ஏரகாவில்" என்ற இடம், சங்கமன் கண்டி இறக்கா பகுதியாக விருக்கலாம் என்று என் மனம் எண்ணத் தொடங்கியது இந்த இடத்தின் மையப்பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்த பழமைவாய்ந்த குளம் என் எண்ணத்திற்கு வலுசேர்த்தது. இறக்கா என்ற இடமும் இங்கு அமைந்திருந்த குளமும் சேர்ந்து (இறக்கா இடப்பெயர், குளம் - வில்) இறக்காவில் என்ற பெயருடன் இந்த இடம் பண்டைக் காலத்தில் வழங்கி வந்திருக்கலாம். என்ற நம்பிக்கை என் மனதில் வேரூன்றத் தொடங்கியது.

இதனைக் கருத்தில் கொண்டு ஆர்வத்துடன் ஆய்வுகள் மேற் கொள்ளத் தொடங்கினேன். இவ்வேளை பல தடவைகள் இறக்கா பகுதிக்கும் பண்டைய சங்கமன் கண்டி தெற்கு, வடக்கு கிழக்கு புறநகர் பகுதிகளுக்கும் சென்று மேலாய்வுகள் மேற் கொண்டேன். இக்கள ஆய்வுகள் மூலமாக பயனுள்ள தரவுகளைப் பெற முடிந்தது, இவற்றின் மூலமாக மகாவம்சம் கூறும் ஏரகாவில் (ஏறக்கவில்) என்ற ஊர் தற்போதைய இறக்காவெட்டை, வட்டுவான்குளம், மணல் சேனை உள்ளிட்ட பகுதியேயாகும் என்பதை உறுதி செய்ய முடிந்தது.

இதனைத் தொடர்ந்து, தேடல், சிந்தனை, தெளிவு பதிவு என்ற பதிவு வரையறையின் கீழ் உருவானதே "பண்டைய மட்டக்களப்பும் சங்கமன் கண்டி இறக்காவில் சிவாலயமும்" என்ற இந் நூலாகும். இதில் அம்பாரையை உள்ளடக்கியிருந்த பண்டைய மட்டக்களப்பு தேசத்தின் வரலாறும் அடங்கியுள்ளது. காலத்தின் கட்டாயம் என்ற வகையில் காத்திரமான வரலாற்றுச் சான்றுகளுடன் வெளிவரும் இந்நூல் கல்விச் சமூகத்தினர் மட்டுமன்றி சகல தரப்பினரும் படித்துப் பயன் பெறல் வேண்டும் என்ற நோக்கில் இலகு தமிழில் எழுதப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர், வரலாறு, குறிப்பாக 1961ஆம் ஆண்டு வரை வெருகல் தொடக்கம் தெற்கே குமுக்கன் ஆறுவரை, பரந்திருந்த பண்டைய மட்டக்களப்பு தமிழகத்தின் பூர்வீக வரலாறு அண்மைக் காலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில ஆய்வாளர்களால் வேண்டு மென்றே திட்டமிடப்பட்ட வகையில் திரிபுபடுத்தப்பட்டு கட்டுரைகளாகவும், நூல்களாகவும் பதிவு செய்யப்பட்டு வெளிவருவதைக் காணமுடிகின்றது காலகெதியில் இப்பதிவுகளையே சான்றுகளாகக் கொண்டு இப்பிராந்தியத்தின் வரலாறு பதிவு செய்யப்பட்டு பூர்வ குடியினரான தமிழர் வரலாறு மறைக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது. அதலால். இது போன்ற நூல்கள் வெளிவருவது காலத்தின் தேவை எனலாம்.

இன்றைய காலகட்டத்தில், எமது இளந்தலை முறையினர் அறிவியல் சார்ந்த நிலையில் பல்துறைகளில் ஆர்வம் காட்டித் தங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தி கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு, போன்றவற்றில் முன்னேற்றம் கண்டு வருகின்ற போதும். இப்பெரு வளர்ச்சியானது எமது சமூகத்தின் பாரம் பரியம், பண்பாடு கலாசாரம் என்பனவற்றை அடித்தளமாகக் கொண்டதாக விருக்கவேண்டும். இதற்கு எமது மண்ணின் கடந்த கால வரலாற்றை அறிந்திருத்தல் அவசியமாகும்.

எமது மண்ணைக் காத்திட கடந்த காலத்தில் எம்முன்னோர்கள் மேற்கொண்டு வந்த நடவடிக்கைகள் செய்துவந்த தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள் பற்றித் தெரிந்திருத்தல் மூலமாகவே எமது சமூகத்தின் இருப்பை இத்தீவில் நாம் நிலை நிறுத்த முடியும். இதனை பல தடவைகள் நான் குறிப்பிட்டு வந்துள்ளேன்.

இறுதியாக, ஒரு விடயத்தை நான் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். எனது ஆன்மீக குருவும், இளம் வயதிலேயே எனது வாழ்க்கைப் பாதையைத் திசை திருப்பி விட்டவருமான சித்தர் மயில்வாகன சுவாமியவர்கள். ஒரு சமயம் சங்கமன் கண்டி பற்றி என்னுடன் உரையாடிக் கொண்டிருந்த போது (1970இல்) “சங்கமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிரகசியம்" என்று குறிப்பிட்டார். அக்காலத்தில் சிறந்துதொரு வாசகனாக நான் இருந்து வந்தேன். பிற்காலத்தில், ஒரு எழுத்தாளனாக வருவேன் என்றோ சங்கமன் கண்டி பற்றி எழுதுவேன் என்றோ அவ்வேளை கனவில் கூட நான் எண்ணியிருக்கவில்லை சங்கமன் கண்டி வரலாறு என்பது மட்டக்களப்பின் முந்து வரலாற்றுக் காலம் என்ற வகையில் முக்கிய ஆவணமாகக் கொள்ளப்படுகின்றது.

வணக்கம்!

**நா. நவநாயக மூர்த்தி**
'வானதி பவனம்',
பனங்காடு
*20.02.2017* அக்கரைப்பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களுக்கு எனது நன்றி...

- உள்ளத்துணர்வுகளை எழுத்துக்களால் வடித்து உவகையுடன் வாழ்த்துரையாக வழங்கிய தென்கிழக்குப் பல்கலைக் கழக சிரேஸ்ட விரிவுரையாளர் (மொழித்துறை) கலாநிதி, திரு. க.இரகுபரன் அவர்கள்.

- பேரன்புடன் சிறப்புரை வழங்கிய திருக்கோவில் சித்தரவேலாயுதர் ஆலய வண்ணக்கர்கௌரவ, திரு, வ.ஜெயந்தன் அவர்கள்.

- இந்நூலுக்கு அணிகலனாக அன்புடன் அணிந்துரை வழங்கி நூல் வெளிவர பங்களிப்பும் நல்கிய இனிய நெஞ்சம் தென் கிழக்குப் பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் (வரலாற்றுப்பிரிவு) கலாநிதி அனுசூயா சேனாதிராசா அவர்கள்.

- உள நிறைவுடன் நூலாசிரியர்பற்றி கருத்துரைத்த இலக்கிய நெஞ்சம் திரு.சீ.சபாரெத்தினம் ஐயா (ஓய்வு நிலை அதிபர் சமாதான நீதவான், முன்னாள் ஆலையடி வேம்பு முருகன் ஆலயத்தலைவர்) அவர்கள்.

- இந்நூல் வெளிவர, ஊக்கமும், ஒத்துழைப்பும் நல்கிய இனிய இதயங்கள், திரு.வேவாமவேதன் (திட்ட இணைப்பாளர் எஸ்.ரி.ஏ சொலிடற்றிபவுண்டேசன்) டாக்டர் வே. உமாசங்கர் (MBBS) ஆகியோர்.

- நூல்வெளியீடு விற்பனை என்பனவற்றில் உறுதுணையாக விருந்து வரும் அன்பு நெஞ்சங்கள், திருமதி ஜெகதீஸ்வரி நாதன் (தம்பிலுவில்ஜெகா) சமூக ஆர்வலர் க.பேரின்பராஜா ஜே.பி, திரு. க.ஜெயசேகர் (கண்ணன்) ஆகியோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இந்நூல் தொடர்பாகக் களஆய்வுகள் மேற்கொள்ளப் பல தடவைகள் சங்கமன் கண்டிக்கு என்னை அழைத்துச் சென்ற எனது அன்பு மருமகன் திரு.வே.உதயகுமார் (மூத்த மகள் வானதியின் கணவர்) மகன் பிரசன்னா (ஆசிரியர்) ஆகியோர்.

- இந்நூலில் இடம்பெற்றுள்ள படங்களை எடுத்துத் தந்துதவிய மகன் (பெரியப்பா) திரு. ம. ஹரிராஜ் (ஆசிரியர்) திரு. அ. புண்ணிய மூர்த்தி (சங்கமன் கண்டி பிள்ளையார் ஆலயம், மொட்டையாகல் மலை) ஆகியோர்.

- இந்நூலினை நேர்த்தியாகவும், சிறந்த முறையிலும் வடிவமைத்து அச்சிட்டுத் தந்த கணணி வடிவமைப்பாளர் திருமதி. பழீலா குத்தூஸ் *(Effke.com - Akp)* அவர்களுக்கும் அச்சக உரிமையாளர் மற்றும் ஊழியர்களுக்கும்.

- எனது ஆக்க இலக்கியச் செயற்பாடுகளுக்கு பின்புலமாக விருந்து வரும், எனது அன்பு மனைவி கங்கேஸ்வரி மக்களான வானதி, கவிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர்) பிரசன்னா (ஆசிரியர்) ஆகியோர்.

- எனது எழுத்துப் பணிக்கு பேராதரவு நல்கி வரும் எனது மாபெரும் அன்புக்குரிய வாசகர்களாகிய நீங்கள்!

நன்றி

**நா. நவநாயகமூர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய மட்டக்களப்பு

பண்டைய மட்டக்களப்பு என்பது ஈழத்தின் கிழக்குப் பகுதியில் 1961ஆம் ஆண்டு வரை நிலைத்திருந்த மட்டக்களப்பு மாவட்டமாகும். இப்பண்டைய மட்டக்களப்பு வடக்கே வெருகல் முதல் தெற்கே கூமுனைவரை நீண்டு பரந்திருந்த தற்போதைய அம்பாரை மாவட்டத்தையும் உள்ளடக்கியிருந்த பெரும் பிரதேசமாகும்.

குறிப்பாக வங்காள விரிகுடாவாகிய கீழைக்கட்லுக்கும் மத்திய மலைப் பிரதேசத்தின் இரண்டாம் புவிச்சரிதவியல் தளமாகிய ஊவாக் குன்றுப் பீடத்திற்குமிடையில் நீளஅமையப் பெற்றிருக்கும் பரந்த தட்டையான தாழ் நிலப் பிரதேசமாகும்1 இதே வேளை, பண்டைய மட்டக்களப்பு நகர் என்பது இம் மாவட்டத்தில் ஒல்லாந்தர் காலம் வரை மட்டக்களப்பு ஆட்சிமையங்களிலொன்றாக விளங்கி வந்த சம்மாந்துறை வீரமுனை பகுதிகளை உள்ளடக்கியிருந்த மட்டக்களப்பு நகரையே குறிக்கும் எனலாம்.

வடக்கே வெருகல் தொடக்கம், தெற்கே குமுக்கன் ஓயா வரை நீண்டு பரந்திருந்த பண்டைய மட்டக்களப்பு மாநிலம் பற்றியும் பண்டைய மட்டக்களப்பு என்ற ஆட்சித் தளம்பற்றியும், பின்வரும் வரலாற்று நூல்கள்வாயிலாக நாம் அறிந்து கொள்ளலாம்.


1) மட்டக்களப்புமான்மியம் (1962) பதிப்பாசிரியர் எப்எக்ஸிநடராசா

2) மட்டக்களப்புத் தமிழகம் - பண்டிதர்விசிகந்தையா

3) மட்டக்களப்பு குகன்குலமுற் குகர் வரலாறும், மரபுகளும் - ஞா. சிவசண்முகம் - 2000

4) மொனகிராபி ஒப்பற்றிகலோ (1921) எஸ்.ஓ. கனகரெட்ணம்.

5) குளக்கோட்டன் தரிசனம் (1992) செல்வி. க.தங்கேஸ்வரி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) மகோன் வரலாறு. (1993) செல்வி. க. தங்கேஸ்வரி

7) பண்டைத் தமிழர் பண்பாட்டுக் கோலங்கள் (1996) நா. நவநாயக மூர்த்தி

8) பண்டைய ஈழத்தமிழர் (1998) நா.நவநாயக மூர்த்தி

9) ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் (2002) நா. நவசாயக மூர்த்தி

10) தம்பிலுவில் கண்ணகி வழிபாடு (1999) நா. நவநாயக மூர்த்தி

11) திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு (2014) நா. நவநாயக மூர்த்தி

12) பழந்தமிழர் நடுகற்பண்பாடு (2011) நா.நவநாயக மூர்த்தி

13) மட்டக்களப்பு வரலாறு (2005) வெல்லவூர் கோபால்

14) மட்டக்களப்பு மக்கள் வளமும், வாழ்க்கையும் - கட்டுரைத் தொகுப்பு. எப். எக்ஸிநடராசா

15) மட்டக்களப்பு சைவக் கோயில்கள் பாகம் I, II (1983) பண்தர் V.C கந்தையா

மேலும் பண்டைய மட்டக்களப்பு பற்றி அறிவதற்கு பிறநாட்டவரின் ஆய்வுக்குறிப்புக்கள் போர்த்துக்கேய, ஒல்லாந்தர் கால நூல்கள் அறிக்கைகள் பட்டயங்கள், கல் வெட்டுக்கள் (ஏட்டுபிரதி) வீரமுனைச் செப்பேடு, சீர்பாதவரன் முறைகல்வெட்டு சம்மான்துறை செப்பேடு வீரமுனை கல்வெட்டு என்பனவும் உதவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு நாடு

கி.பி 1946ஆம் ஆண்டு வரை ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் தமிழ்பேசும் மக்களைப் பெரும் பான்மையினராகக் கொண்டிருந்த பண்டைய மட்டக்களப்பு மாநிலம் என்ற நாடுபற்றி முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் இவ்வாறு புகழ்ந்துரைக்கின்றார்.

......... அணிசால் இலங்கையிலே
சீரார் குணதிசையைச் சேர்ந்து வளர்புகழும்
ஏரால் இயன்ற செந்நெல் இன்சுவைத் தீங்கன்னலொடு
தெங்கினிள நீரும் தீம்பலவி னள்ளமிர்தும்
எங்குங் குறையா இயலுடைய நன்னாடு
மட்டக்களப் பென்னும் மாநாடு.
என்று குறிப்பிடுகின்றார் 2

இவ்வாறு யாழ் நூலகத்துப் புகழ்ந்து கூறப் பெறும் இப்பழந்தமிழகம், ஈழ நாட்டில் கீழ்க் கடல் சார்ந்து கிழக்கு மாகாணம் எனும் அரசியல் பிரிவில் அடங்கிக் கிடக்கின்றது. வடக்கே வெருகல் ஆற்றிலிருந்து தெற்கே குமுக்கன் ஆறுவரை ஏறக்குறைய நூற்றி முப்பது மைல் நீண்டு கிழக்கு மேற்காக முறையே ஏறக்குறைய எழுபது மைல் அகன்று கிடக்கின்றது என பண்டிதர் வி.சி கந்தையா குறிப்பிடுகின்றார். 3

1960ஆம் ஆண்டுவரை மட்டக்களப்பு மாவட்டம் என்று கிழக்கிலங்கையில் நிலவியிருந்த இப்பண்டைய மட்டக்களப்பு மாநிலத்தை, மட்டக்களப்பு நாடு, மட்டக்களப்புதேசம், தென்கிழக் கிலங்கை என்றெல்லாம் கல்வெட்டுக்கள் செப்பேடுகள், பழந்தமிழ் கிராமிய இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓடமுமோடி உறுபுகழ் ஓங்க
நீடு புகழ் மட்டக்களப்பின் கரையாய்
வளமிகு வீரமுனை யெனுமிடத்தில்
என்று சீர்பாத வரன் முறைகல் வெட்டு கூறும்.

கண்டி மன்னன் செனரதன் (கி.பி 1604 - 1635) காலத்தைச் சேர்ந்த முப்பத்தேழு வரிகள் கொண்ட வீரமுனைச் செப்பேடு "காடுகாட்டில் மல்வத்தை யூரும் அதற்குச் சேர்ந்த குளம் வெளி காடும் மட்டுக்களப்பு நாடு முழுவதிலும்" (வரிகள் 29 - 31) என்று குறிப்பிடும் இதில் பொறிக்கப்பட்டுள்ள தமிழ் எழுத்துக்கள் பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவைகளாகும். என கலாந்தி இந்திரபாலா குறிப்பீடுகின்றார் 4 கண்டி மன்னன் இரண்டாம் இராஜசிங்கன் (கி.பி 1635 - 1687) காலத்துச் சம்பாந்துறை செப்பேடு (வரிகள் 9-14) றணசூர விக்குறும பிறதாபராகிய ராசசிங்க மகாராசா ஆண்டவர் திருக்கருணை புரிந்து மட்டக்களப்பு தேசத்தில் சம்பாந்துறைக் கடுத்த என்று கூறும் இச்சாசன எழுத்தும் பதினாறாம் பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் எழுத்தாகும். 5

பண்டைய வரலாற்றில் தென்கிழக்கிலங்கை என்பது பண்டைய மட்டக்களப்பு மாவட்டத்தையே குறிக்கும் சீர்பூத்த தென்கிழக்கிலங்கை மேவும் திகழ்வுறுசிங்கார்புர நகரில் வாழும் என்று மாரியம்மன் ஊஞ்சல் (பாடல் I : வரி 1 - 2) இலக்கியம் குறிப்பிடும் இதே வேளை தென்னிலங்காபுரி என்றும் பண்டைய மட்டக்களப்பை மரபுரைகள் கூறும் "மாரியம்" மன் வீதியுலா என்ற கிராமிய இலக்கியம் "தென்னிலங்காபுரி வந்தாள் (பாடல் 19 : வரி 3) என்று குறிப்பிடுவதையும் நோக்கலாம். 5A

இத்துணை சிறப்புக்கள் கொண்ட பண்டைய மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைகள் சில காலங்களில் அரசியல் காரணங்களினால் மாறி வந்துள்ள போதிலும், வடக்கே வெருகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கையிலிருந்து தெற்கே குமுக்கன் ஆறுவரையுள்ள பிரதேசம் மட்டக்களப்பு நாடு எனக் கணிக்கப்படுகின்றது.

தொல்லியல் ஆணையாளர் எஸ். பரணவிதான அவர்கள் 1970ஆம் ஆண்டு வெளியிட்ட Inseriptions of Ceylon என்னும் தொல் பொருளியல் திணைக்கள வெளியீட்டு நூலில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதேசங்களை வெருகல் முதல் பாணகை வரையுள்ள இடங்களாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலில், மட்டக்களப்பில் பிராமிக்கல் வெட்டுக்கள் காணும் இடங்களாகப் பின்வரும் இடங்களைக் குறிப்பிடு கின்றார். கோறளைப் பற்று (வாழைச்சேனை) ஏறாவூர்பற்று (ஏறாவூர்) விந்தனைப்பற்று (விந்தனை) மண்முனைப்பற்று (மண்முனை) வேவகம்பற்று (தமண) சம்மாந்துறைப்பற்று, பாணமை பற்று, அக்கரைபற்று என்பன அவையாகும். 6 ஆதலால் பூர்வீக மட்டக்களப்பு என்று குறிப்பிடுமிடத்து வடக்கே வெருகல் ஆறுமுதல் தெற்கே குமுக்கன் ஓயா வரையிலான பிரதேசமே என்பது தெரியவரும்.

பண்டைய மட்டக்களப்பு மாநிலமானது சிலகாலங்களில் வடக்கே வெருகல் ஆறுதொடக்கம் தெற்கே கதிர்காமம் மாணிக்க கங்கை வரை வியாபித்திருந்தது இதனை பல்வேறு சான்றுகள் உணர்த்தும் கி.பி முதலாம் நூற்றாண்டில் மட்டக்களப்பு அரசின் தெற்கெல்லையாக மாணிக்க கங்கை குறிப்பிடப்படுகின்றது. 7 கி.பி பதிமூன்றாம் நூற்றாண்டுக் குரித்தான (மாகோன் காலம்) குளக்கோட்டன் கல்வெட்டு பாடலில் (வரிகள் 1 - 3) அவனால் மானியங்கள் வழங்கப்பட்ட பண்டைய மட்டக்களப்பு பிரதேச ஆலயங்களுள் மாணிக்க கங்கை என்று கதிர்காமம் குறிப்பிடப்படுகின்றது. 8

சோழர் ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பின் ஆட்சிப் பிரதிநிதி ஒருவன் கட்டகாமத்திலிருந்ததாக வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம் வரை பதவி வகித்த மட்டக்களப்பு வன்னியர்களின், தங்குமிடமாகவும் சுற்றுலா வாசஸ்தலமாகவும் கட்டகாமம் வன்னியர் வீடு விளங்கியமை அறியப்பட்டதாகும்,9

## மட்டக்களப்பு நாடு

### கி.மு 2ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 1960ஆம் ஆண்டு வரை

கி.மு இரண்டாம் நூற்றாண்டில் தமிழ் மன்னன் கூத்திகனால் (கி.மு177 - 155) தோற்றுவிக்கப்பட்ட மட்டக்களப்பு ஆட்சித் தளமானது இன்றைய சம்மாந்துறைப் பிரதேசத்தில் அமைந்திருந்தது. இதற்குச் சான்றாக மட்டக்களப்புதரவை என்ற இடப் பெயரைக் கொள்ளலாம். அனுரதபுரியில் ஆட்சிபுரிந்த சேனன் கூத்திகன் என்போர் கலிங்க குலத்துத் தமிழ் மன்னர்களாவர் மட்டக்களப்பில் தமிழருக்கெனத் தனியார் சொன்றைத் தோற்றுவித்த கலிங்கர் இங்கு சிறப்பாக தமிழ்க் கலாசாரத்தைப் பேணுவதே தம் கடமைகளாகக் கொண்டிருந்தனர்.[10]

பண்டைய ஈழ வரலாற்றில் கலிங்கர் என்பது தமிழ்ச்சை வரையே குறிப்பதாகும். மட்டக்களப்பு இராஜதானியை உருவாக்கிய கலிங்கரும் அவர்கள் ஆண்ட நாகர் பாண்டியர், வேடர் என்ற குடிமக்களும் பேசிய மொழி தமிழ் என்பதேயாகும், இதே வேளை இக்காலத்தில் மட்டக்களப்பில் சிறு தொகையினராக வாழ்ந்திருந்த இயக்கர் என்ற விராவிடக் குடியினர் பேசிய மொழி எலு என்ற கொச்சைத் தமிழாகும். கி.மு இரண்டாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை மட்டக்களப்பு மாநிலத்தில் ஆட்சி புரிந்து வந்த மன்னர்கள் பற்றிய விபரங்கள், மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் என்ற மட்டக்களப்பு மான்மியம் என்ற வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மன்னர்கள் இக்காலகட்டத்தில் (கி.மு 2ஆம் நூற்றாண்டு கி.பி 12ஆம் நூற்றாண்டு) மட்டக்களப்பு நகரையும் (சம்மாந்துறை வீரமுனை பிரதேசம்) நாகர்முனை (சங்குமன் கண்டி) உன்னரசுகிரி (உகந்தைப் பிரதேசம்) மண்முனை ஆகிய பெருநகரங்களைத்தங்கள் தலை நகரங்களாகக் கொண்டு பண்டைய மட்டக்களப்பை ஆட்சி புரிந்து வந்துள்ளனர். இப்பண்டைய மட்டகளப்பையே தென்கிழக்கிலங்கை என்று வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன.

அக்காலத்தில் பண்டைய உரோகணத்தின் வடக்கு, கிழக்குப் பகுதியான தென்கிழக்கிலங்கை மட்டக்களப்பு என்ற பெயருடன் விளங்கி வந்தது எனலாம். தென் கிழக்கிலங்கை தென்னிலங்கை ஆகியனவற்றை உள்ளடக்கியிருந்த பெரும் பிரதேசத்தையே பண்டைய ஈழவரலாற்று நூல்கள் உறுகுணை உரோகண மண்டலம் என்றெல்லாம் குறிப்பிடுகின்றன.

கி.மு இரண்டாம் நூற்றாண்டில் சூத்திகன் (கி.மு177-155) காலம் தொடக்கம் கி.பி பதிமூன்றாம் நூற்றாண்டு வரையும் (கி.பி 1215) உரோகண மண்டலத்தின் வடக்கு கிழக்கு பகுதியான மட்டக்களப்பில் ஆட்சி செலுத்தி வந்த சிற்றரசர்கள் சில காலங்களில் சிங்கள மன்னர்களின் மேலாதிகத்தை ஏற்றும் சிலகாலங்களில் சுதந்திர முள்ளவர்களாகவும் ஆட்சி புரிந்து வந்துள்ளனர். இச் சிற்றரசர்களைச் 'சூளவம்சம் போன்ற வரலாற்று நூல்கள் உறுகுணை ஆட்சித் தலைவர்கள் என்று குறிக்கின்றன."[11]

கி.பி பதிமூன்றாம் நூற்றாண்டில் (கி.பி. 1215) கலிங்க மாகன் இலங்கை மீது மேற்கொண்ட மதரீதியான படையெடுப்பின் காரணமாக இலங்கைச் சமூகசமய அரசியல் நிலைகளில் பெரும் மாற்றம் நிகழ்ந்தது கி.பி 1246இல் மாகோன் பொலநறுவையிலிருந்து பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கிய போதும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து தமிழ் மன்னனான மாகனின் அரசியல் செல்வாக்கு நிலைத்திருந்ததுடன் இப்பிராந்தியங்களில் தமிழர்களே தனிப் பெரும்பான்மையினராக வாழ்ந்திருந்தனர். இவ்வேளையில் கிழக்கிலங்கையின் மட்டக்களப்பில், மாகோன் தனது படைத் தளபதிகளுக்கு நிலங்களை வழங்கிச் சிற்றரசுகளைத் தோற்று வித்தான்.

இக்காலத்தில், மட்டக்களப்பில் பளுகாமம் சம்மாந்துறை பாணகை ஆகிய வன்னிச் சிற்றரசுகள் அமைந்திருந்தன இதற்குப் பிற்பட்ட காலத்தில் சிங்கார்புரி சம்மாந்துறை, பளுகாமம் ஏறாவூர் பாணகை ஆகிய வன்னிமைப் பிரிவுகள் உருவாகி நிலவியிருந்தன தமிழ் மன்னனான மாகன் தளபதிகளுக்கு வன்னியர் என்ற பட்டம் வழங்கித் தோற்றுவிக்கப்பட்ட வன்னிச் சிற்றரசுகள் கி.பி 1604ஆம் ஆண்டு வரை சுதந்திரமுள்ள சிற்றரசுகளாக மட்டக்களப்பு மாநிலத்தில் நிலவி வந்தன.

கி.பி 1604இல் விமல தரும சூரியன் காலம் தொடக்கம் மட்டக்களப்பு பிராந்தியம், கண்டி மன்னரின் மேலாதிக்கத்தைப் பெயரளவில் ஏற்றிருந்த போதும். மட்டக்களப்பில் ஆட்சி செலுத்தி வந்த வன்னியர் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே செயற்பட்டு வந்தனர் இதேவேளை, போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் என்போர் வன்னியர்கள் மீது தங்கள் மேலாதிக்கத்தை செலுத்தி வந்த போதும் இவர்கள் மீது தங்கள் முழுமையான அரசியல் ஆதிக்கத்தை (மேலாதிக்கம்) செலுத்த முடியாத நிலையே இருந்து வந்தது இது வரலாற்றுண்மையாகும்.

கி.பி 1766இல் கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீஇராஜசிங்கனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாரம் மட்டக்களப்பு கரை நிலங்கள் ஒல்லாந்தருக்கு உரித்தானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது கி.பி 1798 வரை ஒல்லாந்த அரசின் ஆளுநர்களாக மட்டக்களப்பின் வட பகுதிக்கு திரு அறுமக் குட்டி போடி என்பவரும் தென் பகுதிக்கு திரு. கந்தப்போடி என்பவரும் ஒல்லாந்த அரசால் நியமனம் பெற்றிருந்தனர். இவ்வேளை மட்டக்களப்பில் எட்டு வன்னிச் சிற்றாட்சிப் பிரிவுகள் நிலைத்திருந்தன.

அவை பின்வருமாறு.

1) பாணகைபற்று
2) அக்கரைப்பற்று
3) மண்முனைப்பற்று
4) எருவில்பற்று
5) போரதீவுபற்று
6) கரவாகுபற்று
7) மட்டக்களப்பு
8) கோறளைபற்று

இவை வன்னியர்களது ஆட்சியிலிருந்து போதும் வன்னியர்கள் ஒல்லாந்தரது மேலாதிக்கத்தை ஏற்ற சிற்றசர்களாக விளங்கியிருந்தனர். ஆயினும் மட்டக்களப்பில் வன்னியர்களது செல்வாக்கே நிலவி யிருந்தது ஒல்லாந்த ஆளுநர்களான போடிகளான தமிழர்களுக்கும், வன்னியர்களுக்குமிடையில் இருந்து வந்த நெருக்கமான உறவுகளும் இவர்கள் கண்டி மன்னனுடன் கொண்டிருந்த நெருக்கம் இதற்கான காரணிகள் எனலாம் இக்காலத்தில் மட்டக்களப்பில் சிங்கள மக்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக விருந்தது.

கி.பி 1795 மட்டக்களப்பை ஆங்கிலேயர் கைப்பற்றி 1802இல் தங்கள் முழுமையான ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர் இவர்கள் தங்கள் நிர்வாக வசதிக்காக பதிமூன்று உபபிரிவுகளை உருவாக்கியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை பின்வருமாறு அமைந்திருந்தன.

1) கோறளைபற்று
2) ஏறாவூர்பற்று
3) எருவிலப்பற்று
4) கரவாகுப்பற்று
5) நாடுகாட்டுபற்று (வனப்பகுதி)
6) நிந்தவூர்பற்று
7) விந்தனைபற்று
8) உறூகம்பற்று
9) மண்முனைப்பற்று
10) போரதீவுபற்று
11) சம்மாந்துறைப்பற்று
12) அக்கரைப்பற்று
13) பாணமைப்பற்று

கி.பி. 1827இல் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 32690பேர் வாழ்ந்திருந்தனர் இவர்களில் தமிழர்கள் 21850 பேர் முஸ்லீம்கள் 8228பேர் ஐரோப்பியர், ஒல்லாந்தர் உள்ளிட்டோர் 586பேர் சிங்களவர் 2026பேர்கள் என அடங்குவர். இவ்வேளை பதியத்தலாவை, தெகியத்த கண்டி பிரதேசங்கள் மட்டக்களப்புடன் இணைக்கப்பட்டிருந்துடன் "விந்தனைபற்று" என்ற பெயருடன் விளங்கியிருந்தது.

கி.பி 1833இல் கோல்புறூக் - கமரன் சிபார்சுகள் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டு இலங்கை முழுவதும் ஒற்றை ஆட்சியின் கீழ் நிலவியிருந்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்வரும் நிர்வாக ஆட்சிப் பிரிவுகள் (வரையறுக்கப்பட்ட மாகாண அலகுகள்) அமைந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) மண்முனைப் பற்று

2) போரதீவு பற்று

3) எருவில் பற்று

4) கரவாகுப் பற்று

5) சம்மாந்துறைப் பற்று

6) நாடுகாட்டு பற்று (வனப்பகுதி)

7) அக்கரைப்பற்று

8) பாணமைப் பற்று

9) ஏறாவூர் பற்று

10) கோறளைப் பற்று

(THE CEYLON GAZETTEER Page 19 SIMON CASIE CHITTY MODALIAR - 1984) ஆங்கிலேயர் பரம்பரை வன்னியர் என்ற (வன்னிச் சிற்றரசர்) பதவிக்குப் பதிலாக சம்பளம் பெறும் வன்னியன் என்ற நிர்வாகத் தலைமை உத்தியோகத்தர்களை நியமித்து ஆட்சி புரிந்து வந்தனர். இவ்வாறு ஆங்கிலேயர் ஆட்சியில் 1854ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் மட்டக்களப்பில் தலைமைப் பதவிகளில் தமிழர்களே நியமனம் பெற்று வந்துள்ளனர். கி.பி 1870இல் மட்டக்களப்பு ஏழு பற்றுகளாக பிரிக்கப்பட்டது.

கி.பி 1907இல் மட்டக்களப்பு மாவட்டம் ஒன்பது பற்றுக்களாக அதாவது நிர்வாக ஆட்சி அலகுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றில் எட்டுப் பற்றுக்கள் வன்னிமைப் பற்றுக்களாக விருந்தன. சம்பளம் பெறும் வன்னிமை எட்டுப்பேர் இப்பற்றுக்களின் உயர் அதிகாரிகளாக நியமனம் பெற்றிருந்தனர். ஒரு பற்றுக்கு "றட்டமாத்தையா" என்ற உத்தியோகத்தர் நியமனம் பெற்றிருந்தார். 1907இல் நிலவியிருந்த வன்னிமைப் பிரிவுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) மண்முனை வடக்கு
2) மண்முனை தெற்கு
3) எருவில் போரதீவு
4) கரவாகு நிந்தவூர்பற்று
5) சம்மாந்துறை நடுக்காடு பற்று
6) அக்கரைப்பற்று
7) பாணமைப்பற்று
8) ஏறாவூர் றூகம் அன்கோறளை
9) விந்தனைப்பற்று

(MONOGRAPH Batticaloa District - S.O. CANAGARATNAM. page- 78-1921

கி.பி 1946ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மை யினராகக் கொண்ட பிராந்தியமாக விளங்கியிருந்தது இவ்வேளை சுமார் ஏழாயிரம் (6998) சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டம் 20, 2987 சனத் தொகையினைக் கொண்டிருந்தது மேலும் இக்கால மட்டக்களப்பானது பின்வரும் வரையறுக்கப்பட்ட மாகாணப் பிரிவுகளைக் கொண்டிருந்தது. இவ்வாறு அமைந்த நிர்வாக அலகுகள் பின்வருமாறு.

1) மண்முனை வடக்கு
2) ஏறாவூர் கோறளைபற்று
3) மண்முனை எருவில் போரதீவு
4) கரவாகுப் பற்று
5) சம்மாந்துறை பற்று
6) அக்கரைப்பற்று
7) பாணகைப்பற்று
8) வேகம் பற்று
9) விந்தனைபற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை பழைய நாடுகாடுபற்று (நடுக்காடு) 1910க்கும் 1930ஆம் ஆண்டுக்கு மிடைப்பட்ட காலப்பகுதியில் வேகம்பற்று எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது மேலும் 1947இல் மீளவரையப்பட்ட எல்லைக் கோடுகளின் படி விந்தனைப்பற்றின் பெரும் பகுதி ஊவா மாகாணத்துடன் இணைக்கப்பட்டது இதே வேளை கல்லோயா ஆற்றின் சமவெளியின் ஒரு பகுதியும் மாத்தளை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது.

ஆங்கிலேயரிடமிருந்து இலங்கை ஆட்சிகைமாறும் காலத்தில் (1947 இல்) மட்டக்களப்பை நிர்வாகிப்பவர்களாக பின்வருவோர் விளங்கியிருந்தனர் மட்டக்களப்பு தென் பகுதிக்கு அரசாங்க சபை அங்கத்தவராக திரு. தருமரெத்தினம் அவர்களும் வடபகுதிக்கு திரு. நல்லையா அவர்களும் பதவி வகித்தனர். சுதந்திர இலங்கையில் திரு. வி. நல்லையா திரு. எஸ்.யு எதிர்மன்ன சிங்கம் எம். எஸ் காரியப்பர் ஆகியோர் மட்டகளப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களாக அமைகின்றனர்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் 1952இல் பட்டிப்பளை ஆற்றை மையப்படுத்தி அணை ஒன்றைக் கட்டிய பின்னர் கல்லோயா குடியேற்றத் திட்டம் உருவானது 1960ஆம் ஆண்டுவரை பெருமளவு சிங்கள மக்கள் தென் பகுதிகளிலிருந்து அழைத்து வரப்பட்டு அணையைத்தொட்ட பாசனப்பிரதேசங்களில் குடியேற்றப்பட்டனர் இதனைத் தொடர்ந்து பண்டைய மட்டக்களப்பிலிருந்து பெருமளவு நிலப்பரப்பு (தென்பிரதேசம்) பிரிக்கப்பட்டு 1961 இல் அம்பாரை மாவட்டம் உருவாக்கப்பட்டது (வெல்லவூர்கோபால் - 2005) என்பது வரலாற்றுப் பதிவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டைய மட்டக்களப்பு நகர்

தென் கிழக்கிலங்கையில் தமிழருக்கெனத் தனியரசொன்றைத் தோற்றுவித்த கலிங்க குலத்து மன்னன் கூத்திகனே மட்டக்களப்பு நகரையும் நிர்மாணித்து இந்நகரைச் சேர்ந்த பகுதிகளையும் அபிவிருத்தி செய்து இப்பகுதிகளில் தமிழ்க் குடிகளையும் பெருமளவில் குடியேற்றினான். கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் அனுராதபுரியில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னன் கூத்திகனால் (கி.மு 177 - 155) தோற்றுவிக்கப்பட்டு நிலவி வந்த மட்டக்களப்பு நகர் இன்றைய வீரமுனை உள்ளிட்ட சம்மாந்துறை பிரதேசமாகும்.

இப்பண்டைய மட்டக்களப்பு நகர் தோற்றம் பற்றி மட்டக்களப்பு மான்மியம் என்ற மட்டக்களப்பு பூர்வசரித்திரம் மற்றும் பண்டைத்தமிழர் பண்பாட்டுக் கோலங்கள் (பக் 1-5) போன்ற நூல்கள் விபரமாகக் குறிப்பிடுகின்றன. இப்பண்டைய மட்டக்களப்பு நகர் பற்றி கி.பி பதினைந்தாம் நூற்றாண்டில் உருவான கண்ணகி வழக்குரை இலக்கியம் குறிப்பிடும் 12 மேலும், கிராமிய இலக்கியங்களான கடனாச்சியம் மன்காவியம் (கார்வாழி மட்டுக்களப்பு நகர் வாழி) கடல் நாச்சிமார் பள்ளு (மட்டக்களப்பு நகர் வாழி அங்கே) என்பனவும் இந்நகர் பற்றிக் கூறுகின்றன.

பழந்தமிழ்க் கிராமிய இலக்கியங்களான திரௌபதி அம்மன் காவியம் (நீதிசெறி மட்டுக்களப்பு நகர் வாழி) (பாடல் 33 : வரி 7) ஐயனார் காவியம் (தார்வாழி மட்டுக்களப்பு நகர் தழையவரு பாடல் 14:வரி7) வதனமார் ஊர் சுற்றும் காவியம் (அருள் பெருகு மட்டுக்களப்பு நகர் வாழி பாடல் 11 : வரி 6) வதனமார் தேன்வெட்டும் காவியம், (பாடல் 15 : வரி 6) ஆகியன புகழ்ந்துரைக்கும் மட்டுக்களப்பு நகர் என்பதும் வாவியின் தென்பிரதேசமான பண்டைய மட்டக்களப்பு நகரினையேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுராதபுரிமன்னன் சோரநாகன் (கி.மு3 - கி.பி9) என்பவனது ஆட்சிக் காலம் தொடக்கம் கலிங்குலத்துத் தமிழ்ச் சிற்றரசர்கள் மட்டக்களப்பு நகரைத் தலை நகராகக் கொண்டு தென் கிழக்கிலங்கையை ஆட்சி புரிந்து வந்துள்ளனர். கி.பி ஆறு, ஏழு, எட்டாம் நூற்றாண்டுகளில் இலங்கை உள்நாட்டுப் போர்களினாலும் அரசியல் நெருக்கடிகளினாலும் அல்லல் பட்டிருந்தது இதனை வரலாற்று நூல்கள் தெளிவுறுத்துகின்றன 13 இக்காலகட்டத்தில் மட்டக்களப்பு நகரமும் இந்நகரரைச் சேர்ந்த பகுதிகளும் செழிப்புற்றிருந்தன. இதனை வரலாற்றாய்வுகள் தெளிவுறத்தும்.

கி.பி எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் இலங்கை பாண்டிய நாட்டுடன் நெருங்கிய அரசியல் சமய, கலாசார தொடர்புகள் கொண்டிருந்தது. இக்காலத்தில் இந்நகரத்துக்கும் பாண்டிய நாட்டுக்குமிடையில் நெருக்கமான சமய கலாசாரத் தொடர்புகள் இருந்து வந்ததும் வரலாற்றுண்மையாகும். கி.பி பத்தாம், பதினாராம் நூற்றாண்டுகளில் இலங்கையில் சோழரது ஆட்சி நிலவியிருந்த வேளையிலும் கி.பி 13ஆம் நூற்றாண்டில் கலிங்க குலத்து மாகோன் ஆட்சிக் காலத்திலும் தென்கிழக்கிலங்கையில் முக்கிய நகரங்களி லொன்றாக இப்பண்டைய மட்டக்களப்பு நகரம் விளங்கியிருந்தது.

கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டுவரை (கி.பி1455) இந்நிலை நீடித்திருந்தது 14 கி.பி பதினேழாம் நூற்றாண்டு ஒல்லாந்தர் காலம் வரையும் வாவியின் தென் எல்லைப் பகுதியே மட்டக்களப்பு என்ற பெயரைப் பெற்றிருந்தது ஒல்லாந்தர் கிழக்கிலங்கையைக் கைப்பற்றிக் கோட்டையொன்று கட்டுவதற்கு பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்து அந்த இடத்தில் கோட்டையொன்றை நிர்மாணித்தனர்.

அன்று தொடக்கம் வாவியின் வடபகுதி மட்டக்களப்பு என்ற பெயரைப் பெற்றது. ஆயினும் தென்கிழக்கிலங்கையில் நிலைத்து நிற்கும் சைவாலயங்களின் வரலாற்றுடன் இப்பண்டைய மட்டக்களப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரின் வரலாறும் பின்னிப்பிணைந்துள்ளது. (நா. நவநாயக மூர்த்தி - 1996) குறிப்பாக மட்டக்களப்பின் தென்பகுதியில் ஒல்லாந்தர் காலத்திலும் (18ஆம்) அதனைத் தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் காலத்திலும் தோன்றிய சில கிராமிய பக்தி இலக்கியங்கள் குறிப்பிடும் மட்டுக்களப்பு நகர் என்பது வாவியின் தென் எல்லைப் பகுதியான பண்டைய மட்டக்களப்பு நகரினையே யாகும்.

இதேவேளை ஒல்லாந்தர் காலத்தில் வாவிக்கு வடக்கே உருவான புதியமட்டக்களப்பு இன்று கோட்டைமுனை, புளியத்தீவு, ஆனைப்பந்தி தாண்டவன்வெளி, சிங்களவாடி, தாமரைக்கேணி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பெரு நகராக விளங்குகின்றது.

**குறிப்புக்கள்**

1) "மட்டக்களப்பு மாநிலத்தின் பழைய புவியியல் வரலாறும் இடப்பெயர்களும்
கட்டுரை திரு.க.கணபதிப்பிள்ளை மட்டக்களப்பு மக்கள் வளமும், வாழ்க்கையும் பக்கம் 27 தொகுப்பாசிரியர் எப் எக்ஸி நடராசா.

2) விபுலானந்த தரிசனம் - பக்கம் 2 வ. சிவசுப்பிரமணியம் - 1993

3) மட்டக்களப்பு தமிழகம் - பக்கம் 2 பண்டிதர் வி.சி. கந்தையா

4) கிழக்கிலங்கைச் சாசனங்கள் - கட்டுரை கா. இந்திர பாலா

5) கிழக்கிலங்கைச் சாசனங்கள் - கட்டுரை கா. இந்திரபாலா 'சிந்தனை' மலர் 2 இதழ் 2, 3 யூலை ஒட்டோபர் - 1968

5A) தமிழகக் குறிப்புக்களில் மட்டக்களப்பு பிரதேசம் தென்னிலங்காபுரி எனக்குறிப்பிடுவதை காணலாம் (வெல்லவூர் சோபால் - 2005)

6) கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு
பக்கம் 74 செல்வி க. தங்கேஸ்வரி - 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) மட்டக்களப்பு மான்மியம்
பக்கம் 23, 24, பதிப்பாசிரியர் எப். எக்ஸி நடராசா - 1962

8) "சீர்பெறுமிலங்கை நகர் வாழ்வுபெறு
செல்வமும் சிவனேச மிகு சமயமும்
செப்புதற் கரிதான மாணிக்கமுறு கெங்கையும்
(கல்வெட்டுப் பாடல், ஏட்டுச் சுவடியில் உள்ளபடி)

- இக்கல்வெட்டுப் பாடலில் குளக்கோட்டனது திருப்பணியினைப் பெற்ற ஏழு கோயில்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுளளன.

9) மட்டக்களப்பு வரலாறு - ஓர் அறிமுகம் - பக்கம் 15, 16 வெல்லவூர் கோபால் 2005

10) மன்னன் கூத்திகனே (கி.மு 177 - 155) முதன் முதலில் தென் கிழக்கிலங்கையில் கலிங்கர் சுயராச்சியம் எனக் கலிங்கருக்கு ஒரு அரசினை உருவாக்கியவன் ஆவான் (மட்டக்களப்பு மான்மியம் - ஓர் ஆராய்ச்சி பக்கம் 61, 65 திருமதி தனபாக்கியம் குணபால சிங்கம். - 1993)

11) திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு
பக்கம் 91, நா. நவநாயக மூர்த்தி - 2014

12) "பன்றித்தீவு, சல்லித்தீவு, பாலமுனை, பாசிக்குடா
என்றெக் காலமும் வழங்கும் ஏறாவூர் கடந்து
தென்றெப்போ புளியன் துறை சேரப் புறப்பட்டோடி
மன்ற லொத்த தொடைமார்பர் மட்டக்களப்பில் விட்டார்.
(கண்ணகி வழக்குரை, துரியோட்டு காதைபாடல் 151)

13) இந்திய வரலாறு - பக்கம் 463, 464 ஆர். சத்திய நாதய்யர், வரலாற்று விரிவுரையாளர். டி. பாலசுப்பிரமணியம் - 1958

14) பண்டைத் தமிழர் பண்பாட்டுக் கோலங்கள்
பக்கம் 4 நா. நவநாயக மூர்த்தி - 1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாவம்சம் கூறும் ஏரகாவில் என்ற சங்கமன் கண்டி இறக்காவில்

கி.பி மூன்றாம் நூற்றாண்டில் அனுராதபுரியில் ஆட்சிபுரிந்த மகாசேனன் (கி.பி 275 - 301) உரோகண நாட்டில் ஏரகாவில்ல என்ற ஊரில் நெடுங்காலம் தொட்டு சிறப்புடன் விளங்கி வந்த புகழ் பெற்ற சிவாலயத்தை அழித்து இந்த இடத்தில் விகாரையொன்றை நிர்மாணித்தான் இதனை வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. இவன் கோகர்ண ஏராகாவில் கலந்தனின் ஊர் (கலந்தகம) ஆகிய இடங்களிலிருந்த பிராமணத் தெய்வங்களின், கோயில்களை அழித்து, அவ்விடங்களில் மூன்று விகாரைகளைக் கட்டினான் என மகாசம்சம் (M.V37 : 40 - 41) கூறுகின்றது.

இதனை சற்று விரிவாக மகாவம்சத்தின் உரை நூலாகிய மகாவம்சதீக எடுத்துரைக்கின்றது (MALALASKKARA. GP - 1935) அதாவது, இம் மூன்று இடங்களிலும் முன்பு இந்துக் கடவுளின் வசிப்பிடங்கள் (ஆலயங்கள்) கட்டப்பட்டிருந்தன. இவை, புத்த சாசனத்திற்குத் தடையாக விருந்தன. கிழக்குக்கடற்கரையில் கோகர்ண விகாரை கட்டப்பட்டது. மற்றைய இரண்டு விகாரங்களும் ரோகணத்தில் கட்டப்பட்டன. 1 மகாசேனனால் தரைமட்டமாக்கப்பட்ட ஆலயங்கள் யாவும் சிவலிங்கக் கோயில்களாகும்.

ஜெட்டதீசன் மரணமானதும், இவனது இளைய சகோதரனான மகாசேனன் (கி.பி 275-301) அனுரதபுரி மன்னனானான் ஜெட்டதீசன் இறந்த செய்தி கேட்டு மகாசேனனின் குருவன சங்கமித்ததேரர் இலங்கைக்கு வந்து மகாசேனனின் முடி சூட்டு விழாவை நடாத்தி வைத்தார். இவர் மகாசேனனுக்கும் அவனது தமையன் ஜெட்டதீசனுக்கும் இளம் வயதில் ஆசிரியராகவிருந்தவர் மகாயான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவைச் சேர்ந்தவரான இவர் மகாவிகாரையின் நடவடிக்கைகளை சிதைப்பதற்கான காரியங்களை மேற்கொண்டார் இவ்வாறு மகாவம்சம் குறிப்பிடும்.

மகாயான பிரிவைச் சேர்ந்த சங்கமித்த தேரரின் போதனைகளால் கவரப்பெற்ற மகாசேனன் தேரவாதப் பிரிவினரான மகாவிகாரைப் பிக்குகளை ஆதரிக்காது விட்டதோடு குடிமக்களும் இவர்களை ஆதரிக்கக் கூடாதெனக் கட்டளையிட்டான் மகாவிகாரைப் பிக்குகள் அனுராதபுரத்தை விட்டு மலை நாட்டுக்கும் உறுகுணைக்கும் சென்றனர்.

இதன்பின்னர் "லோவமகாபாயா" என்ற கட்டிடமும் மகாவிகா ரைக்குச் சொந்தமான ஏனையகட்டிடங்களும் தரைமட்டமாக்கப்பட்டன. இக் கட்டிடங்களின் தளபாடங்களைக் கொண்டு மகாசேனன் அபயகிரி விகாரத்தில் சில கட்டிடங்களைக் கட்டு வித்தான். 2மகாயான பௌத்தர்களின் பிரச்சாரங்களினால் கவரப்பெற்ற மகாசேனன் மகாவிகாரையைச் சேர்ந்த சங்கத்தாரோடு பகைமை கொண்டு அவர்களின் பீடங்களைச் சீர்குலையச் செய்தது போன்று சைவசமயத்தின் மீதும் பகைமை கொண்டு சிவாலயங்களை இடித்தான் இவற்றிலொன்று கோகர்ணமான திருகோணமலை கோயிலாகும் இன்னொரு சிவாலயம் எரகாவில்ல என்னு மிடத்தில் இருந்த தென்று சொல்லப்படுகின்றது. 3

இவ்வாலயம், கிழக்குக் கடற்கரையில் உறுகுணைப் பகுதியில் 'எரகாவில் என்ற இறக்காவில (ல்) என் னுமிடத்தில் அக்காலத்தில் சிறப்புடன் விளங்கியிருந்த சிவாலயமாகும். இதேபோன்று உறுகுணையில் கலந்தன் ஊர் (கலந்தகம) என்ற இடத்தில் சிறப்புடன் விளங்கியிருந்த சிவாலயமும் மகாசேனனால் அழிக்கப்பட்டு இந்த இடத்தில் விகாரையொன்றும் நிர்மாணிக்கப்பட்டது பொத்துவிலில் இருந்து பாணமை நோக்கிச் செல்லும் வீதியில் சுமார்பத்து கிலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீற்றர் தொலைவில் உள்ள சாத்திரவெளி என்னுமிடத்திற்கு அண்மித்ததாக பிராமணகமாஈஸ்வரன் கோயில் அமைந்திருந்ததாக நம்பப்படுகின்றது. 4 இப்பகுதியே கலந்தன் ஊர் (கலந்தகாமம்) என்ற பெயருடன் மகாசேனன் காலத்தில் விளங்கியிருந்தது.

இதேவேளை மகாவம்சம் கூறும் ஏரகாவில்ல(ல்) என்ற இடம் சங்கமன் கண்டிக்குத் தென்கிழக்காக அமைந்துள்ள பரந்த பள்ளப் பிரதேசமான பண்டைய இறக்காவில் என்பதாகும் கோமாரிக்கும் சங்கமன் கண்டிக்குமிடையில் அமைந்துள்ள இப்பிரதேசம் இன்று பல இடங்களை உள்ளடக்கியுள்ளதாகக் காணப்படுகின்றது. மேலும் அண்மைக் காலமாகப் பல்துறைகளிலும் துரிதகதியில் வளர்ச்சியுற்று வரும் பிரதேசமாகவும் காணப்படுகின்றது.

கி.மு. நாலாம் நூற்றாண்டளவில் சங்கமன் கண்டி நகருக்குத் தெற்கே இயற்கையாக அமைந்திருந்த பரந்த நீர் நிலையை (குளம்) சூழவுள்ள இடங்களில் பாண்டியர் குலத்துத் தமிழ் மக்கள் குடியேறி இறக்காவில் கிராமத்தைத் தோற்றுவித்தனர் 4Aவில் என்பது தூயதமிழ்ச் சொல்லாகும். இது குளம் அல்லது தேங்கி நிற்கும் நீர்நிலையைக் குறிப்பதாகும். ஆதலால் இறக்கா என்ற இடப் பெயரும் குளம் அல்லது நீர் நிலையைக்குறிக்கும் வில் என்ற பதமும் இணைந்தே இப்பிரதேசம் இறக்காவில் எனப் பெயர் வழங்கி வந்தது. பிற்காலத்தில் றக்காவில்ல என்றும் றக்கா என்றும் குறிக்கப்பட்டு வந்துள்ளது. இதனை சூளவம்சமும் (அத்தியாயம் 3வது) உறுதிசெய்யும்.

கி.பி ஏழாம் நூற்றாண்டில் உறுகுணையிலிருந்து படை திரட்டி அனுராதபுரியில் அரசு புரிந்த மொகல்லானன் என்பவன் "சாகாமம்" நகரில் விகாரை யொன்றை நிர்மாணித்ததுடன் சங்கமன் கண்டி றக்காவிகாரைக்கு சேத்திய மனை என்பன நிர்மாணித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்துள்ளான்5 என சூளவம்சம் குறிப்பிடுகின்றது. இதேவேளை தூய தமிழ்ப் பெயரான இறக்காவில் என்பதையே மகாவம்சம் ஏரகாவில எனக்குறிப்பிடுகின்றது. இது இறக்காவில் என்பதின் பாளி வடிவமாக விருக்கலாம் என எண்ணத்தோன்றுகின்றது. ஏரகாவில்ல என்ற பெயர் பாளிவடிவம் போல் தெரிகின்றது என்று பேராசிரியர் சி. பத்மசாதன் அவர்கள் குறிப்பிடுவதையும் நோக்கலாம். 6

கி.பி பதிமூன்றாம் நூற்றாண்டு வரை நாகரீகம் நிலவியிருந்த பண்டைய "இறக்காவில்" பிற்காலத்தில் இங்கு வாழ்ந்திருந்த மக்கள் இங்கிருந்து இடம்பெயர்ந்து வேறிடங்களுக்குச் சென்றதை தொடர்ந்து படிப்படியாகப் பொலிவிழந்து காடாக மாற்றமடைந்தது கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இறக்காவில் பிரதேசம் மக்கள் தொழில்சார் இடங்களிலொன்றாக விளங்கத் தொடங்கியது. சேனைப் பயிர்ச் செய்கை நெல்விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு ஆகிய தொழில்களின்மையமாக விளங்கி வந்த இறக்காவில் இன்று வளர்ச்சியுற்று வரும் கிராமம் நீர்ப்பாசனகுளம் விவசாய நிலம் எனப் பல வடிவங்களை உள்ளடக்கியதாக விளங்கி வருகின்றது.

## இறக்காவில் கிராமம்

பண்டைக் காலத்தில் மக்கள் குடியிருப்புக்கள் நிறைந்து தமிழர் நாகரீகம் நிலவியிருந்த இறக்காவில் கிழக்கு பகுதியான கடற்கரையை அண்மித்த நீண்ட பிரதேசம் இன்று மணற்சேனை என்ற பெயருடன் விளங்குகின்றது. இக்கிராமத்தில் தமிழ் மக்களே தனிப் பெரும்பான்மையினராக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் விடா முயற்சியும் தன்னம்பிக்கையும் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.

அக்காலத்தில் புகழ் பெற்றிருந்ததும் மகாசேனனால் இடித்தழிக்கப் பட்டதுமான மகாவம்சம் கூறும் ஏரகாவில்ல என்ற இறக்காவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாலயம் அமைந்திருந்த இன்றைய மணற்சேனை கிராமமானது சமூக, சமய, பொருளாதார மற்றும் கல்வித்துறை என்பனவற்றில் துரித வளர்ச்சி கண்டு வருகின்றது. இக்கிராமத்தில் பிள்ளையார் ஆலயம் மெதடிஸ்த ஆலயம் என்பன அமைந்துள்ளன. அரசினர் கல்விக்கூடமொன்றும் இயங்கி வருகின்றது.

## இறக்காவில்லு (குளம்)

பண்டைக் காலத்தில் இறக்காவில் பிரதேசத்தின் (ஏரகாவில்) பெரும் பகுதியை உள்ளடக்கியிருந்த இறக்காவில்லு குளத்தின் கரையோரப் பகுதிகள் இன்று வயல் நிலங்களாக மாற்ற மடைந்துள்ளன. பண்டைய இறக்காவில்லு (குளம்) 'வட்டுவான்குளம்' என்ற பெயருடன் விளங்கி வருவதுடன் இக்குளத்தை அண்மித்துள்ள வயல் கண்டம் வட்டவான் கண்டம் என்றும் இன்று வழங்கி வருவதும் நோக்கற்பாலது இவ்வாறு பண்டைய இறக்காவில் குளத்தின் கரையோரப் பகுதிகள் அபிவிருத்தி கண்டு வயல் நிலங்களாக இன்று மாற்றமடைந்துள்ள போதும் தன் வரலாற்றுத் தொன்மையை நன்கு உணர்த்தும் வகையில் இப்பிரதேசத்தின் மையப்பகுதியாக இக்குளம் இன்றும் விளங்கி வருகின்றதெனலாம்.

## படிவெட்டின மலை

இறக்காவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதியில் இறக்காவட்டை, பாலையடி வட்டை ஆகிய வயல்களும் வடமேற்கு பகுதியில் படிவெட்டின் மலையும் அமைந்துள்ளன. இப்பிரதேசத்தின் மேட்டு நிலப் பகுதியான தென்மேற்குப் பகுதியில், மக்கள் குடியிருப்புக்கள் அண்மைக் காலத்தில் தோற்றம் பெற்று நிலவிவருவதைக் காணமுடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமேற்கு பகுதியில் திருக்கோவில் பொத்துவில் பிரதான வீதியருகே நீண்டு உயர்ந்து காணப்படும் படிவெட்டினமலை வரலாற்றுச் சிறப்பினைக் கொண்டதாகும் இதனை 1989, 1990களில் மேற்கொண்ட எனது மேலாய்வுகள் மூலமாக உணரமுடிந்தது சூளவம்சம் (அத்தியாயம் 3) குறிப்பிடும் இறக்காவிகாரை இதுவாக இருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

ஓரளவு உயர்ந்த இம்மலையின் படர்ந்த உச்சிப் பகுதியில் அழிவுற்ற பௌத்த வழிபாட்டு இடமொன்றின் எச்சங்கள் காணப்படுகின்றன. மேலும் மலையின் மேற்கு அடிவாரத்தில் பெரிய குகையொன்றும், காடாகவுள்ள இம்மலைச் சூழலில் தொல்லியல் தடயங்களும் காணப்படுகின்றன. இம்மலையின் தென் கிழக்குப் புறமாகவுள்ள மலைச் சரிவினூடாக மலையுச்சிக்குச் செல்லும் பாதையின் நடுப்பகுதியிவளைவில் சமாந்தரமான இடத்தில் கறுப்பு - சிவப்பு மட்பாண்டத் துண்டுகள் (1989, 1990 களில்) காணக்கிடைத்தன[7] இவை பற்றி ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

சமாந்தரமான இந்த இடத்திலிருந்து செங்குத்தான மலையுச்சி வரை படிக்கட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றின் காலத்தை கி.பி. ஏழாம், எட்டாம், நூற்றாண்டுகளுக்குக் கொண்டு செல்லலாம் கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டு வரை இவ்வழிபாட்டுத் தலம் சிறப்புடன் விளங்கி வந்துள்ளதெனலாம் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்த இடம் அழிக்கப்பட்டடிருக்கலாம் குறிப்பாக கி.பி1215இல் மாகோன் ஈழத்தின் மீது மேற்கொண்ட மதரீதியான படையெடுப்பின் போது அழிக்கப்பட்ட பௌத்த வழிபாட்டுத் தலங்களுள் இதுவும் ஒன்றாக விருக்கலாம் என்று எண்ண இடமுண்டு.

இதேவேளை கி.பி பதிமூன்றாம் நூற்றாண்டு வரை இலங்கையின் வடக்கு, கிழக்கு பிராந்தியங்களில் மட்டுமன்றி இத்தீவு முழுவதிலும் வாழ்ந்திருந்த தமிழர்களில் ஒருசாரார் பௌத்த தமிழர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்திருந்ததை பல்வேறு சான்றுகள் உணர்த்தும் இக்காலத்தில் சங்கமன்கண்டி சாகாமம், வில்காமம் றூபஸ் கஞ்சிகுடிஆறு உள்ளிட்ட "திருக்கோவில் பிரதேசத்தில் வாழ்ந்திருந்த மக்களில் கணிசமான தொகையினர் தமிழ் பௌத்தர்களாக விருந்தனர். தம்பிலுவில் கண்ணகி வழிபாடு" திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு போன்ற நூல்கள் இதனை விளக்கமாகக் குறிப்பிடுகின்றன.

மகாசேனனால் ஏரகாவில் சிவாலயம் அழிக்கப்பட்டு இவ்வூரில் ஏரகாவில் விகாரை நிர்மாணிக்கப்பட்டதாக மகாவம்சம் (அத்தியாயம் 37 : வரி 40, 41) குறிப்பிடுகின்றது. அதாவது மகாசேனன் காலத்தில் உரோகணத்து இறக்காவில் ஊரில் சிறப்புடன் விளங்கியிருந்த சிவாலயம், இம்மன்னனால் இடித்தழிக்கப்பட்டு இறக்காவில் விகாரை (இறக்காவிகாரை) நிர்மாணிக்கப்பட்டது கி.பி ஏழாம் நூற்றாண்டில் அனுராதபுரியில் ஆட்சி புரிந்த மொகல்லானன் இறக்கா விகாரைக்கு சேத்தியமனை நிர்மாணித்துக் கொடுத்ததாக சூளவம்சம் (அத்தியாயம் : 3) குறிப்பிடுகின்றது.

இதே வேளை சூளவம்சம் குறிப்பிடும் இறக்காவிகாரை என்பது சங்கமன் கண்டி இறக்காவில் பிரதேசத்தின் வரலாற்று மையங்களி லொன்றான படிவெட்டின மலை உள்ளிட்டு அமைந்திருந்ததெனக் கொள்ளலாம். இவ்வாறு கொள்ளுமிடத்து மகாசேனனால் தோற்றுவிக்கப்பட்டதென மகாவம்சம் கூறும் ஏரகாவில் விகாரை இது என்பதும் தெளிவு. எவ்வாறாயினும் இவைபற்றிய வரலாற்றுண் மைகளை வெளிக்கொணர வேண்டியதும் உறுதி செய்ய வேண்டியதும் வரலாற்றாய்வறிஞர்களின் பணியாகும்.

இந்நிலையில் மகாவம்சம் கூறும் ஏரகாவில் என்ற இறக்காவில் ஊரின் தோற்றம் இற்கு சிறப்புடன் விளங்கியிருந்த இறக்காவில் சிவாலயத் தோற்றம் வளர்ச்சிபற்றியும் பண்டைய மட்டக்களப்பு வரலாற்றில் சங்கமன் கண்டி இறக்காவில் பெற்றிருந்த முக்கியத்துவம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன பற்றியும் இனிவரும் அத்தியாயங்களில் விரிவாக நோக்கலாம்.

## குறிப்புக்கள்

1) ஈழமும் இந்து மதமும் (அனுராதபுரி காலம்)
கட்டுரை சி.க.சிற்றம் பலம் சிந்தனை தொகுதி - 1984

2) நம்முன்னோரளித்த அருஞ் செல்வம்
பக்கம் 51, 52 ஜி.சி மெண்டிஸ் BA.PhD. - 1969

3) இலங்கையில் இந்து கலாசாரம் பாகம் I
பக்கம் 30, 31 பேராசிரியர் சி. பத்ம நாதன் - 2000

4) பாரம்பரியம் மிக்க கதிர்காம பாதயாத்திரையும் கந்த சுவாமிக் கடவுளின் புனித பூமியும்
பக்கம் 166 என்.கே.எஸ். திருச்செல்வம் - 2013

4A) இக்காலத்தில் (கி.மு. 4ஆம் நூற்றாண்டு) இப்பிரதேசத்தில் ஆங்காங்கே ஈழத்தின் பூர்வ குடியினரில் ஒரு பிரிவினரான நாகர் குலத்து தமிழர்கள் வாழ்ந்திருந்தனர். இவ்வேளையிலே பாண்டியகுலத்து தமிழ் மக்கள் இப்பிரதேசத்தில் பெருமளவில் குடியேறியதைத் தொடர்ந்து இவ்வூர் இறக்காவில் என் பெயர் வழங்கத் (கி.மு. 3ஆம் நூற்றாண்டு) தொடங்கியது.

5) இலங்கை சுருக்க வரலாறு - பக்கம் 112 கலாநிதி க.குரைராசா - 2008

6) இலங்கையில் இந்து கலாசாரம் பாகம் I
பேராசிரியர் சி. பத்மநாதன், பக்கம் 30, 31 - 2000

7) இச்சான்றுகள், இந்த இடத்தை பெருங்கற்காலத்துக்குக் (கி.மு. 900 - 200( கொண்டு செல்ல உதவும். குறிப்பாக கி.மு ஐந்தாம் நூற்றாண்டுக்கும் கி.மு மூன்றாம் நூற்றாண்டுக்கு மிடைப்பட்ட காலத்தில் முக்கியத்துவம் பெறத் தொடங்கியிருக்கலாம். இக்காலத்தில் பாண்டிய குலத்து தமிழ் அரசர்களது (கதிர்காம சத்திரியர்) அரசியல் செல்வாக்கு நிலவியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “இறக்காவில் கிராமம், சிவாலயம் தோற்றம்”

மகாவம்சம் கூறும் ஏரகாவில்ல என்ற இறக்காவில் ஊரின் தோற்றம் பற்றியும், இவ்வூரில் மகாசேனன் காலம் வரை சிறப்புடன் விளங்கி வந்த ஈஸ்வரன் சிவலிங்கக் கோயில் தோற்றம் பற்றியும் நோக்குமிடத்து, உறுகுணையில் திராவிடவியல் சார்ந்த பெருங்கற் பண்பாடு நிலவியிருந்த காலத்தில் (கி.மு. 900 - 300) ஈழத்தின் பூர்வ குடியினரில் ஒரு பிரிவினரான நாகர் குலத்தினர் சிறு தொகையினராக இங்கு வாழ்ந்திருந்தனர் என்பதையும் கி.மு நாலாம் நூற்றாண்டில் பாண்டிய குலத்தினர் இங்கு பெருமளவில் குடியேறியதைத் தொடர்ந்து இந்த இடம் இறக்காவில் எனப் பெயர் வழங்கத் தொடங்கியது என்றும் இக்காலத்தில் (கி.மு 3ஆம் நூற்றாண்டு) பாண்டிய குலத்தினரால் இங்கு சிவாலயமொன்று தோற்று விக்கப்பட்டதெனவும் அறியமுடிகின்றது.

பண்டைய உரோகணம் இந்து சமயச் செல்வாக்குட்பட்டிருந்த பிரதேசம் என்பதை அம்பாரை, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் காணக் கிடைக்கும் பிராமிக் கல்வெட:டுக்கள் உறுதி செய்கின்றன. 1 பண்டைய உரோகண மண்டலத்தில் அமைந்துள்ள நகர நாகரீக மையங்களுள், சங்கமன் கண்டி பிரதேசமும் ஒன்றாகும் ஈழத்துப் பெருங்கற்கால (கி.மு 900-300) மையங்களுள் ஒன்றான சங்குமன் கண்டியிலும் இதன் தென்கிழக்குப் பகுதியில் அமைந்திருந்த நீர்நிலையைச் சூழவுள்ள இடங்களிலும் நாகர் என்ற திராவிட இனத்தவர் வாழ்ந்திருந்தனர். இவர்கள் பண்டைத் திராவிடம் என்ற தமிழ் மொழியைப் பேச்சு மொழியாகக் கொண்டவர்கள் ஆவர். 2

கி.மு ஏழாம் நூற்றாண்டளவில் சங்குமன் என்ற நாகர்குல முதல்வனால் சங்குமன் கண்டி நகர் தோற்றுவிக்கப்பட்டு நாகர்குல முதல்வர்கள் இப்பகுதியைப் பரிபாலனம் செய்து வந்தனர். 3 கி.மு நாலாம் நூற்றாண்டு வரை நாகர் குலத்தினரின் ஆட்சிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசமாகவும், வாழ்விடமாகவும் சங்குமன் கண்டி விளங்கியிருந்தது இக்காலத்தில் சங்குமன் கண்டியின் தென்கிழக்கிழக்கில் அமந்திருந்த இறக்காவில் பகுதியில் சங்குமன் கண்டி நாகர்குல குறுநில மன்னர்களின் அரசியல் (நிர்வாகப் பிரிவு) செல்வாக்கு நிலைத்திருந்தது இக்காலத்தில் சங்கமன் கண்டியிலும், இறக்காவில் பகுதியிலும் சிவவழிபாடு செழித்திருந்தது. 4

## இறக்காவில் (ஏரகாவில்) சிவாலயம் தோற்றம்

இலங்கைத் தீவானது தென்னிந்தியாவுக்கு மிக அன்மையில் அமைந்துள்ளதால். ஆதிகாலந்தொட்டு தென்னிந்திய மக்களே இங்கு குடியேறி வந்துள்ளனர் இவ்வாறு கி.மு. ஐந்தாம் நாலாம் நூற்றாண்டுகளில் இலங்கையின் உரோகண மண்டலத்தில் குடியேறிய தென்னிந்திய மக்கள் குறிப்பாக பாண்டிய நாட்டுத் தமிழ்க் குடியினர் ஆவர் இவர்கள் கி.மு. நாலாம் நூற்றாண்டில் அரசுகள் நிறுவி இப்பிரதேசத்தில் ஆட்சி புரிந்து வந்தனர் என்பதை ஆய்வுகள் உணர்த்துகின்றன.

கி.மு நாலாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டிலிருந்து பெருமளவு தமிழர்கள் உறுகுணையில் வந்து குடியேறினர் இவர்களில் பாண்டிய அரச மரபைச் சேர்ந்த மச்சராசர் கி.மு நாலாம் நூற்றாண்டு தொடக்கம் கி.மு இரண்டாம் நூற்றாண்டு வரை உறுகுணையில் ஆட்சி புரிந்தனர் உரோகண மண்டலத்தில் இன்றைய அம்பாரை, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு மாவட்டங்களை உள்ளடக்கிய பெரும்பிரதேசத்தை பாண்டியர் குலத்து மூத்தோர் வம்சம் கதிர் காமத்திலிருந்தும், இளையோர் வம்சம் சந்தணகாமத்திலிருந்தும் ஆட்சி புரிந்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகாமம் மொட்டையாகல்லு என்ற இடத்திலுள்ள பிராமிக் கல்வெட்டு கதிர்காம கத்திரியர்களில் இளையோனாகிய மகாநாகாவின் ஆட்சி மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் பரந்திருந்ததை உணர்த்துகின்றது. 5 அனுராதபுரி மன்னரின் மேலாதிக்கத்தை ஏற்றிராத சுதந்திர அரசர்களான இவர்களையே கதிர்காம சந்தணகாம சத்திரியர்கள் என்று மகாவம்சம் கூறும்,.

தென் கீழ் இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட பதினைந்து பிராமிச் சாசனங்கள் உறுகுணையில் பாண்டிய குலத்து தமிழ்ச்சிற்றரசர் கூட்டாச்சி நிலவியிருந்ததை உறுதி செய்கின்றன பாண்டியரின் இலச்சினை மீன் உருவம் என்பதும் அறிந்ததேயாகும் மீன் இலச்சினை பொறிக்கப்பட்ட பிராமிச் சாசனங்கள் பதினைந்தும் பேராசிரியர் பரணவிதான அவர்களால் வெளியிடப்பட்டவைகள் என்பதும் குறிப்பிடத்தக்கது 6 சகோதரர்கள் கூடி ஆளும் முறை பாண்டிய அரசகுலத்தினரின் சிறப்பியல்பாக நீண்டகாலம் இருந்து வந்தது.

பாண்டிய குலத்தினரான கதிர்காம சத்திரியர்களது ஆட்சி சங்குமன் கண்டியில் நிலைத்திருந்தது. இதனை சங்குமன் கண்டி மலைப்பாறைக் குகையில் பொறிக்கப்பட்டுள்ள இரு பிராமிக் கல்வெட்டுக்கள், உறுதி செய்கின்றன. இக்கல் வெட்டுக்களில் ஒன்றில் 'பருமக' என்னும் தமிழ்ப் பிராமிக்குரிய சொல் காணப்படுகின்றது. இதில் "பருமக வரளி புதஹ உபசக உதியலேன" எனப் பொறிக்கப்பட்டுள்ளது இது பெரு மகன்வரளியின் பக்தன் உதியனின் குகை எனப் பொருள் படுகின்றது. உதியன் என்பவன் கதிர்காம இராச்சியத்தை ஆட்சி செய்த பத்து பாண்டிய சத்திரிய வம்சத்து மன்னர்களில் ஒருவனாவான்.

இரண்டாவது கல்வெட்டின் முற்பகுதி அழிந்த நிலையில் இறுதிப் பகுதியில் மட்டும் 'குசலேன' அதாவது 'குசனின்குகை' எனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறிக்கப்பட்டுள்ளது. குசன் என்பவனும் பத்து கதிர்காம சத்திரியர்களிலொருவனாவான். எனவே சங்குமன் கண்டி கற்குகைகளிலுள்ள கல்வெட்டுக்கள் மூலம். இப்பிரதேசம் கதிர்காம சத்திரியர்களால் கூட்டாக ஆட்சி செய்யப்பட்ட பிரதேசம் என்பது தெளிவாகின்றது. 7

இத்தமிழ் மன்னர்களது ஆட்சிக்காலத்தில் பண்டைய நகர நாகரீகம் நிலவியிருந்த சங்குமன் கண்டியிலும் இதனை அண்மித்த இறக்காவில் குளத்தின் அருகாயிருந்த இடங்களிலும் பாண்டிய நாட்டுத் தமிழர்கள் பெருமளவில் குடியேறி (கி.மு நாலாம் நூற்றாண்டு) பூர்வ குடியினரான நாகர் குலத்தினருடன் ஒன்றாக வாழ்ந்திருந்தனர். இதனைத் தொடர்ந்து இறக்காவில் ஊர் பொலிவுடன் விளங்கத் தொடங்கியது கி.மு மூன்றாம் நூற்றாண்டில் தமிழ்ச்சைவர்கள் (நாகர் பாண்டியர்) நிறைந்திருந்த இறக்காவில் கிராமத்தில் கதிர்காமச் சத்திரியர்களினால் சிவாலயம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டு இவர்களது ஆதரவுடன் வளர்ச்சியுற்று வந்தது.

பாண்டிய குலத்துத் தமிழ்ச் சைவர்களான இவர்கள் தங்கள் முருக வழிபாட்டை உறுகுணை நாட்டில் நிறுவினர் முருகன் குறுஞ்சிக் கடவுள் ஆதலால் தமிழரது வழக்கப்படி கதிர்காம மலையில் முருகனுக்கு கோயில் கட்டி வழிபட்டனர் இவ்வேளை உரோகண நாட்டில் இவர்களால் நிர்மாணிக்கப்பட்டு வளர்ச்சியுற்று வந்த இன்னொரு கோயில் ஏரகாவில்ல என்ற ஊரில் இருந்த பிரசித்தி பெற்ற சிவாலயமாகும். 8 அதாவது சங்குமன்கண்டி 'இறக்காவில்' ஊரில் இருந்த சிவாலயமாகும் பௌத்தம் ஈழத்தில் அறிமுகமாகாத அக்காலத்தில் இம்மன்னர்களது இந்து சமயச் செயற்பாடுகள் முன்னிலை பெற்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று சங்குமன் கண்டி நகரில் அக்காலத்தில் நிலவிவந்த சங்கமன்கண்டி சிவாலயமும் பாண்டியரின் ஆதரவைப் பெற்றிருந்தது இவ்வாலயம் இன்றைய சங்கமன் கண்டி மலைப் பிள்ளையார் ஆலயத்துக்குச் சிறிது தொலைவில் வடமேற்குப் பகுதியில் அமைந்திருந்தது (ஆய்வார்வலர் நா. நவநாயக மூர்த்தி - 2009) தமிழகத்தில் திருப்பரங் குன்றம் திருச் செந்தூர் போன்று பாண்டியர் குலத்துத் தமிழ் அரசர்களால் வெண்நாவற்பதி (திருக்கோயில் முருகன்) ஆதரிக்கப்பட்டு சிறப்புடன் விளங்கியிருந்தது 9 இவ்வாலயம் வேல்வழிபாடு நிலவி வந்த இடத்தின் தொடர்ச்சியாகும்.

கி.மு நாலாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் உறுகுணையில் பாண்டியர் அரசியல் செல்வாக்கு நிலைத்திருந்த காலத்தில் பிராமணர்கள் சிலர் இம்மன்னர்களது ஆதரவுடன் தனியான கிராமங்களை அமைத்து கோயில்கள், குளங்கள், நிர்மாணித்து செல்வாக்குடன் வாழ்ந்திருந்தனர். இக்காலத்தில் கி.மு மூன்றாம் நூற்றாண்டில் பாண்டிய குலத்துத் தமிழ் மன்னர் ஆதரவுடன் கலந்தன் என்ற பிராமணனால் கலந்தன் கிராமம் (கலந்தன் ஊர்) கலந்த காமம் சிவாலயம் என்பன தோற்றுவிக்கப்பட்டன. பௌத்தம் இலங்கையில் அறிமுகமாகாத அக்காலத்தில் தோற்று விக்கப்பட்ட கலந்தன் ஊர் சிவாலயம், சிறப்புடன் விளங்கியிருந்த தெனலாம்.

## பண்டைடைய இலங்கையில் சிவ வழிபாடு

பண்டைய இலங்கையில் வாழ்ந்திருந்த நாகர், இயக்கர் வேடர் என்ற திராவிடக்குடியினரிடையே இந்து சமய நம்பிக்கைகளே நிலவியிருந்தன குறிப்பாக இம்மக்களிடையே சிவ வழிபாடு சிறப்புடன் விளங்கி வந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் சிவ வழிபாடுடைய மக்கள் கி.மு 1000ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே வாழ்ந்து வந்துள்ளதை இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்கள் உணர்த்துகின்றன. இராமாயண சம்பவம் கி.மு 1300 - 1150 வரையுள்ள காலத்திலும் இதனைத் தொடர்ந்து பாரத நிகழ்ச்சி கி.மு 1150 - 950 வரையுள்ள காலத்திலும் நிகழ்ந்தன என்பதை ஆன்மீகம் சார்ந்த அறிவியல் தேடல்கள் மூலமாக உறுதி செய்ய முடிகின்றது. இராமாயண நிகழ்ச்சியானது. சிந்துவெளி நாகரீகம் முடிவடைந்த பின்னர் நடைபெற்றதாகும். இக்காலத்தில் தண்டகாரண்யம் தொடக்கம் இலங்கை வரை வாழ்ந்திருந்த ஆதித் திராவிடரிடையே சிவலிங்க வழிபாடு உன்னத நிலையிலிருந்தது.

சிந்து வெளி - ஹரபா மக்களான தாசர் நாகர் என்ற திராவிடரில் பெரும்பாலானோர் ஆரியப் படையெடுப்பாளர்களினால் இந்த இடங்களிலிருந்து வெளியேறித் தென்னிந்தியாவிலும் ஈழத்திலும் வாழ்ந்து வந்த தமது இனத்தவர்களுடன் சேர்ந்து வாழ்ந்து வரலாயினர்.

இம்மக்கள் கி.மு பதினேழாம் நூற்றாண்டளவில் சிந்து வெளியிலிருந்து வெளியேறிய வேளையில் தாம் பேணி வந்த சிவவழிபாட்டுக் கூறுகளையும் எடுத்து வந்து தென்னிந்தியாவிலும், ஈழத்திலும் வாழ்ந்து வந்த தமது இனத்தவரிடையேயும் அறிமுகப் படுத்தினர் கி.மு 1300ஆம் ஆண்டளவில் தென்னிந்தியா, ஈழம் ஆகிய பிராந்தியங்களில் வாழ்ந்து வந்த நாகர், இயக்கரிடையே சிவவழி பாட்டின் முக்கிய சின்னமான இலிங்க வழிபாடு செழித்திருந்தது. 10

இராவணனும் அவனது மக்களும், சுற்றத்தவர்களும் சிவனையே வழிபட்டனர். இராவணனின் விருப்பின் பிரகாரம் இவனது மகனான இந்திரஜித் என்பவனால் இலங்கையின் பலபாகங்களிலும் பல சிவலிங்கங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டன. இவனது காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் மட்டும் 1008 சிவலிங்கங்கள் இலங்கையில் இருந்ததாக நம்பப்படுகின்றது. இதனால்தான் என்னவோ திருமூலர் தனது திருமந்திரத்தில் சிவபூமி என்று இலங்கையைப் போற்றியுள்ளார். மேகநாதன் என்ற இந்திரஜித்தால் பிரதிஸ்டை செய்யப்பட்ட சிவலிங்கங்களில் கொக்கட்டிச் சோலை தான் தோன்றி இலிங்கமும் ஒன்றாகும். 11 இராவணன் உகந்தை மலையில் பெரிய சிவாலயம் ஒன்றை நிர்மாணித்துள்ளான்.

மேற்குறிப்பிடப்பட்ட இராவணன்பற்றிய வரலாறுகள் இலங்கையின் சிவ வழிபாட்டு தோற்ற நிலைகளை கி.மு 1000 - 900ஆண்டுகளுக்குப் பின் நகரவைக்கின்றது என்பது சுட்டிக் காட்டவேண்டிய தொன்றாகும்.

தொல்லியல் ரீதியாக நோக்குமிடத்து கி.மு 8 - 7ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையில் பெருங்கற் பண்பாட்டைக் கைக்கொண்ட திராவிட மக்களிடையே சிவவழிபாடு முதன் முதலில் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது. அதற்கு அப்பண்பாட்டு மக்களது கலைப் படைப்புக்களில் காணப்படும் ஆன்மீகத் தன்மையை வெளிப்படுத்தும் வகையில் அமைந்த மனித உருவங்கள் சுடுமண்ணிலான சிவலிங்கங்கள், சிவனது வாகனமான காளையின் வடிவங்கள், மட்பாண்டங்களில் காணப்படும், இருதலை, முத்தலைச் சூலங்கள் என்பன சான்றாக உள்ளன (DERANIYAGALA 1953, 133 - 8 புஸ்பரட்ணம் - 1993, சி.க. சிற்றம்பலம்- 1995) இச் சின்னங்களுடன், வன்னிப் பிராந்தியங்களிலுள்ள இரணைமடு, பல்லவராயன் ஊற்று, போன்ற இடங்களில் இலிங்க உருவங்கள் பெறப்பட்டுள்ளன. 12

இலங்கையில் சிவவழிபாட்டைப் பேணிவந்த மக்கள் கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முதலாக வாழ்ந்து வந்துள்ளதை மகாவம்சம் நூலும் உறுதி செய்கின்றது விஜயன் இலங்கைக்கு வருவதற்கு அதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திற்கு முன்னரேயே இலங்கையில் கருத்திற் கொள்ளத் தக்கனவும் முழு இந்தியாவின் வழிபாட்டிற்குரியனவுமான ஐந்து சிவாலயங்கள் இருந்தன இவையாவன மகாதீர்த்தத்திற்கு அருகிலுள்ள திருக்கேதீஸ்வரம், முத்துச் சிலாபத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த முன்னீஸ்வரம், மாந்தோட்டைக் கருகில் தண்டேஸ்வரம், பெரிய கொட்டியாரக் குடாவுக்கு எதிராகவுள்ள திருக்கோணேஸ்வரம், காங்கேசன் துறைக்கண்மையிலுள்ள நகுலேஸ்வரம் என்பன இலங்கையில் சிறப்புடன் விளங்கிவந்த சிவாலயங்களாகும். இவ்வாறு திருபோல் பீரிஸ் அவர்கள் (Peiris-P 1917:17-18) வலியுறுத்துகின்றார்.*13*

மகாவம்சம் தரும் வரலாற்றுத் தகவல்களின்படி பாண்டு காபயன் மன்னன் (கி.மு377-307) ஒரு சிவலிங்கக் கோயிலைக் கட்டினான் எனத் தெரிகின்றது (x-102) மேலும் சிவிகாசாலா சொத்திசாலா என்னும் இல்லங்களை அமைத்துக் கொடுத்தான் எனக் கூறும் (மகாவம்சம் VII) இவற்றிலொன்று சிவலிங்கங்களைக் கொண்ட வழிபாட்டுத் தலம் என உரையாசிரியர் கூறுவர் இவைதவிர கி.மு 3ஆம் நூற்றாண்டு முதலாகக் கிடைக்கப் பெறுகின்ற சாசனங்களிலும் சிவ என்ற பெயரைக் கொண்ட மக்கள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. 14 ஆதலால் இலங்கையில் நிலவிவரும் சமய நெறிகளில் சைவசமயமே மிகப் புராதனமாகக் காணப்படுகின்றது.

கி.மு மூன்றாம் நூற்றாண்டில் தேவநம்பியதீசன் நகர எல்லைகளை வரையறை செய்யும் போது பிராமணன் ஒருவனுக்குச் சொந்தமான சிவன் கோயிலைக் கடந்து சென்றான் என்ற வரலாற்றுக் குறிப்பும் உண்டு, அனுராதபுரம் போதி மரத்துக் கருகில் (கீழே) 1898இல் நடந்த அகழ்வாராட்சியின் போது ஒரு சிவன் கோயில் கண்டு பிடிக்கப்பட்டது 15 என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்புக்கள்**

1) ஈழத்து இந்துசமய வரலாறு பாகம் I -
பக்கம் 125 பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் 1996

2) இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டைப் புகுத்தியவர்கள் தமிழ், கன்னடம், தெலுங்கு மொழிகளின் பிரிவு ஏற்படாத காலத்துக்குரியவர்கள், என்று கொள்ளலாம், அவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் பரவியிருந்தனர் தமிழ் / திராவிட மொழி மூலமான பல சொற்கள் அடங்கிய சாசனங்கள் குறிப்பாக, வடமேற்கிலும், வடமத்தியிலும், தென்கிழக்கிலும் (உறுகுணைபகுதி) அமைந்துள்ளன (இலங்கையில் தமிழ் சாசனங்கள் பக்கம் XXXI பேராசிரியர் சி. பத்மநாதன் - 2006)

3) பண்டைத்தமிழர் பண்பாட்டு கோலங்கள்.
பக்கம் 10 நா. நவநாயக மூர்த்தி - 1996

4) சிவ வழிபாட்டைக் கொண்டிருவர்களும், சிவலிங்கங்களைக் தரித்தவர்களும் நாகர்கள் ஆவர் (இந்தியப் பண்பாடும் தமிழரும் - பக்கம் 20 எஸ்.இராமகிருஷ்ணன்) இவர்கள் தமிழர்களாவர்.

5) ஈழத்து இந்து சமய வரலாறு பாகம் I
பக்கம் 125 பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் 1996

6) தமிழர்சமய வரலாறு - பக்கம் 224, 225 டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை - 1980

7) பாரம்பரியம் மிக்க கதிர்காமபாதயாத்திரையும் கந்த சுவாமிக் கடவுளின் புனித பூமியும்.
பக்கம் 148 என். கே. எஸ். திருச்செல்வம் - 2013

8) தமிழ் நாட்டு வரலாறு - சங்ககால அரசியல்
பக்கம் 594, 595 தமிழ் நாட்டு அரசு வெளியீடு - 1983



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கிமு. ஏழாம் நூற்றாண்டிலிருந்து கதிரமலையில் வேல் வழிபாடு நிலவி வந்துள்ளது. இதன் தொடர்ச்சியே பர்ணடியரால் கதிரமலையில் நிர்மாணிக்கப்பட்ட முருகன் ஆலயமாகும்.

9) பண்டைய ஈழத்தமிழர்
பக்கம், 47 நா. நவநாயக மூர்த்தி - 1998

10) ஈழத்தமிழர் வரலாற்று சுவடுகள்
பக்கம் 26, 27 நா. நவநாயக மூர்த்தி - 2002

11) பண்டைய ஈழத்தமிழர்
பக்கம் 34 நா. நவநாயக மூர்த்தி - 1998

- இலங்கையில் இராவணன் ஆட்சி புரிந்த காலத்தில் சைவசமயம் (சிவசழிபாடு) சிறப்புடன் விளங்கியிருந்தது சிவபக்தனான இராவணனின் குடும்பத்தினர் அனைவரும் சிவபக்தர்களாவர்.

12) சிலப்பதிகாரத்தில் பண்பாட்டுக் கோலங்கள்
பக்கம் 72 பதிப்பாசிரியர் க. இரகுபரன் - 2003

13) ஈழமும் இந்துமதமும் - அனுரதபுரிக் காலம்
கட்டுரை, கலாநிதி சி.க சிற்றம் பலம் 'சிந்தனை' தொகுதி 11 இதழ்I பங்குனி - 1984

14) சைவசிந்தாந்தமும் விஞ்ஞான உலகமும்
பக்கம் 112, தனபாக்கியம் குணபாலசிங்கம் எம். ஏ - 1990

15) தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும்
பக்கம் 225 - 227 கதிர்தணிகாசலம் - 1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்தம் அறிமுகம்

ஈழத்தில் கி.மு மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆட்சி புரிந்த தேவநம்பிய தீசன் என்னும் மன்னன் (கி.மு 247 - 207) காலத்தில் பௌத்தம் அறிமுகமான தென்றும் இதனைத் தொடர்ந்து இத்தீவில் வாழ்ந்திருந்த மக்களிடையே செல்வாக்குப் பெற்ற தென்றும் வரலாற்று நூல்கள் குறிப்பிடுககின்றன. வடஇந்தியாவில் ஆட்சி புரிந்து வந்த மாமன்னர் அசோகரிடம் தேவநம்பிய தீசன் தூதுவர்களை அனுப்பி பகவான் புத்தர் போதிஞானம் பெற்ற போதிமரக்கிளையை இலங்கைக்கு அனுப்பும் படியும், பௌத்த மதத்தை இலங்கையில் பரவச் செய்வதற்காக சங்கமித்திரை முதலான பௌத்த பிக்குகளை அனுப்பும் படியும் கேட்டுக் கொண்டார்.

அவ்வாறே அசோகச் சக்கரவர்த்தி போதி மரக்கிளை யையும், பிக்குணிகளையும் இலங்கைக்கு அனுப்பிவைத்தார் (மகாவம்சம் அத்தியாயம் 18,19 : 1-152) இதற்கு முன்பே அசோகச்சக்கரவர்த்தி மகிந்தன் என்னும் பிக்குவை (மகேந்திரன்) இலங்கைக்கு அனுப்பி பௌத்தமதப் பிரசாரம் செய்வித் திருந்தார். (மகாவம்சம் 18,19:1-52) என அறியமுடிகின்றது. புத்தகயாவிலிருந்து வந்த போதிமரக் கிளையை அனுராதபுரத்தில் நட்ட விழாவுக்கு அக்காலத்தில் இலங்கையில் ஆட்சி புரிந்த அரசர்களும், பெருமக்களும் வந்திருந்ததாக மகாவம்சம் மேலும் கூறும் 1

புகழ் பெற்ற மன்னனான தேவநம்பிய தீசன் காலத்தில் அனுரதபுரியில் இடம்பெற்ற புனித அரச மரக்கிளை நடும் வைபவத்தில் விசேட அதிதிகளாக உரோகனை அரசர்களும் (கதிர்காம சந்தணகாம சத்திரியர்) கலந்து கொண்டதுடன் இவ்வைபவத்தில் கலந்து கொண்ட இவர்கள் அரசமரக்கிளை களையும் பெற்று வந்து கதிர்காமம் உள்ளிட்ட தமது அரசுகளிலும் நாட்டியுள்ளனர். இதனை மகாவம்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகின்றது. 2 இவ்வேளை கதிர்காம சந்தனகாமத் தமிழ் அரசர்களால் வெள்ளரசுக் கிளைகள் நடப்பட்டு பௌத்த வழிபாட்டுத் தலங்கள் பல தோற்றுவிக்கப்பட்டன. குடும்பிகல, தீகவாபி போன்ற பண்டைய பௌத்த தலங்கள் இவற்றில் அடங்கும். 3

இக்காலத்தில் கதிர்காமத்தமிழ் அரசர்களால் நகர நாகரீகம் நிலவியிருந்த சங்குமன் கண்டியிலும் பௌத்தம் அறிமுகம் செய்யப்பட்டது இதனைத் தொடர்ந்து இங்கு வாழ்ந்திருந்த பாண்டியர், நாகர், இயக்கர் குலங்களைச் சேர்ந்த மக்களில் கணிசமானோர் பௌத்தத்தைத் தழுவிப் பௌத்தர்களாக அதாவது பௌத்த தமிழர்களாக வாழ்ந்து வந்தனர் ஆயினும், இவர்கள் தாங்கள் முன்னர் கடைப்பிடித்து வந்த பழைய சைவசமய நம்பிக்கைகளையும் பேணி வந்தனர் சங்குமன் கண்டியிலும் சங்குமன்கண்டிவில் காமம் சாகாமம், கஞ்சிகுடி ஆறு, றூபஸ் உள்ளிட்ட இன்றைய திருக் கோவில் பிரதேசத்தில் சைவமும், பௌத்தமும் அருகருகாய் நிலவி வந்தன.

இதனடிப்படையில் சங்குமன் கண்டியில் சிவாலயமும், பௌத்த வழிபாட்டு இடமும் அருகருகாய் அமைந்து இருசமய நெறிகளையும் பேணி வந்த தமிழர்களின் வழிபாட்டு இடமாக விளங்கி வந்துள்ளதை இன்று காணக்கிடைக்கும் தொல்லியல் சான்றுகள் உணர்த்துகின்றன. 4 இதேவேளை சங்குமன் கண்டி இற்க்காவில் கிராமத்தில் வாழ்ந்திருந்த நாகர் பாண்டியர் என்ற திராவிட மக்களிடையே சைவசமயம் முன்னிலை பெற்றிருந்ததுடன் கிழக்கிலங்கையில் அக்காலத்தில் புகழ்பூத்த சிவாலயங்களிலொன்றாகவும் ஏரகாவில்ல என்ற சங்குமன் கண்டி இறக்காவில் சிவாலயம் விளங்களியிருந்தது. இக்காலத்தில் அம்பாந்தோட்டை, அம்பாரை மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்கள் உள்ளிட்ட உறுகுணையில் தமிழர்களே வாழ்ந்திருந்தனர் நாகர் இயக்கர், பாண்டியர் என்ற திராவிடரான இவர்கள் நாகரீக மேம்பாடுடையோராகவும் விளங்கியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிகாலத்திலிருந்து இந்துசமய நம்பிக்கைகள் நிலவி வந்த தென்கிழக்கிலங்கையில், பெருங்கற்கால முதிர்ச்சி நிலையில் கி.மு மூன்றாம் நூற்றாண்டில் பௌத்தம் அறிமுகமாகிப் பரவியதைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் இந்து சமயமும், பௌத்த சமயமும் அருகருகாயிருந்து வளர்ச்சி பெற்று வந்தன இதேவேளை பௌத்த சமயத்தைக் கைக்கொண்டிருந்தோர் தமது பண்டைய இந்து சமய நம்பிக்கைகளைத் தொடர்ந்தும் பேணி வந்தனர். இவர்கள் இந்துக் கடவுள்களுக்கும் ஆலயங்கள் நிர்மாணித்து வழிபாடு செய்து வந்தனர்.

தென்கிழக்கிலங்கையில் பெருங்கற் பண்பாட்டுக்குரிய (திராவிடவியல் சார்ந்த) மக்கள் வாழ்ந்திருந்த இடங்களாவன. கதிரவெளி நவகிரி, தீகவாபி, உகந்தை, வாகரை சங்குமன் கண்டி, சாகாமம், தமண கல்லோடை, மல்வத்தை ஆகியன வாகும். இந்த இடங்களில் பெருங்கற் காலத்துச்சின்னங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இச்சான்றுகள் மூலம் அக்கால கட்டத்தில் (கி.மு1000 - 300) இந்த இடங்களில் திராவிடக் குடியினரே வாழ்ந்திருந்தனர். என்பதை அறிய முடிகின்றது. மேலும் பௌத்தம் அறிமுகமான காலத்தில் அதாவது பெருங்கற்கால முதிர்ச்சி நிலையில் கி.மு மூன்றாம் நூற்றாண்டில் இந்த இடங்களில் தமிழர் நாகரீகமும், தமிழர் சமயமான சைவமும் செழிப்புடன் விளங்கியிருந்தன.

உரோகணத்தில் பாண்டிய குலத்து தமிழ் அரசர்கள் ஆட்சி உன்னத நிலையிலிருந்த இக்காலத்தில் இந்தமிழ் மன்னர்களின் ஆதரவுடன் தேவநம்பிய தீசனின் தம்பியான மகாநாகன் என்பவன் உறுகுணையில் மாகம சிற்றரசைத் தோற்றுவித்தான். மகா நாகனின் மகனான கோதபாயன் கதிர்காம மன்னன் காமணி அபயனின் மக்களான பத்து அரசகுமாரர்களைக் கொன்று உறுகுணையின் இராஜதானியை தனதாக்கிக் கொண்டான் 5. இவன் தமிழ் அரசர்கள் பத்துப் பேரையும் அழித்தபொழுதிலும் கதிர்காமப்பகுதியில் தமிழ் அரசர்களது ஆதிக்கம் ஓரளவு இருந்து வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூமுனைக்கு மூன்றுமைல் மேற்கிலுள்ள 'வோவத்தகல்' கொட்டதாமுவேலக ஆகிய இடங்களிலுள்ள மீன்சின்னம் பொறிக்கப்பட்ட குகைக் கல்வெட்டுக்கள் கதிர்காமத்தமிழ் அரசர்கள் கோதபாயனால் அழிக்கப்பட்டது பற்றிக் குறிப்பிடுகின்றன இக்கல் வெட்டுக்கள் மூலம் கதிர்காம சத்திரியர் குடும்பம் ஒன்றின் ஐந்து பரம்பரை பற்றி அறியமுடிகின்றது கிழக்கு, தென் கிழக்கில் மிக நீண்ட காலம் ஆட்சி செலுத்திய பெருங்கற் காலகுறுநில மன்னர்கள் பரம்பரையினரே இவர்களாவர் 6 குறிப்பாக கி.மு நாலாம் நூற்றாண்டு தொடக்கம் கி.மு. 2ஆம் நூற்றாண்டு வரை உறுகுணையில் இவர்களது ஆட்சி நிலைத்திருந்தது.

மாகம சிற்றரசன் கோதபாயன் கதிர்காமத்து பத்து அரச குமாரார்களை கொன்று அழித்த போதும் காமணி அபயனின் மக்களான பத்து அரச குமாரர்களில் மூத்தவனான தர்மராசா என்பவனின் மகன் மகாதீசன் என்பவன் தென்கிழக்கிலங்கையில் ஆதிக்கம் பெற்றிருந்தான் 7 அதாவது கோதபாயன் கதிர்காமத்து இளவரசர்கள் பத்துப்பேரைக் கொன்று தனது ஆட்சியை உறுகுணையின் தென்பகுதியில் பலப்படுத்தியிருந்த போதும் உரோகணத்தின் வடபகுதியில் (அம்பாரை உள்ளிட்ட மட்டக்களப்பு) தமிழ் மன்னரின் ஆதிக்கம் தொடர்ந்து இருந்து வந்தது பாண்டியரின் ஆட்சியை மகாதீசன் நிலை நிறுத்தியிருந்தான்.

பிற்காலத்தில் கோதபாயன் உறுகுணையில் தனது அரசியல் செல்வாக்கை ஓரளவு நிலை நிறுத்தி கொண்டான் என்பதை அறிய முடிகின்றது. கோதபாயன் தனது மகனான கவந்தீசனுக்கு உரோகண நாட்டுப் பரம்பரையில் வந்தவளும், பாண்டியகுலத்து மகாதீசனின், மகளுமான 'சவெர' என்ற அரசியை திருமணம் செய்து வைத்தான் இதன் மூலமாகவே உறுகுணையில் தனது செல்வாக்கை ஓரளவு நிலை நிறுத்திக் கொண்டான் எனலாம். இதனை விளக்கமாகக் குறிப்பிடுமிடத்து கோதபாயன் தனது மகனான கவந்தீசனுக்கு பாண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலத்து மகாதீசனின் மகளான 'சவெர' என்பவளுக்கு திருமணம் செய்துவைத்ததன் மூலமாக கதிர்காமத்து பகுதியையும் (கதிர்காம ஆட்சி) தனது உறுகுணை மாகம அரசுடன் சேர்த்துக் கொண்டான் இதேவேளை தென்கிழக்கிலங்கை ஆவது உறுகுணை மண்டலத்தின் வடக்கு, கிழக்கு பகுதியான (அம்பாரை, மட்டக்களப்பு உள்ளிட்ட) பண்டைய மட்டக்களப்பு பிரதேசம் மகாதீசன் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது,

## பாண்டியர் சமயப்பணியும் சங்குமன்கண்டி இறக்காவிலும்

போதிமர நடுகை விழாவில் கலந்து கொண்டு அரசமரக் கன்றுகளைப் பெற்றுத் தங்கள் ஆட்சிப்பிரதேசங்களில் அரசமரக் கன்றுகளை நட்டு, பௌத்த வழிபாட்டுத் தலங்களைத் தோற்று வித்த உரோகணத்து தமிழ் அரசர்கள் பௌத்தத்தை தழுவிப் பௌத்த தமிழர்களாக வாழ்ந்திருந்தனர் ஆயினும் தங்கள் முந்திய இந்துமத நம்பிக்கைகளையும் இவர்கள் பேணி வந்ததுடன் இந்து சமய வளர்ச்சிக்கும் ஆதரவளித்து வந்தனர். கதிர்காம முருகன் அலயம் (கதிரமலை) இவர்களது ஆதரவைப் பெற்றிருந்தது.

இதேவேளை இத்தமிழ் அரசர்களின் பௌத்த சமயப்பணிகள் சிலவற்றை இவர்களால் பொறிக்கப்பட்ட பிராமிச்சாசனங்கள் மூலமாக அறிய முடிகின்றது. கி.மு மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட அம்பாரை மாவட்டம் 'ஹெனன்னெகல' பிராமிச்சாசனம் (மீன் சின்னம் பொறிக்கப்பட்ட) மச்சமகாராசானும் அவனுடைய மகனான காமிணி திஸ்ஸனும் சேர்ந்து பௌத்த பிக்குகளுக்கு சில கிராமங்களையும், அவற்றைச் சேர்ந்த பொருட்களையும் தானம் செய்ததைக் குறிப்பிடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமணி அரசனுடைய குமாரர்களான தசபாதிகர்களில் மூத்தவன் தர்மராசனின் மகனான மகாதீசன் 'போவத்தகல' மலைக்குகையை பௌத்த சங்கத்துக்கு தானம் கொடுத்தான் என்று இக்குகைச் சாசனம் கூறுகின்றது. இம்மலைக் குகையிலுள்ள இன்னொரு பிராமிச் சாசனம் காமணி அரசனுடைய மகன் உதிராசன், உதிராசனுடைய மகன் அபயன், அபயனுடைய மகள் அனுராதி என்பவள் இந்தக் குகையை பிக்குகளுக்கு தானம் செய்தாள் என்று கூறுகின்றது.

உரோகண நாட்டை ஆண்ட பாண்டிய மரபைச் சேர்ந்த காமணி அரசனுடைய பரம்பரையைப் பற்றிக் கூறும் கொட்டதாமு வேலக குகையிலுள்ள பிராமிச் சாசனங்களி லொன்று தர்மராசனின் மகனான மகாதிஸ்ஸ ஐயனுடைய மகளும் அபயராசனுடைய மகனின் மனைவியுமான சவெர புத்த சங்கத்துக்கு இந்தக்குகையை தானம் கொடுத்தாள் என்று கூறுகின்றது. 8

இக்காலத்தில் நாகர், பாண்டியர் என்ற திராவிடரான தமிழ்க் குடியினர் நிறைந்திருந்த சங்கமன் கண்டிநகரிலும் இதனை அண்மித்த புறநகர் பகுதிகளிலும் நிலவியிருந்த பௌத்த இந்து வழிபாட்டுத் தலங்களுக்கு பாண்டிய குலத்து தமிழ் அரசர்கள் ஆதரவளித்து வந்தனர். தமிழ்ச்சைவர்கள் பெரும் பான்மையினராக வாழ்ந்திருந்த இறக்காவில் ஊரில் அமைந்திருந்த சிவாலயமும் கதிர்காம மன்னர்களின் ஆதரவைப் பெற்றுச் சிறப்புடன் விளங்கியிருந்தது.

பாண்டியர் ஆட்சிக் காலத்தில் கிழக்குக்கரையில் வர்த்தகம் போக்கு வரத்து ஆகிய துறைகளில் பிரபல்யம் பெற்றிருந்த துறைமுகங்களில் சங்கமன் கண்டி உமிரித்துறை கோமரித்துறை (குமரித்துறை) என்பனவும் அடங்கும் இவற்றிற்கிடையில் கேந்திர முக்கியத்துவம் பெற்றிருந்த சங்குமன்கண்டி முனைக்கு அண்மித்ததாய் இறக்காவில் சிவாலயம் அமைந்திருந்தது. இதன் காரணமாக கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையில் கோணேஸ்வரம் போன்று அக்காலத்தில் இறக்காவில் சிவாலயமும் புகழ்பெற்று விளங்கியிருந்தது எனலாம்.

பாண்டியர் காலத்தில் சங்கமன் கண்டி நகரில் அரசமாளிகை யொன்று நிர்மாணிக்கப்பட்டடிருந்தது இதற்கு முந்திய காலத்தில் சங்குமன் என்ற குறுநில மன்னன் இந்த இடத்தில் மாளிகையொன்றைத் தோற்று வித்துத் தங்கியிலிருந்தான் இந்த இடத்திலேயே பாண்டியர் புதியொரு மாளிகையை நிர்மாணித்தனர். இம்மாளிகையில் தங்கியிருந்து நாகர்முனை என்ற பண்டைய நாகநாட்டை (திருக்கோவில் பிரதேசம்) கதிர்காம அரசர்கள் பரிபாலித்து வந்தனர் இக்காலத்தில் சங்கமன் கண்டி அரசமாளிகையானது இம்மனர்களின் அரசிருக்கை மையங்களிலொன்றாகவும் (கூட்டாச்சி) பொழுது போக்கு வாசஸ்தலமாகவும், விளங்கி வந்தது எனலாம்.

சங்கமன் கண்டி பிராமிக் சாசனங்கள் குறிப்பிடும் உதிரன், குசன், போன்ற கதிர்காமத்து அரசர்களும் மற்றும் சாகாமம் மொட்டையாகல்லு கூறும் மகாநாகன் (சி.க. சிற்றம் பலம் - 1996) போன்ற கதிகாமத்து அரசர்களும் இம் மாளிகையைத் தங்கள் அரசிருக்கைகளில் ஒன்றாகக் கொண்டிருதனர் சங்கமன் கண்டி காட்டினுள் விரவிக் கிடக்கும் கட்டிட இடிபாடுகள் கதிர்காம சத்திரியர்களது அரண்மனை இடிபாடுகள் என்பதை தெளிவாக உணர முடியும்.9

கி.மு நாலாம் நூற்றாண்டு தொடக்கம் கி.மு இரண்டாம் நூற்றாண்டு வரையும் உறுகுணையை ஆட்சி புரிந்த பாண்டிய குலத்து தமிழ் அரசர்கள் பற்றிய வரலாற்றை தீப வம்சமும் மகாவம்சமும் கூறவில்லை இவர்கள் உரோகணத்தில் நிலை கொண்டு அப்பகுதிகளை ஆட்சி புரிந்து (கூட்டாச்சி) வந்தனர் இவர்களும் பிற்காலத்தில் இவர்களது சந்ததியினரும் எழுதி வைத்த பிராமி எழுத்து சாசனங்களிலிருந்து இவர்களைப்பற்றி ஒருவாறு அறிய முடிகின்றது பர்ணடிய குலத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர்கள் எழுதிய பதினாறு பிராமிச் சாசனங்கள் வெவ்வேறு இடங்களில் காணப்படுகின்றன. இவை மீன் சின்னம் பொறிக் கப்பட்டவைகளாகும்.

மகாவம்சம் போதிமரக்கிளை நடும்வைபவத்தில் கதிர்காம சந்தணகாம பெருமக்களும் வந்திருந்தனர். என்று கூறுகின்றது. அவர்கள் பெயரைக் கூறாமல் மறைத்து விட்டது உரோகண நாட்டில் மகாநாகன் புகல் அடைந்ததையும் அவனுக்கு உரோகண நாட்டு அரசனான காமணிதிஸ்ஸன் அடைக்கலம் கொடுத்து ஆதரித்ததையும் காமணி திஸ்ஸன் இறந்த பிறகு அவனுடைய ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட துரோகச் செயலையும் மகாநாகனுடைய மகன் காமணி திஸ்ஸனுடைய மக்கள் பத்து பேரை கொன்றுதானே உறுகுணையை அபகரித்ததையும் அடியோடு மறைத்து விட்டது ஆனால் மகாவம்சம் மறைத்து விட்ட வரலாற்றை தாது வம்சம் என்னும் நூல் கூறுகின்றது.10

**குறிப்புக்கள்**

1) பழந்தமிழர் நடுகற் பண்பாடு
   - பக்கம் *122, 123* ஆய்வார்வலர் நா. நவநாயக மூர்த்தி - *2011*

2) Tha mahawamsam -
   - W.Geiger அதிகாரம் xix : 61 - 63 Colombo - 1950

3) கிழக்கு இலங்கையில் தமிழ்ப் பௌத்தர்கள்
   - கட்டுரை, ஞாயிறு தினக்குரல் *2004* ஏப்ரல் *25*, நா. நவநாயக மூர்த்தி

4) சங்குமன் கண்டி மலைப்பிள்ளையார் ஆலயம், தோற்றம், வளர்ச்சி வழிபாடு
   - கட்டுரை, நா.நவநாயக மூர்த்ததி, மஹாகும்பாபிஷே கமலர் - *2009*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) HISTOTY OF CEYLON

- Page 60 C.W. Nicholas and s.Pa ranavidana, Colombo - 1961

6) கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு

- பக்கம் 102, 103 செல்வி க. தங்கேஸ்வரி - 2007

7) ஈழத்தவர் வரலாறு

- பக்கம் 39கலாநிதி க. குணராசா - 1996

8) இலங்கையில் தமிழர்

- கட்டுரை தமிழ் நாட்டு வரலாறு சங்ககால அரசியல் பக்கம் 610 - 612 தமிழ் நாட்டு அரசு வெளியீடு - 1983

9) சங்கமன் கண்டி பண்டைய வரலாறு

- கட்டுரை செல்வி. க. தங்கேஸ்வரி மஹா கும்பாபிஷேக மலர் சங்கமன் கண்டி காட்டுப் பிள்ளையார் ஆலயம் - 2009

- சங்கமன் கண்டி பண்டைய உரோகணத்தில் அமைந்திருந்த ஓர் நகராகும், இந்நகரும், இதன் அயலிலுள்ள பிரதேசங்களும் இலங்கை வரலாற்றில் மிகவும் தொன்மையானவை என்பதற்கு சான்றுகள் நிறையவேயுள்ளன.

10) இலங்கையில் தமிழர்

- கட்டுரை 'தமிழ் நாட்டு வரலாறு' - சங்ககால அரசியல் பக்கம் 614 தமிழ் நாட்டு அரசு வெளியீடு - 1983



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மன்னர்கள்

## சேனன் கூத்திகன் எல்லாளன் காலத்தில்

மகாநாகனும் அவனுடைய மகன் கோதபாயனும் உரோகண நாட்டை பாண்டிய குலத்து தமிழ் அரசர்களிடமிருந்து துரோகமாகக் கைப்பற்றி ஆட்சி புரிந்த போது தேவநம்பிய தீசன் அனுராதபுரம் இராச்சியத்தை ஆட்சி புரிந்தான் (கி.மு. 247 - 207) இவனுக்குப்பின், அவனுடைய இரண்டாவது தம்பியான உத்தியன் என்பவன் கி.மு 207 முதல் 197 வரையில் பத்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவனுக்குப் பிறகு அவனுடைய தம்பியான மகாசிவன் கி.மு. 197 முதல் 187 வரையில் பத்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். அவனுக்குப் பிறகு அவனுடைய தம்பியான சூரத்திஸ்ஸ கி.மு 187 முதல் 177 வரையில் பத்து ஆண்டுகள் அரசாண்டான் இவர்களது ஆட்சிக் காலத்தில் பௌத்தம் இலங்கையில் பரவிற்று.

சூரத்திஸ்ன் அனுராத புரியிலிருந்து இராஜரட்டையை ஆட்சிபுரிந்த வேளை கி.மு 177இல் இரண்டு தமிழர்கள் சூரத்திசனை வெற்றி கொண்டு அரசாட்சியைக் கைப்பற்றி இருபத்திரண்டு ஆண்டுகள் இலங்கையை ஆட்சி புரிந்தனர். இலங்கை நூல்களான மகாவம்சம், தீபவம்சம், பூஜாவளி, இராஜாவளி ஆகிய நூல்கள் இத்தமிழர்கள் இலங்கையை ஆட்சி புரிந்ததைக் குறிப்பிடுகின்றன.

தமிழர்களாகிய சேனனும் குட்டபாரிந்தனும் (கூத்திகன்) கப்பல் வாணிகர் என்றும் இலங்கைக்கு குதிரைகளைக் கொண்டு வந்து குதிரை வாணிகம் செய்தார்கள் என்றும் இவர்கள் இருவரும் இலங்கையை இருபத்திரண்டு ஆண்டுகள் நீதி தவறாது செங்கோல் செலுத்தினார்கள் என்றும் மகாவம்சம் (அத்தியாயம் 21 : செய் 10-11) தீபவம்சம் (18 : 17) ஆகிய நூல்கள் குறிப்பிடுகின்றன. 1 இத்தமிழ் மன்னர்கள் ஆட்சி இலங்கை முழுவதிலும் நிலவியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனன் கூத்திகன் ஆகிய மன்னர்கள் இருவரும் கலிங்க குலத்தவர்கள் ஆவர் இதனை மட்டக்களப்பு பூர்வசரித்திரம் என்ற மட்டக்களப்பு மான்மியம் நூல் குறிப்பிடும் 2 கலிங்க குலத்துத் தமிழ்ச்சைவர்களான இவர்களது ஆட்சிக்காலத்தில் உறுகுணையில் தமிழர்களது அரசியல் செல்வாக்கு உன்னத நிலையை எய்தியிருந்ததுடன் சைவசமயமும் செழிப்புற்றிருந்தது தமிழ் மன்னனான கூத்திகன் உரோகணத்தின் வடக்கு கிழக்குப் பகுதியில் தமிழருக்கெனத் தனியான அரசொன்றைத் தோற்றுவித்தான் இத்தமிழ் அரசின் இராஜதானியாக (அரசிருக்கை) மட்டக்களப்பு என்ற நகரினையும் நிர்மாணித்தான்.

இப்பண்டைய மட்டக்களப்பு நகரைத் தனது இராஜதானியாகக் கொண்டு உரோகண மண்டலத்தின் வடக்கு, கிழக்கு பகுதியான தென்கிழக்கிலங்கையை (அம்பாரை உள்ளிட்ட மட்டக்களப்பு) ஆட்சி புரிந்த மன்னன் கூத்திகன் இப் பிரதேசத்தில் தமிழும் சைவமும் நிலை பெற வேண்டித் தென்னிந்தியாவிலிருந்து கலிங்க குலத்துத் தமிழ்க் குடிகளை வரவழைத்து இப்பிரதேசத்தில் குடியேற்றினான். இவனால் புதிய கிராமங்கள் உருவாக்கப்பட்டன 3 கூத்திகன் காலத்தில் தெற்கே பூமுனை (அறுகம்பை) தொடக்கம் வடக்கே தமிழர்கள் நிறைந்திருந்த தீகவாபி வரையிலான நிலப்பரப்பில் தென்னிந்தியக் குடியேற்றம் இடம் பெற்றமை உறுதியாகின்றது பண்டைய இலங்கை வரலாற்றில் கலிங்கர் என்பது தமிழ்ச்சைவரையே குறிப்பதாகும்.

அக்காலத்தில் தமிழ் மன்னன் கூத்திகனால் தென்னிந்தியா விலிருந்து வரவழைக்கப்பட்ட தமிழ்க் குடும்பங்களில் ஒரு பிரிவினர் கூத்திகனால் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு நகரப் பகுதிகளிலும் (சம்மாந்துறை பிரதேசம்) மற்றும் நிந்தவூர் அட்டப்பள்ளம் ஆகிய இடங்களிலும் குடியேற்றப்பட்டதாக அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் (கி.மு 177 - 155) தீகவாபி (மகாகந்தகுளம்) அம்பாறை பிரதேசங்களில் (தமண, ரஜவெல. உகண) திராவிடர்களே வாழ்ந்திருந்தனர். இவர்களில் ஈழத்தின் பூர்வ குடியினரான நாகர் இயக்கர் என்போரும் இதற்கு முந்திய காலங்களில் (கி.மு. 5ஆம், 4ஆம் நூற்றாண்டு) பாண்டிய நாட்டிலிருந்து வந்து உரோகணம் முழுவதிலும் குடியேறிச் சிற்றரசுகள் நிறுவி வாழ்ந்திருந்த பாண்டிய குலத்துத் தமிழர்களின் சந்ததியினரும் அடங்குவர் ஈழத்துப் பெருங்கற் காலமக்களின் சந்ததியினரான இவர்களிடையே பௌத்தம் பரவியிருந்தது தீகவாபியைச் சேர்ந்த குடுவில்என்ற இடத்தில் காணப்படும் பிராமிச்சாசனம் இதனை உறுதி செய்கின்றது. 4

சேனன் கூத்திகன் ஆகிய மன்னர்கள் காலத்தில் 'நாகர்முனை' என்ற திருக்கோவில் பிரதேசத்திலும் தென்னிந்தியக் குடியேற்றங்கள் பல இடம் பெற்றன. சங்குமன்கண்டி, சாகாமம், வில்காமம் கஞ்சிகுடிஆறு, போன்ற பண்டைய இடங்களில் இவர்கள் குடியேறி வாழ்ந்திருந்தனர். கலிங்க குலத்து தமிழ்ச் சைவர்களான இவர்கள் இந்த இடங்களில் வாழ்ந்திருந்த நாகர் பாண்டியர் ஆகிய தமிழ்க்குடியினருடன் சேர்ந்து ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர். 5 இவ்வேளை சங்குமன் கண்டி இறக்காவில் கிராமத்திலும் கலிங்க குலத்தினரான தமிழ்ச் சைவக்குடும்பங்கள் சில குடியேறியிருந்தனர்.

சைவசமயத்தினரான இவர்கள் குடியேறி வாழ்ந்திருந்த 'சங்கமன் கண்டி'யிலும் இதனையண்டிய இறக்காவில் ஊரிலும் இக்காலத்தில் சைவசமயம் முன்னிலை பெற்றிருந்தது இவ்வேளை, சங்கமன்கண்டி நகரப் பகுதியிலும் புறநகர்ப் பகுதிகளிலும் வாழ்ந்திருந்த மக்களில் ஒரு சாரார் தமிழ்ப் பௌத்தர்களாக வாழ்ந்து வந்த போதும் சைவர்கள் பெருமளவில் வாழ்ந்திருந்த இறக்காவில் ஊரில் சைவம் செழித்திருந் ததுடன் இறக்காவில் சிவாலயமும் சிறப்புடன், விளங்கிவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனன் கூத்திகன் ஆகிய மன்னர்களது ஆட்சிக் காலத்தில் உறுகுணையின் வடக்கு, கிழக்குப் பகுதியான தென் கிழக்கிலங்கையில் (அம்பாரை உள்ளிட்ட மட்டக்களப்பு) பௌத்தமும், சைவமும் தமிழரிடையே நிலவியிருந்தன. பௌத்த தமிழர்களும் வாழ்ந்திருந்தனர். இதேவேளை இப்பிராந்தியத்தில் சைவசமயமே இக்காலத்தில் முன்னிலை பெற்றிருந்தது.

இலங்கை முழுவதிலும் இம்மன்னர்களது நல்லாட்சி பரந்திருந்த இக்காலத்தில் தமிழ்ச் சைவர்களான இவர்கள் பௌத்த விகாரைகளுக்கும் ஆதரவு நல்கித் தானங்கள் வழங்கி அருந்தொண்டுகள் புரிந்து வந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது மன்னன் கூத்திகன் பௌத்த விகாரைகளுக்கு தானம் செய்ததைக் கூறுகின்ற கல்வெட்டெழுத்து சாசனம் அனுராதபுரியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (Anuradhapura slab Inscription of kutta parinda - by S. Paranavithana Epigraphia Zelonica, vol iv, pt111, P15)6 மேலும் இத்தமிழ் மன்னர்களது ஆட்சிக் காலத்தில் தமிழர்கள் பெருமளவில் அனுரத புரியில் வாழ்ந்திருந்ததுடன் வாணிபத்திலும் அவர்கள் செல்லாக்குப் பெற்றிருந்தனர். என்பதையும் அறிய முடிகின்றது. 7

சேனன் கூத்தின் ஆகியோர் தங்கள் சைவசமயக் கடமைகளை நிறைவேற்ற வேண்டி மல்வத்து ஓயாவை திருப்பி அனுரதபுர அருகே ஓட வைத்தனர் எனும் குறிப்பு (Nicholas and - PARANAVITHANA. 1961:58) தீர்த்தத்தின் மகிமையையும் நீர்ஸ்நானம் செய்து கருமமாற்றும் இந்து மத நம்பிக்கைகளை இவர்கள் பேணியிருந்தமை தெளிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாளன் காலத்தில்

அனுராதபுரியிலிருந்து இலங்கை முழுவதையும் ஆட்சி புரிந்த சேனன், சூத்திகன் (கி.மு 177 - 155) ஆகிய தமிழ் மன்னர்களை சிங்கள அரச பரம்பரையில் வந்த அசேலன் என்பவன் வெற்றி கொண்டு அனுரதபுரியைக் கைப்பற்றி பத்து ஆண்டுகள் (கி.மு. 155 - 145) ஆட்சி புரிந்தான் இவ்வேளை, சோழ நாட்டுத் தமிழனான உயர் குடியில் பிறந்த எல்லாளன் என்பவன் அனுராதபுரி மீது படையெடுத்து வந்து அசேலனை வெற்றி கொண்டு இலங்கையை நாப்பத்தி நாலு வருடங்கள் ஆட்சி புரிந்தான், இவன், எதிரிகள் நண்பர்கள் என்ற பேதமின்றி நீதியின் முன் எல்லோரையும் சமமாக நடாத்தினான் இவ்வாறு மகாவம்சம் கூறும். 8

தமிழ் மன்னனான எல்லாளன் (கி.மு 145 - 101) இலங்கை முழுவதையும் ஆட்சி புரிந்த மன்னனாவான். எல்லாளனது மேலாதிக்கத்தை கல்யாணி மாகம ஆகிய தென்னிலங்கை சிற்றரசுகள் ஏற்றிருந்தன மாகம மன்னன் கவந்தீசன் எல்லாளனின் மேலாதிக்கத்தை ஏற்றுத் திறை செலுத்தி வந்தான். 9 இக்காலத்தில் உரோகணத்தின் வடபகுதியில் தமிழ் சிற்றரசர் பலர் ஆட்சி புரிந்து வந்தனர் இதனை மகாவம்சம் (அத்தியாயம் 25 : செய் 75) குறிப்பிடுகின்றது இதன்வாயிலாக சங்கமன் கண்டி உள்ளிட்ட உறுகுணையின் வட பகுதியில் தமிழரது அரசியல் செல்வாக்கே நிலவியிருந்த தென்பது தெளிவு,

உரோகணத்தில் வாழ்ந்திருந்த மக்களிடையே பௌத்மும், சைவமும் அருகருகாய் நிலவியிருந்ததுடன் பௌத்த தமிழர்களும் வாழ்ந்திருந்த இக்காலத்தில் மாகம மன்னன் கவந்தீசன் தனது ஆட்சிக் காலத்தில் அறுபத்திரண்டு விகாரைகளைக் கட்டினான் என்மகாவம்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும் இவனது பௌத்த சமயப்பணிகள் சங்கமன் கண்டி உள்ளிட்ட திருக்கோவில் பிரதேசம் (சாகாமம்) வரை பரந்திருந்தது இதனை ஆய்வாளர் நொயல் பீரிஸ் அவர்கள் குறிப்பிடுகின்றார் 10 எவ்வாறாயினும், இந்து சமயச் செல்வாக்குக்குட்பட்ட பிரதேசமாகவே உறுகுணையின் வடக்கு கிழக்கு பகுதியான தென்கிழக்கிலங்கை விளங்கியிருந்தது கலந்தகாமம் சிவாலயம் உள்ளிட்ட இந்து ஆலயங்கள் புகழ் பெற்றிருந்தன.

தமிழ் மன்னனான எல்லாளனது காலத்தில் (கி.மு 145 - 101) தென்கிழக்கிலங்கையை கூத்திகளால் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு நகரிலிருந்து தமிழ் அரசன் ஒருவன் ஆட்சி புரிந்து வந்தான் (மட்டக்களப்பு மான்மியம் பக்கம் 21) இவன் தனது தம்பிமார் இருவரை மந்திரிகளாக நியமித்து மட்டக்களப்பு நகரைத் தனது இராஜதானியாகக் கொண்டு மனுநீதியின் படி ஆட்சிபுரிந்து வந்ததாக மேலும் இந்நூல் கூறும் 11 இக்காலத்தில் மட்டக்களப்பு அரசின் தென்பகுதி அரசியல் நிர்வாக மையங்களாகத் திராவிடர்களான தமிழர்கள் நிறைந்திருந்த சாகாமம் சங்குமன் கண்டி, தீகவாபி ஆகியன விளங்கியிருந்தன.

தமிழ் மன்னன் எல்லாளனின் நீதி தவறாத ஆட்சியைப் புகழ்ந்துரைக்க மனுநீதிச் சோழனின் கதைகளை அவன் மீது ஏற்றி மகாவம்சம் புகழ்ந்துரைக்கின்றது. எனினும் தவறான மார்க்கத்தை (இந்துசமயம்) தழுவியவன் என இகழவும் மகாவம்சம் தவறவில்லை இதன் மூலமாக எல்லாளன் தமிழ்ச் சைவனாக வாழ்ந்து வந்துள்ளான் என்பதை உணரமுடிகின்றது இக்காலத்தில், தமிழ்ச் சைவனான எல்லாளனது சைவப்பணிகள், தமிழரது அரசியல் செல்வாக்கு உன்னத நிலையிருந்த உரோகணத்தின் வடக்கு, கிழக்கு பகுதியான மட்டக்களப்பின் திருக்கோவில் பிரதேசம் வரை பரவியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாளனது சைவப்பணிகள் பற்றிமகாவம்சம் குறிப்பிடவில்லை ஆயினும், இவனது சைவப் பணிகள் தென்கிழக்கிலங்கையின் திருக்கோவில் வரை பரந்திருந்ததை மரபுரைகள் உணரத்துகின்றன. இக்காலத்தில் மண்ணினாலும், மரத்தாலும் அமைந்திருந்த திருக்கோவில் முருகன் ஆலயம் எல்லாளனால் சிறியதொரு கற்கோயிலாக நிர்மாணிக்கப்பட்டது (நா. நவநாயக மூர்த்தி - 2002) ஆதலால் இக்காலத்தில் கிழக்குக் கரையில் சைவாலயங்கள் நிறைந்திருந்த நாகர்முனை என்ற பண்டைய நாக நாடாகிய திருக்கோவில் சங்கமன் கண்டி இறக்காஊரில் சிறப்புடன் விளங்கியிருந்த இறக்காவில் சிவாலயமும் எல்லாளனது ஆதரவைப் பெற்று வந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்சைவனான எல்லாளன் பௌத்த சமய வளர்ச்சிக்கு அருந்தொண்டுகள் புரிந்து வந்துள்ளான் இதனை மகாவம்சம், கூறும் இவனது காலத்தில் தீகவாபி தலம் சிறப்புடன் விளங்கியிருந்ததென அறிய முடிகின்றது தமிழ் மன்னனான எல்லாளனின் மேலாதிக்கத்தை ஏற்று, உறுகுணையின் தென்பகுதியை மாகமை என்னும் இடத்திலிருந்து ஆட்சி புரிந்து வந்த கவந்தீசன் என்னும் சிற்றரசனது காலத்திலேயே இலங்கை வரலாற்றில் தீகவாபி முக்கியத்துவம் பெறத் தொடங்குகின்றது 12 மேலும் இலங்கை வரலாற்றினை நோக்குமிடத்து சிங்கள மன்னர்களுக்கு தீகவாபியுடனான தொடர்பு கவந்தீசன் காலத்திலேயே ஏற்படுகின்றது. என அறியமுடிகின்றது.

எல்லாளனது காலத்தில் மாகமையிலிருந்து ஆட்சி புரிந்த கவந்தீசன் தனது இளைய மகனான சதாதீசனை தீகவாபிதல் அபிவிருத்திக்காக அனுப்பி வைத்தான். இவன் தீகவாபியை அபிவிருத்தி செய்ததுடன் வளங்கள் நிரம்பப் பெற்ற இப்பிரதேசத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல் விளைச்சலையும் பெருக்கினான். 13 என்று வரலாற்று நூல்கள் கூறும் கவந்தீசனின் இளைய மகனான சதாதீசன் என்பவன் தீகவாபியில் வந்து தங்கியிருந்தான் என்றும் இவ்வேளையில் தனது தந்தை இறந்த செய்தி கேட்டு சதாதீசன் திரும்ப மாகம சென்று தந்தையின் அந்திமக்கிரியைகளைச் செய்து விட்டுத் தன்தாயுடன் தீகவாபியிலேயே வந்து தங்கினான் என்றும் மகாவம்சம் கூறும். 14

உரோகணம் முழுவதிலும் பாண்டிய குலத்துத் தமிழ் அரசர்களது (கதிர்காம சந்தணகாமச் சத்திரியர்) ஆட்சி நிலைத்திருந்த காலத்தில் ஈழத்தில் பௌத்தம் அறிமுகமான வேளை (கி.மு 247இல்) சந்தணகாமத்து தமிழ் அரசர்களால் அரசமரக் கன்றுகள் நடப்பட்டுத் தோற்று விக்கப்பட்ட பௌத்த வழிபாட்டுத் தலங்களிலொன்றான திகவாபி இத்தமிழ் அரசர்களால் ஆதரிக்கப்பட்டு வந்துள்ளது.

அனுராதபுரியிலிருந்து நீதிதவறாது நல்லாட்சி புரிந்து வந்த சேனன், கூத்திகன் (கி.மு 177 - 155) எல்லாளன் (கி.மு 145 - 101) ஆகிய தமிழ் மன்னர்களது பௌத்த சமயப் பணிகள் தென்கிழக்கிலங்கையின் தீகவாபி வரை பரந்திருந்தது. பௌத்ததமிழர்கள் நிறைந்திருந்ததும் பௌத்தமும், சைவமும் (ஆலயங்கள்) அருகருகாய் நிலவி வந்ததுமான திகவாபியின் வளர்ச்சியில் இத்தமிழ் மன்னர்கள் கவனம் செலுத்தி வந்தனர்.

இந்நிலையிலேயே, எல்லாளனது காலத்தில் (கி.மு 145 - 101) உறுகுணை மாகமச் சிற்றரசனான கவந்தீசனும் தீகவாபியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு தனது இளைய மகனான சதாதீசனைக் கொண்டு அபிவிருத்திப் பணிகள் மேற்கொண்டான் எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனன், சூத்திகன், எல்லாளன் ஆகிய தமிழ் மன்னர்கள் வர்த்தகர்களாக வந்து தற்செயலாக அரசியல் ஆதிக்கத்தைப் பெற்றிருந்தனர் என்ற கருத்தே வரலாற்றுப் பதிவாகக் காணப்படு கின்றது. குறிப்பாக இம்மன்னர்களை குதிரை வியாபாரிகளாக கொள்ளும் முறையே வரலாற்றாசிரியர்கள் மத்தியில் காணப்படு கின்றது. இவர்களுடைய தாயக பூமி அனுரத புரத்திற்கு அருகில் உள்ள அயல் நாடு ஒன்றாகத்தான் விளங்கியிருந்தது என்பது தெளிவாகவிருந்த போதும் பலர் அதனைத் தீப கற்ப இந்தியப் பரப்பினுள் வைத்து நோக்குகின்றனர்.

உண்மையில் யாழ்குடாநாட்டின் புராதன வடிவமான நாகதீபம் அல்லது மணிபல்லவமே அம்மன்னர்களுடைய இருக்கை (தாயகம்) யாகும் என்பது அண்மைக்கால தொல்லியல் கண்டு பிடிப்புக்களின் பெறுபேறுகள் உறுதிப்படுத்தியுள்ளன. குதிரை முகம் நீங்கிய மையமான மாவிட்ட புரமும், கீரிமலையும் இணைந்த அரசிருக்கையே சேனன், சூத்திகன் ஆகியோரின் தாயகம் என்பது தற்போது தெளிவாகின்றது.

எல்லாளனின் தாயகம் வடமராட்சி உடுப்பிட்டிலுள்ள எள்ளன்குளம் என்ற மையமாகும். இப்பின்னணியில் பார்க்கும் போது நாகதீபத்திலிருந்தே இவ்வரசர்கள் சென்று அனுரதபுர இராச்சியத்தில் அரசியல் அதிகாரத்தைப் பெற்று ஆட்சி அமைந்திருந்தன. எனலாம் (இலங்கை வரலாறு, பாகம் I, பக்கம் 275 செ. கிருஷ்ண ராஜா MA. இணைப் பேராசிரியர் வரலாற்றுத் துறை - 2005)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புக்கள்


1) *தமிழ்நாட்டு வரலாறு - சங்ககால அரசியல்*
*பக்கம் 615, 616 கட்டுரை இலங்கையில் தமிழர் - 1983*

2) *இதனை ஆய்வாளர் திருமதி தனபாக்கியம் குணபால சிங்கம் அவர்களும் குறிப்பிடுகின்றார்.*
*(மட்டக்களப்பு மான்மியம் - ஓர் ஆராய்ச்சி பக்கம் 65)*

3) *மட்டக்களப்பு மான்மியம்*
*பக்கம் 39 பதிப்பாசிரியர் எப் எக்ஸி நடராசா - 1962*

4) *ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள்*
*பக்கம் 90 நா. நவநாயக மூர்த்தி - 2002*

5) *தம்பிலுவில் கண்ணகி வழிபாடு*
*பக்கம் 56, 57 நா. நவநாயக மூர்த்தி - 1999*

6) *தமிழ் நாட்டு வரலாறு சங்ககால அரசியல்*
*இலங்கையில் தமிழர் கட்டுரை பக்கம் 617 தமிழ் நாட்டு அரசு வெளியீடு - 1983*

7) *மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி*
*பக்கம் 98, 99 ஜி. தனபாக்கியம், தொல்லியல் எம்.ஏ. 1993*

8) *மகாவம்சம் (தமிழாக்கம்)*
*அத்தியாயம் 21 : செய்யுள் 13-14 எஸ். சங்கரன் மல்லிகை பதிப்பகம் சென்னை.*

9) *ஈழத்தவர் வரலாறு*
*பக்கம் 39 கலாநிதி க. குணராசா - 1996*

Dutugemunu - Senaveratna mjhon Page. 2 Shnha publication Colombo - 1946





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) மகாமையிலிருந்து ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்களான மகாநாகன் கோதபாயன் யட்டலதிஸ்ஸ, கவந்தீசன் ஆகியோரது பௌத்த சமயப் பணிகள் திருக்கோவில் தம்பிலுவில் (சாகாமம்) வரை பரந்திருந்தது. (KAVANTISSA FOUND HIS QUEEN here - 'கட்டுரை' Noeyal peris. Daily Newse 24.09.1984)

- மாகம அரசர்களுக்கும் தென்கிழக்கிலங்கைக்கு மிடையில் நெருக்கமான சமய, கலாசார உறவுகள் இருந்து வந்தன பௌத்தமும் சைவமும் தமிழரிடையே நிலவி வந்த இக்காலத்தில் தென்கிழக்கிலங்கையில் பௌத்த தமிழர்களும் வாழ்ந்திருந்தனர்.

11) தீகவாபியில் எல்லாளன் சிற்றரசர் இருவர் (தமிழர்) ஆட்சி செய்ததாகவும் துட்டகாமினியின் படைகள் இவ்விருவரையும் வெற்றி கொண்டதாகவும் பாளி நூல்கள் கூறுகின்றன. (பாரம்பரியம் மிக்க கதிர்காம யாத்திரையும் கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமியும் - பக்கம், 85 என் கே.எஸ். திருச் செல்வம் - 2013)

- எல்லாளன் காலத்தில் 'சாகாமம்' என்னும் இடத்திலும் சம்மாந்துறையிலுமிருந்தும் இருதமிழ் சிற்றசர்கள் ஆட்சிபுரிந்தனர். இவர்கள் கூத்திகன் சந்ததியினர் என அறிய முடிகின்றது மரபுரைகளும் இதனை உறுதி செய்கின்றன.

12) ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள்
பக்கம் 48, 49 நா. நவநாயக மூர்த்தி - 2002

13) பண்டைய ஈழம், பாகம் I - பக்கம் 72 வே.க. நடராசா - 1970

14) மகாவம்சம் (தமிழாக்கம்) - அத்தியாயம் 24 : செ. 14 - 15 எஸ் சங்கரன் சென்னை - 1962



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துட்டகாமினி மன்னன் காலம் தொடக்கம் தமிழ் மன்னர்கள் ஆட்சிக் காலம் வரை (கி.மு. 101 - 29வரை)

தமிழ் மன்னன் எல்லாளனுக்குப் பின்னர் இலங்கையில் மீண்டும் சிங்கள மன்னர்கள் ஆட்சி நிலை பெற்றது இவர்கள் ஐம்பத் தெட்டு வருடங்கள் ஆட்சி புரிந்தனர். துட்டகாமினி (கி.மு 101 - 77) சதாதீசன் (கி.மு 77 - 59) தூலத்தனன் (கி.மு 59) வம்சதிஸ்ஸன் (கி.பி 59-50) கல்லாடநாகன் (கி.மு 50-43) ஆகியோர் ஆட்சி புரிந்ததைத் தொடர்ந்து வட்டகாமினி என்பவன் மன்னனானான் இவனது காலத்தில் மீண்டும் தமிழர் ஆட்சி ஏற்பட்டது கி.மு 29ஆம் ஆண்டு வரை இலங்கையில் தமிழர் ஆட்சி நிலவியிருந்தது.

கி.மு 101ஆம் ஆண்டு துட்டகாமினி மன்னன் காலம் தொடக்கம் வட்டகாமினி ஆட்சிக்கு வந்த கி.மு 44ஆம் ஆண்டு வரையுள்ள சிங்கள மன்னர்களது ஆட்சிக் காலத்தில் சிங்கள மன்னர்களது அரசியல் செல்வாக்கே உறுகுணையில் நிலவியிருந்தது ஆயினும் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த தமிழர்களது வாழ்வியலில் பாதிப்புக்கள் ஏற்படவில்லை தமிழும் சைவமும் நன்னிலையில் இருந்து வந்தன.

துட்டகாமினியை சிங்களகடும் போக்குவாதியாகவும், பேரினவாதி யாகவும், பாளி நூல்கள், சித்தரிக்கின்ற போதிலும் இவன் தமிழர்களுடன் நல்லுறவுகள், கொண்டவனாகவே இருந்துள்ளான். என்பதை அறிய முடிகின்றது. இவன் தனது தமிழ்த் தளபதிகளுக்கு தானம் கொடுத்த கி.மு முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டு இதனை உறுதி செய்யும் இவனது படையில் தமிழ்த் தளபதிகள் பலர் இருந்துள்ளனர் கதிர்காம முருகன் ஆலயத்துக்கு திருப்பணி செய்துள்ளான், வழிபாடுகள் செய்துள்ளான். துட்டகாமினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாளனுடன் போரில் ஈடுபட முன்பு கதிர்காம கந்தனை வழிபட்டதாக ஐதீகம் உண்டு.

துடட்காமினியின் ஆட்சிக் காலத்திலிருந்து (கி.மு 101 - 77) உறுகுணை மலையரட்டை முதலான எல்லாப் பகுதிகளிலும் அனுராதபுர ஆட்சி நிலவியிருந்தது உறுகுணையைப் பரிபாலிக்கும் பொறுப்புயுவராஜாவிடம் விடப்பட்டது 1 துட்டகாமினி மன்னன் காலத்தில் இவன்தம்பியான சதாதீசன் தீக வாபியைத் தலை நகராகக் கொண்டு தென் கிழக்கிலங்கையை பரிபாலித்து வந்தான் (மகாவம்சம் அத்தியாயம் 32 : செய்யுள், 2) இதேவேளை சதாதீசனுக்குக் கீழ் தமிழ்த் தலைவர்கள் குறுநில மன்னர்களாக விருந்து பண்டைய மட்டக்களப்பை ஆட்சிபுரிந்து வந்தனர். 2

இக்காலத்தில் தமிழ்க் குடியினரான நாகர், இயக்கர், பாண்டியர், கலிங்கர் ஆகிய திராவிடக் குடியினர் வாழ்ந்திருந்த உறுகுணையின் வடக்கு, கிழக்கு பகுதியான தென்கிழக் கிலங்கையின் ஆளுநராகவே இந்து பௌத்த தமிழர்கள் நிறைந்திருந்த தீகவாபியிலிருந்து சதாதீசன் கடமை புரிந்து வந்துள்ளான். தமிழ் மக்களுடன் இவன் நல்லுறவுகள் கொண்டிருந்ததுடன் சைவசமய வளர்ச்சிக்கும் ஆதரவளித்து வந்துள்ளதை அறியமுடிகின்றது.

இதேவேளை இக்காலத்தில் குறிப்பாக, தீகவாபி, இறக்காமம், அம்பாரை, சாகாமம் ஆகிய பிரதேசங்களில் குளங்கள் பல நிர்மாணிக்கப்பட்டும் புனரமைக்கப்பட்டும் நெற்செய்கை அபிவிருத்தி செய்யப்பட்டதாக அறிய முடிகின்றது. மேலும் சதாதீசனால் சிங்கள பௌத்தர்களும் இப்பிரதேசங்களில் குடியேற்றப் பட்டனர் என்பதையும் ஆய்வுகள் உணர்த்துகின்றன. துட்டகாமினியின் ஆட்சிக் காலத்தில் நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர் என்று மகாவம்சம் (அத்தியாயம் 33,வரி 1) கூறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துட்டகாமினியின் மறைவையடுத்து இவளது தம்பதியான சதாதீசன் (கி.மு 77-59) அனுராதபுரி மன்னனானான் இவன் பட்டாபிஷேகம் செய்து கொண்டு அனுரதபுரியில் ஆட்சி புரிந்த காலத்தில் திகவாபி விகாரையை சேதியத்துடன் கட்டுவித்தான் இதனை மகாவம்சம் (அத்தியாயம் 33:4,9,14) கூறும், ரத்தினங்கள் பதித்தவலை போன்ற அமைப்பினால் சேதியத்தை போர்த்தினான் என்று மேலும் இந்நூல் கூறும்.

சதாதீசன் இறந்ததும், அவனது பிள்ளைகள் அரசுரிமைக்காக சச்சரவுப் பட்டனர் சதாதீசனின் மூன்று மக்கள் ஒருவர் பின் ஒருவராக ஆட்சி புரிந்தனர். பின்னர் வட்டகாமினி என்னும் பெயருடைய நாலாம் மகன் அரசுக்கு வந்தான் 3 சதாதீசன் மரணம் எய்தியதைத் தொடர்ந்து அவனது மக்களிடையே அரசுரிமை போட்டி ஏற்பட்டது. தூபராம பிக்குகள் இரண்டாவது மகன் தூலத்தனன் என்பவனை அரசனாக் கியதும் மூத்தவன் லஞ்சதீசன் படையுடன் வந்து தனக்குரித்தான சிம்மாசனத்தை கைப்பற்றிக் கொண்டான்.

தூலத்தனன் ஆக நாப்பது நாட்களே அரசிருக்கையில் அமர்ந்திருந்தான். லஞ்சதீசன் ஒன்பது ஆண்டுகள் அரசனாக விளங்கினான். இவன் மரணமடைய அவனுடைய மற்றொரு தம்பி கல்லாடநாகன் முடிதரித்தான் கம்மகாரத்தகன் என்ற படைத்தளபதி மன்னனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றிய போது மன்னனின் இளை சகோதரனான வட்டகாமினி மீண்டும் உரிமையைக் கைப்பற்றிக் கொண்டான். கம்பகாரத்தகன் கொல்லப்பட்டான் (மகாவம்சம் அத்தியாயம் 33 : செய் 17-34)

சதாதீசன் (கி.மு 77-59) தூலத்தனன் (கி.மு 59) லஞ்சதீசன் (கி.மு 59-50) கல்லாட நாகன் (கி.மு 50-44) ஆகிய மன்னர்களது ஆட்சிக்காலத்தில் உறுகுணையில் தமிழரது அரசியல் செல்வாக்கு நலிவுற்றிருந்ததுடன் பௌத்த சிங்களவர்களும் இங்கு வந்து குடியேறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வாழ்ந்திருந்த நாகர், இயக்கர், பாண்டியர், கலிங்கர், என்போருடன் இணைந்து வாழ்ந்திருந்தனர். உறுகுணையின் தென் பகுதியில் பௌத்தம் மேலோங்கியிருந்தது.

இதேவேளை உறுகுணையின் வடக்கு, கிழக்கு பகுதியான தென் கிழக்கிலங்கையில் தமிழ்க்குறுநில மன்னர்களாக தமிழ்ப் பிரதானிகள் (ஆட்சித்தலைவர்கள்) செயற்பட்டுவந்த போதும் அரசியலில் நலிவுற்ற நிலையே நிலவி வந்ததெனலாம் ஆயினும் இக்குறுநில மன்னர்களால் சைவசமயம் பேணப்பட்டுவந்தது. திருக்கோவில் முருகன் ஆலயம், சிவாலயம் இறக்காவில் சிவாலயம் சங்குமன் கண்டிமலை சிவாலயம், சங்குமன் கண்டி குகை சிவாலயம் கலந்தகாமம் சிவாலயம் போன்றவை இக்குறுநில தலைவர்களது (பிரதானிகள்) ஆதரவைப் பெற்றிருந்த சைவாலயங்களாகும்.

இவ்வேளையிலேயே கி.மு 44இல் வட்டகாமினி அனுராதபுரியில் மன்னனாக முடி சூட்டிக் கொண்டான். இவன் முடிசூட்டிச் சில மாதங்கள் கடந்த நிலையில் உறுகுணையில் தமிழர்கள் மீண்டும் தங்கள் அரசியல் செல்வாக்கினை நிலைபெறச் செய்திருந்தனர். வட்டகாமினி முடிசூடிக் கொண்ட ஐந்தாவது மாதத்தில் தீசன் என்ற தமிழ்ச் சிற்றரசன் உரோகணத்தில் தனது ஆதிக்கத்தை நிலைபெறச் செய்திருந்தான் பிராமணனான இவன் வட்டகாமினிக்கு எதிராக ஆட்சியுரிமை வேண்டி (அரசுரியைக்) கலகம் செய்து வந்தான் 4. இவ்வாறு மகாவம்சம் கூறும் இதன் வாயிலாக உறுகுணையின் அரசியலில் இவன் பெற்றிருந்த அரசியல் செல்வாக்குப் புலப்படும்.

ஈழத்தில் பௌத்தம் வெகுவாக பரவிப் பௌத்த தமிழர்கள் உருவாகியிருந்த அக் காலத்தில் உறுகுணையில் மட்டுமன்றி அனுரத புரியிலும், இந்து சமயத்தையும் தமிழர் ஆட்சியையும் முன்னிலைப் படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே பிராமணனான தீசனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுரதபுரி அரசுக்கெதிரான கிளர்ச்சி அமைந்திருந்தது (Ellawala, H1969 : 14) எனலாம் நாளுக்கு நாள் இவனது ஆதரவாளர்கள் பெருகிவந்தனர்.

வட்டகாமினி மன்னன் அனுராதபுரத்தில் ஆட்சி செய்த போது தீசன் என்ற பிராமணன் ரோகணையில் கிளர்ச்சியில் ஈடுபட்டதை மகாவம்சம் (அத்தியாயம் 33:செய் 37-41) குறிப்பிடும் இவனது கிளர்ச்சி உக்கிரமாக விருந்ததால் இவனை நேரடியாகச் சந்திப்பதற்கு வட்டகாமினி தயங்கியதாகவும் மகாவம்சம், கூறுகின்றது. இவனது கிளர்ச்சியால் பிக்குமார் நாட்டை விட்டுச் செல்ல வேண்டியேற்பட்டது (Ellawala H. 1969 : 15) பாளி நூல்களில் சண்டதிஸ்ஸ என்ற பட்டம் சூட்டப்பட்டுக் காணப்படு வதிலிருந்து இவனது உக்கிரத்தை அறியலாம். 5

இவ்வேளையில் இலங்கையில் எழு குறு நில மன்னர்கள் தமது படைகளுடன் வந்து மகாதிட்டடு என்ற இடத்தில் வந்து இறங்கினர் (மகாவம்சம் அத்தியாயம் 33 : செய்யுள் 37-39) தமிழர்களான இவர்களது படையெடுப்பின் பயனாக அனுரதபுரியில் தமிழரது ஆட்சி மீண்டும் நிலை பெற்றது ஏழு தமிழர்களில் ஒருவன் வட்டகாமினியின் மனைவியான (அரசனின் இரண்டாவது மனைவி) சோமா தேவியை தன்னுடைய வளாக்கிக் கொண்டு தன் நாடு திரும்பினான் மற்றொருவன் பத்து அதிசயங்கள் படைத்த குரு நாதருடைய பிட்சா பாத்திரத்தை அனுரதபுரத்திலிருந்து எடுத்துக் கொண்டு நாடு திரும்பினான் (மகாவம்சம், அத்தியாயம் 33 : செய்யுள் 37-39)

ஏனைய அரசர்களான புலகத்தன், பாகியன்பணையமாறன், தத்திகன், பிலயமாறன் ஆகிய இவர்கள் ஒருவர்பின் ஒருவராக பதினாலு வருடங்கள் (கி.மு 44 - 29) ஏழுமாதங்கள் அனுரத புரியிலிருந்து ஆட்சி செலுத்தினர் என மகாவம்சம் (அத்தியாயம் 33



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

: செய்யுள் 56 - 61) கூறும் இக்காலத்தில் வட்டகாமணி மலை நாட்டில் மறைந்து வாழ்ந்தான்6. இவர்களது அரசியல் ஆதிக்கம் தெற்கே உறுகுணை வரை பரந்திருந்தது. இதேவேளை இத்தமிழ் மன்னர்கள் இந்து மதவளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் பற்றி மகாவம்சம் குறிப்பிடவில்லை.

ஆயினும் தமிழ் மன்னர்களது ஆட்சி இக்காலகட்டத்தில் தூண்டு கோலாக அமைந்திருந்தது எனக் கொள்ளலாம் (கலாநிதி சி.க. சிற்றம்பலம் - 1984) இவர்களது ஆட்சிக் காலத்தில் இந்து சமய வளர்ச்சியிலும் இவர்கள் கவனம் செலுத்தி வந்துள்ளனர் என்பதை வரலாற்றுச் செய்தியொன்று தெளிவுறுத்துகின்றது. இதன் வாயிலாக இவர்களது சைவப்பணிகள் தெற்கே சங்குமன் கண்டி உள்ளிட்ட திருக்கோவில் பிரதேசம் வரை பரந்திருந்தது என்பதை அறியமுடிகின்றது.

இத்தமிழ் அரசர்களால் திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம் திருப்பணி செய்யப்பட்டதாக இவ்வரலாற்றுச் செய்தி கூறும் (ஈழத்தமிழர் வரலாற்றுச்சுவடுகள் பக்கம் 56) இதனை இவ்வாலயப் பதிகமும் உறுதி செய்கின்றது இக்காலத்தில் (கி.மு. 44 - 29) உறுகுணையில் தமிழர்களது அரசியல் செல்வாக்கு நிலவியிருந்ததுடன் சைவ சமயமும் மேன்மை பெற்றிருந்தது. சைவாலயங்கள் சிறப்புடன் விளங்கியிருந்தன.

இவ்வேளை கிழக்கிலங்கையில் புகழ் பூத்த சிவாலயங்களுள் ஒன்றாக விளங்கியிருந்த சங்குமன் கண்டிமுனை இறக்காவில் சிவாலயமும் செழிப்புடன் விளங்கியிருந்த தெனலாம் அக்காலத்தில் சிவ வழிபாட்டைப் பேணியிருந்த இறக்காவில் ஊர் மக்களான நாகர் பாண்டியர், கலிங்கர் ஆகிய தமிழ்க் குடியினரின் தனிப் பெரும் வழிபாட்டு மையமாக இச்சிவாலயம் மிளிர்ந்து வந்தது அத்துடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயலிலுள்ள சங்கமன் கண்டி நகர மக்கள் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வாழ்ந்திருந்த இந்து, பௌத்த (தமிழ்ப் பௌத்தர்) மக்களின் வழிபாட்டு இடங்களிலொன்றாகவும் இறக்காவில் சிவாலயம் விளங்கி வந்தது எனலாம் இதனை ஆய்வுகள் உணர்த்துகின்றன.

அனுராதபுரி மீது படையெடுத்த ஏழு தமிழ் மன்னர்களை பாண்டியர்கள் என சில வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகிறனர். மகாவம்சத்தில் எந்த இடத்திலும் இவர்கள் பாண்டியர்களாகக் குறிக்கவில்லை இந்த ஏழு தமிழ் அரசர்களும் நாகதீபம் என்ற வட இலங்கையின் தென் பகுதியான உத்தர தேசத்தில் ஆட்சி புரிந்த குறுநில மன்னர்களாவர்.7 கதிரமலையைத் தலைநகராகக் கொண்ட நாகப்பேரரசு யாழ்குடா நாட்டில் செயற்பட்டு வந்த அக்காலத்தில் நாகதீபத்தின் தென் பகுதியான உத்தர தேசத்தைத் தமிழ் குறுநில மன்னர்கள் ஆட்சி புரிந்து வந்தனர்.

இவ்வேளையில் நாகதீவும், உத்தரதேசமும் ஒருங்கே ஈழ மண்டலம் எனவும் அழைக்கப்பட்டது. சங்ககாலத்துக்குச் சமமான இக் காலத்தில் உத்தரதேசத்தின் பூநகரி பிராந்தியத்தில் சங்ககாலப் பண்பாடு நிலவியிருந்தது பாண்டிய நாட்டுடன் இப்பிராந்தியம் நெருக்கமான சமூக, சமய, வாணிப அரசியல் கலாசார தொடர்புகளைக் கொண்டிருந்தது 8. இப்பிராந்தியத்தில் தமிழ்க் குறுநில மன்னர்கள் ஆட்சி நிலவியிருந்தது.

தென்னிங்கையில் ஆட்சி புரிந்த தீசன் அனுராதபுரி அரசுக்கெதிராக கிளர்ந்தெழுந்த வேளையில் வடக்கே ஏழுகுறுநிலத் தமிழ் மன்னர்களும் போர்க்கோலம் பூண்டனர் இவர்கள் மாந்தை வழியாக அனுராதபுரத்தை நோக்கிப் படையெடுத்தனர் இவர்களோடு உறுகுணைத் தீசனும் சேர்ந்து கொண்டான் எனத் தெரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புக்கள்

1) துட்டகாமினின் காலத்திலிருந்து உறுகுணையைப் பரிபாலிக்கும் பொறுப்பு யுவராஜாவிடம் விடப்பட்டது உறுகுணையின் எல்லை பிந்திய அனுரதபுர காலத்தில் 2ஆம் மகிந்தன் காலத்திலிருந்து (கி.பி. 777 - 79) கல்லோயா ஆக்கப்பட்டது (பண்டைய ஈழம், பாகம் I வே.க. நடராசா - 1970)
2) ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் பக்கம் 91, நா.நவநாயக மூர்த்தி - 2002
3) இலங்கையின் சுருக்க வரலாறு பக்கம் 19, எச். டபிள்யு, கொடிநின்றன் - 1960
4) ஈழத்தமிழர் வரலாற்று சுவடுகள் பக்கம் 53, 54 நா. நவநாயக மூர்த்தி - 2002
5) ஈழமும் இந்து மதமும் - அனுராதபுரகாலம் - கட்டுரை, கலாநிதி சி.க.சிற்றம் பலம், சிந்தனை தொகுதி - 1984
6) இலங்கையின் சுருக்க வரலாறு பக்கம் 19, எச்.டபிள்யு. கொடிறின்றன் - 1960
7) ஈழத்தவர் வரலாறு பக்கம் 47 கலாநிதி க. குணராசா - 1996
8) பூநகரியிற் சங்ககால பண்பாடு - சில தொல்லியல் சான்றுகள் கட்டுரைப் ப. புஸ்பரட்ணம் 'பண்பாடு' பருவ இதழ் ஆனி - 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் தமிழர் ஆட்சியும் இலங்கை அரசியல் நிலையும்

**(கி.மு. 29ஆம் ஆண்டு தொடக்கம் மகாசேனன் காலம் வரை)**

கி.மு 29ஆம் ஆண்டில் இலங்கையில் தமிழ் மன்னர் ஆட்சி வட்டகாமினி மன்னனால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது இக்காலம் தொடங்கி மகாசேனன் வரையுள்ள காலத்து இலங்கை அரசியல் நிலை பற்றியும் தென்கிழக்கிலங்கை அரசியல் நிலை பற்றியும், இக்கால கட்டத்தில் மட்டக்களப்பில் தமிழர் ஆட்சி மீண்டும் நிலை பெற்றுச் சிறப்புடன் விளங்கி வர அக்கால இலங்கை அரசியல் நிலை சாதகமாக இருந்து வந்தமை பற்றியும் அறிய வேண்டியது அவசியமாகும். ஆதலால் இவை பற்றி நோக்கலாம்.

ஏழ தமிழ் மன்னர்களின் படையெடுப்பின் போது போரில் தோல்வியுற்று ஓடிப்போன சிங்கள மன்னன் வட்டகாமினி பதினான்கு ஆண்டுகளுக்குப் பின் படைதிரட்டி வந்து அவ்வேளை ஆட்சி புரிந்து வந்த தாட்டிகன் என்னும் தமிழ் மன்னனை வெற்றி கொண்டு அனுராதபுரியில் மன்னனானான் இவன் கி.மு. 29ஆம் ஆண்டு முதல் 17 வரையில் பன்னிரண்டு வருடங்கள் ஆட்சிபுரிந்தான் (மகா, அத்தியாயம் 33 : செய்யுள் 95 - 102) இவனுக்குப் பின் அவனுடைய தமையன் மகனான, மகா சூலிக மகாதிஸ்ஸன் பதினான்கு ஆண்டுகள் (கி.மு 17 - 3) ஆட்சி புரிந்தான்.

இவனது ஆட்சிக் காலத்தில், வட்டகாமினியின் மகனான 'மகாநாகன்' என்பவன் தான் ஆட்சியைப் பெறுவதற்காக கலகம் செய்து கொண்டிருந்தான் ஆதலால் அவன் சோரநாகன் என்று பெயர் பெற்றான் மகாசூலிக மகாதிஸ்ஸன் மரணமடைந்ததைத் தொடர்ந்து சோரநாகன் முடிசூடிக்கொண்டு பன்னிரண்டு ஆண்டுகள் (கி.மு 3 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 9) ஆட்சி புரிந்தான் என (மகா, அத்தியாயம் 34 : செய்யுள் 11,12,13) அறியமுடிகின்றது.

இக்காலகட்டத்தில் அதாவது சோரநாகன் முடிசூடிய காலம்வரை (கி.மு 29 - 3) உறுகுணையின் வடக்கு கிழக்கு பகுதியான மட்டக்களப்பில் தமிழரது அரசியல் செல்வாக்கு (ஆட்சி) நலிவுற்றிருந்ததுடன், சைவசமயமும் செழிப்பிழந்திருந்தது. சைவாலயங்கள் பொலிவிழந்து காணப்பட்டன. இக்காலத்தில் விண்டு அணையை (விந்தனை) அரசிருக்கையாக்கி மட்டக்களப்பு அரசை இயக்கர். நாகர் பொறுப்பெடுத்து ஆட்சி செய்தனர்.

கலிங்க குலத்து தமிழர்கள் போற்றி வந்த சிவசமயமான (சிவவழிபாடு) சைவத்தை ஒதுக்கி விட்டு இவர்கள் சிறுதெய்வ வழிபாட்டை மட்டக்களப்பில் முன்னிலைப் படுத்தியிருந்தனர் இயக்கர் பௌத்த சமயத்தைத் தழுவியிருந்தவர்களாதலால் மட்டக்களப்பில் சைவசமயம் பாதிப்புக்களை எதிர்நோக்கியிருந்தது. இதன் பயனாக மட்டக்களப்பில் சிறந்திருந்த சிவாலயங்கள் பல பொலிவிழந்து காணப்பட்டன.

இவ்வேளை, வரலாற்றுத் தொன்மைமிக்க நகரங்களான சங்குமன்கண்டி, சாகாமம், நந்தகிரி (முள்ளிக்குளம்) பொத்தானை போன்ற இடங்களில் அமைந்திருந்த சிவாலயங்கள் மற்றும் கலந்தன் ஊர் (கலந்தகாமம்) சிவாலயம் என்பனவற்றுடன் கிழக்குக் கரையில் புகழ் பூத்த சிவவாலயமாக விளங்கியிருந்த சங்குமன் கண்டிமுனை இறக்காவில் சிவாலயமும் பொலிவிழந்து காட்சியளித்தது.

இவ்வேளையில், மட்டக்களப்பில் தமிழரது அரசியல் அதிகாரத்தை (ஆட்சி) மீண்டும் நிலை நிறுத்தவும் சைவசமயத்துக்குப் புத்துயிர் அளிக்கவும் வேண்டி, கலிங்க குலத்துத் தமிழ்ச் சைவனான இரஞ்சலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவன் உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டான் இவன் விந்தனை இயக்கர் குலத்துத் தலைவனின் அரசியல் ஆதிக்கத்தை மட்டக்களப்பில் வாழ்ந்திருந்த நாகர் குடியினரின் உதவியுடன் இல்லாதொழித்து மட்டக்களப்பைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தான் 1 திராவிடர் என்ற தமிழ்க் குடியினரான நாகர் கலிங்க குலத்து தமிழனான இரஞ்சலனுக்குத் தங்களது முழு ஆதரவை இவ்வேளை நல்கியிருந்தனர்.

## மட்டக்களப்பு தமிழ் மன்னர்கள்

கலிங்க குலத்து இரஞ்சலன், தமிழ் மன்னனான கூத்திகனால் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு நகரிலிருந்து (சம்மாந்துறை) தென் கிழக்கிலங்கையை பரிபாலித்து வரும் காலத்தில் 'சோரநாகன்' அனுரதபுரியில் முடிசூடி ஆட்சி புரிந்து வந்தான் இவன், மட்டக்களப்பு மன்னன் இரஞ்சலனிடம் திறை கேட்டுத் தனது தூதுவர்களை ஆனுப்பிவைத்தான் இவர்கள் புரிந்துணர்வுடன் கலந்துரையாடியதன் பின்னர், மட்டக்களப்பு மன்னன் அனுராதபுரி நகர் சென்று சோரநாகனைக் கண்டு நட்புடன் உரையாடி அரசியல் ஒப்பந்தம் (நட்புடன்படிக்கை) ஒன்றும் செய்து கொண்டான்.

இதன் மூலமாக மட்டக்களப்பு அரசைச் சுதந்திர இராச்சியமாக அனுராதபுரி மன்னன் சோரநாகன் ஏற்றுக் கொண்டான். இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பை வந்தடைந்த மன்னன் இரஞ்சலன் தனதுபடைத் தலைவனான ஶ்ரீகுலன் என்பவனை மட்டக்களப்பு மன்னன் ஆக்கியதுடன் இப்பிரதேசத்தில் தமிழரது செல்வாக்கை மேலும் நிலை பெறச் செய்ய வேண்டும் என்ற தனது நோக்கை நிறை வேற்ற வேண்டித் தமிழ்ச் சைவக் குடியினரை அழைத்துவர தென்னிந்தியா சென்றான்2 அனுராதபுரி மன்னன் சோரநாகனது காலத்தில் (கி.மு 3 - கி.பி 9) தென்கிழக்கிலங்கையில் தமிழரது அரசியல் செல்வாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் தழைத்திருந்ததுடன் சைவசமயமும் மீண்டும் பொலிவுபெறத் தொடங்கியிருந்தது.

மட்டக்களப்பை ஆட்சி புரிந்த கலிங்க குலத்து தமிழனான இரஞ்சலனும் அனுரதபுரியில் அரசு செலுத்திய சோரநாகனும் 'சமகாலத்து மன்னர்கள் எனக் கொள்ளுமிடத்து சோரநாகனின் ஆட்சிக் காலம் கி.மு 3ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி 9ஆம் ஆண்டுவரையாகும் என வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. இவனது ஆட்சியின் இறுதிக் காலத்திலேயே இரஞ்சலன் தனது படைத்தலைவனான ஸ்ரீகுலனை மட்டக்களப்பு மன்னனாக்கினான் இதேவேளை ஸ்ரீகுலன், கலியுகம் 3020ஆம் ஆண்டு தொடக்கம் 3070ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பை ஆட்சி புரிந்துள்ளதாக மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் ஏடுகுறிப்பிடும் ஆதலால் ஸ்ரீகுலன் கி.பி. 9ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி. 59ஆம் ஆண்டு வரை ஆட்சி புரிந்துள்ளான் என அறிய முடிகின்றது.

இக்காலம் தொடக்கம் மட்டக்களப்பை ஆட்சி புரிந்து வந்த அரசர்கள் இலங்கையில் ஆட்சி புரிந்து வந்த சிங்கள மன்னர்களுடன் நெருக்கமான உறவினைக் கொண்டிருந்தனர் அவர்கள் சில காலங்களில் சிங்கள மன்னர்களின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்த போதும் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே மட்டக்களப்பை ஆட்சி புரிந்து வந்துள்ளனர். இதனை வரலாற்றாய்வுகள் தெளிவுறுத்தும் 3 இச்சிற்றரசர்களை சூளவம்சம் போன்ற நூல்கள் உறுகுணை ஆட்சித் தலைவர்கள் என்று குறிப்பிடுகின்றன. மட்டக்களப்பில் கலிங்க குலத்து சிற்றரசர்கள் ஆட்சி கி.பி 1215ஆம் ஆண்டு வரை நிலவியிருந்தது. 3A

ஸ்ரீகுலனைத் தொடர்ந்து இவனது மகனான வாகூரன்(கலி 3070) என்பவன் நாப்பது வருடங்கள் (கி.பி 59 - 99) ஆட்சி புரிந்தான் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மான்மியம் (பக்கம் 23, 24) நூல் கூறும் இவனுக்குப் பின் பிரசன்ன சித்து (கலி 3110) என்பவன் நாப்பது வருடங்கள் (கி.பி 99 - 139) ஆட்சி புரிந்துள்ளதாகவும் இவனுக்குபின் இவனது மகனான தாசகன் (கலி 3150) என்பவன் மட்டக்களப்பில் நல்லாட்சி புரிந்துள்ளான் என்று மேலும் இந்நூல் கூறும்.

கி.பி இரண்டாம் நூற்றாண்டில் 'பிரசன்னசித்து' மன்னன் காலத்தில் (கி.பி 99 - 139) உன்னரசுகிரி என்ற புதிய இராச்சியப் பிரிவு ஒன்று மட்டக்களப்பின் தென் பிரதேசத்தில் தோற்றுவிக்கப்பட்டு கலிங்க குலத்து இளவலான புவனேய கஜபாகு என்பவனுக்கு கையளிக்கப்பட்டது (கலி 3130) இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பின் வடபகுதியை மட்டக்களப்பு நகரிலிருந்து (சம்மாந்துறை) பிரசன்னசித்துவும் பாணகை தொடக்கம் குமுக்கன் ஓயாவரை பரந்திருந்த உன்னரசுகிரி இராச்சியத்தை புவனேய கஜபாகுவும் ஆட்சி புரிந்து வந்தனர். 4

பிரசன்னசித்து மன்னனைத் தொடர்ந்து இவனது மகனான தாசகன் (கலி 3150) ஆட்சி புரிந்து வந்த காலத்தில் மனுநேய கஜபாகு (கலி 150) என்ற கலிங்க குலத்தவன் உன்னரசகிரியிலிருந்து ஆட்சி புரிந்து வந்தான் இவர்களுக்குப் பின்னர் தனசேனன் (கலி 3340) தினகரசேனன் (கலி 3370) பிரசேது (கலி 3420 - 3466) என்போர் மட்டக்களப்பு நகரிலிருந்தும், இக்கால கட்டத்தில் ஆடக சௌந்தரி (கலி 3180) சிங்க குமாரன் (கலி 3370) சிறிசிங்கன் (கலி 3420) என்போர் உள்ளரசகிரி நகரிலிருந்தும் மட்டக்களப்பை (அம்பாரை உள்ளடக்கிய) ஆட்சி புரிந்து வந்தனர்.

இவர்களுக்குப் பின் பானுசிங்கன் (கலி 3466) என்ற கலிங்க குலத்து மன்னன் மட்டக்களப்பு முழுவதையும் ஆட்சி புரிந்துள்ளான் இவன் அனுராதபுரி மன்னனான குமாரதீசன் என்பவனின் மகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் தேவியாகக் கொண்டிருந்தான் 5. இவனுக்குப் பின் அமரசேனன் (கலி 3466) குணசிங்கன் (கலி 3500) ஆகியோர் மட்டக்களப்பை ஆட்சி புரிந்துள்ளனர், மட்டக்களப்பு மன்னன் குணசிங்கனும் மகாசேனனுக்குப் பின் அனுராதபுரியில் மன்னனான மேகவர்ணனும் சமகாலத்தவர்களாவர் (மட்டக்களப்பு மான்மியம் பக்கம் 42)

கலிங்க குலத்துத் தமிழ் மன்னர்களான இவர்களது காலத்தில், ஆதாவது சோரநாகன் காலந்தொட்டு மகாசேனன் ஆட்சிக்கு வந்த காலம் வரையுள்ள காலத்தில் உரோகணத்தின் வடக்கு, கிழக்கு பகுதியான தென்கிழக்கிலங்கையில் தமிழும் சைவமும் செழித்திருந்தன. தமிழரிடையே பௌத்தமும் நிலவியிருந்தது. இக்கால கட்டத்தில் மட்டக்களப்பில் (அம்பாரை உள்ளிட்ட மட்டக்களப்பு) ஆட்சி புரிந்து வந்ததமிழ்ச் சிற்றரசர்கள் சுதந்திர ஆட்சியாளர்களாகவே செயற்பட்டுவந்தனர். இக்கால கட்டத்தில் அனுராதபுரியில் காலத்துக்குக் காலம் இடம் பெற்று வந்த அரசுரிமைப் போட்டிகள், அரசியல் நெருக்கடிகள் குழப்பங்கள் இலங்கை அரசியலில் அவ்வப்போது நிலவி வந்த தமிழர் அரசியல் செல்வாக்கும் இதற்கு சாதகமாக அமைந்தன. எனலாம்.

## இலங்கை அரசியல் நிலை

வர்த்தககாமினியின் மகனான சோரநாகன் ஆட்சி புரிந்த காலத்தில் தான்முன்பு கிளர்ச்சிக் காரனாக விருந்த காலத்தில் தனக்குப் புகலிடம் கொடுக்காத பதினெட்டு பௌத்த விகாரைகளை அழித்தான் என அறிய முடிகின்றது இவனுடைய அரசியான அனுலாதேவி இவனை நஞ்சிட்டுக் கொன்றாள் (மகா, அத்தியாயம் 34 : செய்யுள் 14) சோரநாகனுக்குப் பின் திஸ்ஸன் என்பவன் மன்னாகிய கி.பி. 9 - 12 வரை ஆட்சி புரிந்தான். அனுலாதேவி இவனையும் நஞ்சிட்டுக் கொன்றுதானே ஆட்சிபுரிந்தாள் இவள் ஒருவர் பின் ஒருவராகப் பலரை மணந்து நஞ்சூட்டிக் கொன்றுவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவள் அனுராதபுரியில் பெரும் தச்சனாக விருந்த 'வட்டுகன்' என்னும் தமிழன் மேல் விருப்பங் கொண்டு அவனுக்கு அரசாட்சியைக் கொடுத்தாள் அவன் இரண்டு வருடங்கள் ஆட்சி செய்தான். அவனைக் கொன்ற பின்பு அரண்மனையில் பூசைகள் செய்து கொண்டிருந்த நீலியன் என்னும் தமிழ்ப் பிராமணனுக்கு ஆட்சியைக் கொடுத்தாள் அவன் ஆறு திங்கள் ஆட்சி செய்த பிறகு அவனையும் நஞ்சிட்டுக் கொன்றாள் பின்னர்தானே நான்கு ஆண்டுகள் (கி.பி. 12 - 16) அரசாண்டாள்.

மகாசூலனுடைய இரண்டாவது மகன் குட்டகண்ணதீசன் அனுலாதேவியிடம் கொண்ட பயத்தால் ஓடிப்போய் தீட்சை பெற்று வசித்து வந்தான் இவ்வேளை தலைநகருக்குத் திரும்பி வந்து ஒரு படைதிரட்டினான் கொடியவளான அனுலாவைக் கொன்று விட்டு அவன் இருப்பதிரண்டு வருடங்கள் (கி.பி 16 - 38) ஆட்சி புரிந்தான் (மகா, அத்தியாயம் 34 : செய்யுள் 28, 29, 30) இவனுக்குப் பின் இவனது மகனான பாதிகாபயன் முடிசூடி இருபத்தெட்டு ஆண்டுகள் (கி.பி 38 - 66) ஆட்சி புரிந்தான்.

இவனுக்குப் பின் இவனது தம்பியான 'மகாதாட்டிக மகாநாகன் முடிசூடிப் பன்னிரண்டு ஆண்டுகள் (கி.பி 66 - 78) ஆட்சி செய்தான் இவனுடைய இராணியின் பெயர் தமிழாதேவி (தமிழ்த்தேவி) என்பதாகும் இதனால் இவன் தமிழ் அரசன் குமாரத்தியைத் திருமணம் செய்திருந்தான் எனத் தெரகின்றது. மகா தாட்டிக மகாநாகனுக்கும், தமிழாதேவிக்கும் பிறந்த மகன் ஆமண்டகாமினி என்பவனாவான் இவன் ஒன்பது ஆண்டுகள் (கி.பி 78 - 88) ஆட்சி புரிந்தான்.

இவனுடைய தம்பியான "கணிராஜானு திஸ்ஸன்" இவனைக் கொன்று மூன்று ஆண்டுகள் (கி.பி 88 - 91) அரசாண்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனுக்குப்பின் 'சூளாபாயன்" ஓராண்டும் (கி.பி 91 - 92) அவனுடைய தங்கையான சீவாலி என்பவள் நான்கு திங்களும் (கி.பி 92) ஆட்சி புரிந்தனர். சீவாலியின் உறவினனான இளநாகன் அவளை அரச பதவியிலிருந்து நீக்கித் தான் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். 6 இள நாகனது முடிசூட்டு விழா ஊர்வலம் சென்றவேளை இலம்பகன்னர் என்ற இனத்து அரச ஊழியருக்கும் இவனுக்கு மிடையில் பிணக்கொன்று ஏற்பட்டது.

இதனால் அவமானப்பட்ட இலம்பகர்ணகள் ஒன்று சேர்ந்து கலகம் செய்து இளநாகனைக் கைப்பற்றிச் சிறையிலிட்டனர் இளநாகன் சிறையிலிருந்து தப்பி மகாதீர்தத்தையடைந்து அங்கிருந்து தமிழ் நாட்டுக்குச் சென்றான் அங்கு மூன்று ஆண்டுகள் தங்கியிருந்து படையுதவி பெற்று (தமிழ்ச்சேனை) உறுகுணைக்கு வந்து அங்கும் படைகளைத் திரட்டி இலம்பகர்ணர் மீது போர்தொடுத்து அவர்களை வெற்றி கொண்டு ஆட்சியை மீட்டுக் கொண்டான் இளநாகன் ஆறு ஆண்டுகள் (கி.பி 95 - 101) ஆட்சி புரிந்தான் என அறிய முடிகின்றது.7

இவனுக்குப் பின் இவனது மகனான சந்தமுகசிவன் இலங்கையில் எட்டு ஆண்டுகள் எட்டு மாதங்கள் (கி.பி 101 - 110) ஆட்சி புரிந்தான் இவனுடைய இராணியின் பெயர் தமிழாதேவி (தமிழ்த்தேவி) சந்தமுக சிவனுடைய தம்பியான அசலாக திஸ்ஸன் சந்தமுக சிவனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றி ஏழு ஆண்டுகள் எட்டுமாதங்கள் (கி.பி 110 - 118) ஆட்சி புரிந்தான் அசலாலக திஸ்ஸனும் அவனுடைய அரண்மனைக் காவலனான சுபன் என்பவனும் உருவத்தில் ஒரே விதமாகக் (உருவ ஒற்றுமை) காணப்பட்டனர்.

அசலாலகதீசன் ஒரு விசித்திரமான விளையாட்டினைப் புரிந்தான் தன்னைப் போலிருந்த சுபனுக்கு அரச ஆடைகளை அணிவித்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் சிம்மாசனத்திலிருத்தியும் தான் சுபனின் ஆடைகளை அணிந்து வாயிற் காப்போனாக மாறியும் அரண்மனை அமைச்சர்கள் முதலானோரை ஏமாற்றி வந்தான். ஒரு நாள் சிம்மாசனத்திலிருந்த சுபன் வாயிற் காப்போன் வேடத்திலிருந்த மன்னனைப் பிடித்து சிரச்சேகம் செய்து விடுமாறு கட்டளையிட்டான் அவ்வாறே நடைபெற்று முடிந்தது இதன் பின்னர் சுபராஜா என்ற பெயரோடு ஆறு வருடங்கள் (கி.பி 118 - 124) இவன் ஆட்சி புரிந்தான்.

இவனுக்குப்பின் இலங்கையில் ஆட்சி புரிந்த வசபன் கஜபாகு, கனிஷ்டதீசன் வொகாரிக தீசன் ஆகிய சிங்கள மன்னர்களது ஆட்சிக் காலத்தில் இம்மன்னர்கள் இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதியில் அதிகாரம் செலுத்தி வந்த சிற்றரசர்களுடன் நல்லுறவுகள் கொண்டிருந்தனர். இவர்கள் இக்காலத்தில் வடக்கு கிழக்கு பகுதிகளுடன் கொண்டிருந்த உறவுகள் பெரும்பாலும் சமூக, சமய, கலாசார உறவுகளாகவே விருந்து வந்துள்ளன.

சுபராஜனுடைய ஆட்சிக் காலத்தில் சோதிடன் ஒருவன் கூறிய வதந்தியொன்று பரவியிருந்தது வசபன் என்னும் பெயருடையவன் சுபராஜனை வென்று அரசாளப் போகின்றான் என்பது அந்த வதந்தியாகும் இதனைக் கேட்ட சுபராஜன் நாட்டிலுள்ள வசபன் என்னும் பெயர் உள்ளவர்களையெல்லாம் கொன்று விடுமாறு கட்டளையிட்டான் அவ்வாறே வசபன் என்ற பெயர் கொண்டவர்கள் கொல்லப்பட்டனர். இவ்வேளை இலம்பகர்ண மரபினைச் சேர்ந்த வசபன் (உத்தரதேசத்தில்) வடபகுதியில் தனது மாமனாரான படைத்தளபதி ஒருவனிடம் பணியாற்றி வந்தான். 8

மன்னனின் அறிவித்தலைக் கேட்ட படைத்தளபதி தனது மருமகனை மன்னனிடம் ஒப்படைப்பதன் மூலமாகப் பரிசில்கள் பெற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம் கொண்டான் வசபனையும் தனது மனைவி பொத்தாவையும் அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு ஒரு நாள் அதிகாலை வந்தான் மனைவியையும் வசபனையும் வாசலில் நிறுத்தி விட:டு படைத்தளபதி உள்ளே சென்றதும் மனம் பொறுக்காத படைத்தலைவனின் மனைவி ஆயிரம் பொற்காசுகள் வசபனிடம் கொடுத்து ஓடித் தப்புமாறு துரத்தி விட்டாள் இவன் படை திரட்டி ஒவ்வொரு கிராமமாகத் தன் வசப்படுத்தி உறுகுணையை அடைந்தான்.

இவ்வாறு இரண்டு வருடங்கள் சென்ற நிலையில் தேவையான படை வீரர்களுடன் வசபன் தலை நகரை நோக்கிச் சென்றான் அவ்வேளை அனுராதபுரியில் ஆட்சி புரிந்த சுபராஜனை (கி.பி 118 - 124) வெற்றி கொண்டு தலை நகரில் தனது ஆட்சியை நிறுவினான் இவனுடைய மாமன் போரில் இறந்து விட்டான் தனக்கு முன்னர் உதவி செய்தவளும் மாமன் மனைவியுமான "போதாவை" வசபன் தனது இராணியாக்கிக் கொண்டான். 9 நல்ல காரியங்களைச் செய்வதில் நிரந்தரமாக மகிழ்ச்சியடைந்தவனாக இவன் நாப்பத்தி நாலுவருடங்கள் (M.V 35 : 100) ஆட்சி செய்தான்.

இவனது நீண்டகால ஆட்சி (கி.பி 124 - 168) அமைதியாக நடந்தது மேலும் இவனது ஆட்சி உறுகுணையிலும் நிலவியிருந்த தென்பதற்கு உறுகுணையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் சான்றுகளாகும். 10 வசபன் அனுராதபுரியில் ஆட்சி புரிந்த காலத்தில் 'இசிகிரியன் என்பவன் வட இலங்கை (நாகதீபம்) யை ஆண்டதாக வல்லிபுரத்தில் கிடைத்த பொற்சாசனம் குறிப்பிடுகின்றது. (Paranavithna-S Vallipuram Gold Plate Eplgraphia Zaylanica. voliv P237) இதிலிருந்து இலங்கையின் வட பகுதி நாகதீபம் என அக்காலத்தில் வழங்கப்பட்டது தெளிவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசபனுடைய மறைவையடுத்து அவனுடையமகன் வங்கநாசிக தீசன் (கி.பி 168 - 171) அனுராதபுரியில் மூன்று வருடங்கள் ஆட்சி புரிந்தான் சுபராஜனுடைய மகளான 'மகாமத்தா' என்பவளை இவன் திருமணம் செய்திருந்தான் இந்தக் காலத்தில் இலங்கையின் வடக்கிலிருந்த நாகநாட்டை வளைவணன் என்னும் நாகர்குல அரசன் ஆட்சி புரிந்தான் நாகர் திராவிட இனத்தவர்வளைவணனுடைய அரசியின் பெயர் வாசமயிலை, இவர்களின் மகள் பீலிவளை என்பதாகும். (தமிழ் நாட்டு வரலாறு - சங்ககால அரசியல் பக்கம் 631) வங்கநாசிகனுடைய மறைவுக்குப் பின்னர் அவனுடைய மகன் கஜபாகு காமணி இருபத்திரண்டு வருடங்கள் ஆட்சிபுரிந்தான் (கி.பி 171 - 193) என அறிய முடிகின்றது. 11

இவன் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு கோயில் எழுப்பியபோது அந்த விழாவில் கலந்து கொண்டான் என்பதைச் சிலப்பதிகாரம் வரந்தருகாதை (பாடல் வரி 155 - 156) குறிப்பிடும் கஜபாகு மன்னனால் இலங்கையில் கண்ணகி வழிபாடு அறிமுகம் செய்யப்பட்டதாக வரலாற்று நூல்கள் குறிப்பிடு கின்றன. கஜபாகு கண்ணகி சிலைகளையும் கண்ணகியின் காற்சிலம்பையும் எடுத்துக் கொண்டு தனது பரிவாரங்களுடன் யாழ்ப்பாணத்துக்கு அருகேயுள்ள 'சம்புகோள' என்னும் திருவடி நிலையில் இறங்கினான். இலங்கை திரும்பிய கஜபாகு கண்ணகி, வழிபாட்டை இங்கு தொடங்கி கண்ணகிக்குப் பெருவிழா எடுத்தான்.

இலங்கையில் கஜபாகுவால் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது கண்ணகி ஆலயம் யாழ்ப்பாணம் திருவடி நிலைக்கு அருகாமை யிலுள்ள அங்கணாகடவையில் அமைந்திருந்தது இதன் பின்னர் இம் மன்னன் அங்கிருந்து அனுராதபுரம் செல்லும பாதைகளிலுள்ள பல ஊர்களில் கண்ணகிக்கு ஆலயங்கள் நிர்மாணித்ததுடன் அவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைகள் புரிவதற்காக பூசாரிகளையும் நியமித்தான் இவ்வாறு கஜபாகு மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட கண்ணகி ஆலயங்களில் பத்தாவது ஆலயம் வற்றாப்பளையிலுள்ள கண்ணகி ஆலயமாகும். இறுதியாக கஜபாகு அனுரத புரியில் ஒரு கண்ணகி ஆலயத்தை நிர்மாணித்தான். இவ்வாலயம் இசுருமுனிய விகாரைக்கருகிலுள்ள தடாகத்தின் முன்னால் நிர்மாணிக்கப்பட்டது. 12

கஜபாகுவுக்கு பின் அவனுடைய மாமன் மகலக்கநாகன் ஆறு ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான் (கி.பி 193 - 199) இவனால் நிர்மாணிக்கப்பட்ட விகாரைகளுள் நாகதீபத்தின் சாலிபர்வத விகாரை குறிப்பிடத்தக்கது மகலக்க நாகனுக்கு பின் அவனுடைய மகனான பாதிக்க தீசன் (கி.பி 199 - 223) இலங்கையில் இருபத்திரண்டு வருடங்கள் ஆட்சி புரிந்தான் (M.V 36 : 1) பாதிக்க தீசனின் மறைவையடுத்து அவனுடைய தம்பி கனிஷ்டதீசன் பதினெட்டு வருடங்கள் ஆட்சி செய்தான் (கி.பி 223 - 241) இவன் நாக தீபத்திலுள்ள ஆலயத்தைப் புனர் நிர்மாணம் செய்தான் அக்காலத்தில் நாகநாட்டில் வாழ்ந்திருந்த தமிழ்ப் பௌத்தர்களின் வழிபாட்டுத்தலமாக விளங்கி வந்த ஆலயத்தையே இவன் புனர் நிர்மாணம் செய்தான் என அறிய முடிகின்றது. இவனுக்குப் பின் அவனுடைய மாமனானகுல நாகன் மன்னனானான் (241) இவனுக்குப் பின் இவனது தம்பியான குடநாகன் தமையனைக் கொன்று மன்னனானான் இவன் இரண்டு ஆண்டுகள் (கி.பி 241 - 243) ஆட்சி புரிந்தான் 13

இவனது காலத்தில் பஞ்சம் நிலவியது, குடநாகனின் பட்டத்து இராணியின் சகோதரனான சேனாதிபதி ஸ்ரீ நாகன் மன்னனுக் கெதிராக புரட்சி செய்து குடநாகனைத் துரத்தி விட்டு அரசனானான் (கி.பி 244 - 263) இவனுக்குப் பின் ஸ்ரீநாகனின் மகனான வொகாரிக்க தீசன் மன்னனானான் இவன் நாகதீபத்தில் (நாகநாடு) திஸ்ஸ விகாரையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுவித்தான். 14 இவன் நீதி நெறியுணர்ந்து இருபத்திரண்டு வருடங்கள் (கி.பி 263 - 285) ஆட்சி புரிந்துள்ளான் என்பதை அறியமுடிகின்றது.

இவனது இளைய சகோதரனான அபயநாகன் மகாராணியின் கள்ளக் காதலனாவான் இது வெளியில் தெரிய வந்ததும் தப்பி ஓடி நம்பிக்கையான வீரர்களையும் தமிழ்ப் போர்வீரர்களையும் சேர்த்துக் கொண்டு அனுரதபுரம் வந்து வெற்றி கொண்டு முடிதரித்தான் மலைநாட்டுக்குத் தன் மனைவியோடு தப்பியோடிய தமையனைத் துரத்திச் சென்று கொன்று விட்டு அவன் மனைவியோடு திரும்பி வந்து எட்டு வருடங்கள் (கி.பி 285 - 293) ஆட்சி புரிந்தான்.

அபயநாகனின் மறைவையடுத்து இவனது தமையனின் மகனான விஜய குமாரன் (கி.பி 295 - 296) மன்னனாக முடிசூடினான் இவ்வேளை, மகியுங்கனையில் வாழ்ந்திருந்த சங்கதீசன், சங்கபோதி, கோதகாபயன் ஆகிய மூன்று இலம்பகர்ண நண்பர்கள் மன்னனின் சேனையில் பணியாற்ற அனுராதபுரம் வந்தனர் திஸ்ஸகுளத்தருகாய் இவர்கள் நடந்து வந்து கொண்டிருந்த வேளை ஒரு அந்தகன் இந்த மண்ணினை ஆளப் போகும் மூவர் செல்கின்றார்கள் என உரைத்தான்.

இதன் பின்னர் இவர்கள் அரசனுடைய ஆலோசகர்களாக பணியாற்றி, மன்னனை எவருமறியாமல் கொன்று சங்கதீசனை மன்னாக்கினர் (கி.பி 296 - 300) இவனை நஞ்சூட்டிக் கொன்ற சங்கபோதி ஸ்ரீசங்கபோதி என்ற பெயருடன் அரசனானான் (கி.பி 300 - 302) பின்னர் கோதபயன் சங்க போதியைத் துரத்தி விட்டு மன்னனானான் ஸ்ரீசங்கபோதி கோதகாபயன் படையோடு சண்டையிட விரும்பாது நகரின் தென்வாயில் வழியாகக் காட்டிற்குத் தப்பியோடினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோதகாபயன் (கி.பி 302 - 315) தனது ஆட்சிப் பெயராக 'மேகவண்ண அபயன்' எனக் கொண்டான் இவனுக்குப்பின்னர் அவனது மகனான ஜெட்டதீசன் முடிசூடிக் கொண்டான் ஜெட்ட தீசன் தனது முடியுரிமையை விரும்பாத அமைச்சர்களையும் ஏனையோரையும் அழித்துள்ள முறை வியப்பானது தந்தையின் இறுதி மரண ஊர்வலத்தில் ஜெட்டதீசனின் தம்பி முன் செல்ல அவனைத் தொடர்ந்து இறந்த மன்னனின்சிதை சென்றது அதன் பின்னர் அமைச்சர்கள் சென்றனர் இறுதியில் ஜெட்டதீசனும் அவனாட்களும் சென்றனர் கோட்டை வாயிலை விட்டு சிதை வெளியேறியதும் வாயில் உடனடியாக மூடப்பட்டு அமைச்சர்கள் அனைவரும் ஜெட்டதீசனின் வீரர்களால் கொல்லப்பட்டனர். (கலாநிதி க. குணராசா - 2003) என அறியமுடிகின்றது.

தெத்தீசனுடைய (கி.பி 315 - 325) மரணத்திற்குப் பின்னர் அவனுடைய தம்பியான மகாசேனன் (கி.பி 325 - 357ஃ மன்னனானான் இவன் இருபத்தேழு வருடங்கள் இலங்கையில் ஆட்சிபுரிந்தான் (மகா அத்தியாயம் 36 : செய்யுள் 27, 28) கி.மு. 29ஆம் ஆண்டு தொடக்கம் மகாசேனன் வரையுள்ள கால கட்டத்தில் (கி.பி 325) இலங்கையில் ஆட்சி புரிந்த சிங்கள ஆட்சியாளர்களில் இலம்பகர்ணர் என்ற ஒர குழுமத்தின் ஆதிக்கம் வசபன் காலம் தொடக்கம் (கி.பி 124) மகாசேனன் ஆட்சிக்காலம் வரை நீடித்திருந்தது.

வசபன் இலங்கையில் இலம்பகர்ணர் ஆட்சியைத் தொடங்கிய முதல் அரசன் ஆவான், பௌத்தர்களாகவிருந்த இவர்கள் அக்காலத்தில் தமிழ்ப் பௌத்தர்கள் பெருமளவில் வாழ்ந்திருந்த வட இலங்கை (நாகதீபம்) யுடன் நெருக்கமான சமூகசமய, கலாசார உறவுகளைக் கொண்டிருந்தனர் இலம்பகர்ண மன்னர்களுள் கஜபாகு (கி.பி 171 - 192) முக்கியமானவன் ஆவான் வடஇலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நாகநாடு) கண்ணகி வழிபாட்டை அறிமுகம் செய்து வைத்தவன் இவனாவான்.

'இலம்பகர்ணர்' என்போர் பாண்டிய நாட்டினர் எனத் தெரிகின்றது இலம்பகர்ணர் பாண்டிய நாட்டுத் தமிழ் இனத்தவர் என்றும் பாண்டிய நாட்டிலிருந்து குடியேறி அரச ஊழியம் செய்தவர் என்றும் வரலாற்றுக் குறிப்புண்டு.

இக்காலத்தில் குறிப்பாக சோரநாகன் (கி.மு 3 - கி.பி 9) ஆட்சிக் காலம் தொடக்கம் மகாசேனன் வரையுள்ள காலத்தில் உறுகுணையின் வடக்கு, கிழக்கு பகுதியான தென் கிழக்கிலங்கையில் (அம்பாரை உள்ளிட்ட மட்டக்களப்பு) தமிழரது அரசியல் செல்வாக்கே நிலைத்திருந்தது கலிங்க குலத்துத் தமிழ் அரசர்களது ஆட்சி சிறப்புடன் விளங்கியிருந்தது இவர்கள் சுதந்திரமுள்ள ஆட்சியாளர்களாக செயற்பட்டு வந்தனர். இவர்களது நல்லாட்சியில் தமிழும், சைவமும் இப்பிராந்தியத்தில் முன்னிலை பெற்றிருந்தன. தமிழரிடையே பௌத்தமும் நிலவி வந்தது பௌத்த தமிழர்களும் வாழ்ந்திருந்தனர்.

இவ்வேளை சங்கமன்கண்டி முனை 'இறக்காவில்' சிவாலயம் சிறப்புடன் விளங்கி வந்ததுடன் கிழக்கிலங்கையில் புகழ்பூத்த சிவாலயங்களிலொன்றாக மிளிர்ந்திருந்தது. இவை பற்றியெல்லாம் இனிவரும் அத்தியாங்களில் விளக்கமாகக் கண்டு தெளியலாம்.

**அடிக்குறிப்புக்கள்**

1) இக்காலத்தில் உகந்தை சங்குமன் கண்டிசாகாமம், மண்டூர் நாகமேடு (ஒலுவில்) தீகவாபி போன்ற இடங்களில் நாகர் என்ற தமிழ்க்குடியினர் பெருமளவில் வாழ்ந்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) மட்டக்களப்பு மானமியம்
பக்கம் 21 - 23 பதிப்பாசிரியர் எப். எக்ஸி நடராசா - 1962

3) தம்பிலுவில் கண்ணகி வழிபாடு
பக்கம் 59, நா. நவநாயக மூர்த்தி - 1999
34 பண்டைய ஈழவரலாற்றில் கலிங்கர் என்பது தமிழ்ச் சைவரையே குறிப்பதாகும்.

4) உன்னரசுகிரி இராஜதானி என்பது உகந்தை 'குடும்பிகல' பிரதேசமாகும் உன்னரசுகிரிஅரசானது மட்டக்களப்பு இராச்சியத்தின் இணை அரசாகவே இக்காலத்தில் விளங்கி வந்தது.

5) மட்டக்களப்புமான்மியம்
பக்கம் 42 பதிப்பாசிரியர் எப்.எக்ஸி நடராசா - 1962.

6) தமிழ் நாட்டு வரலாறு சங்ககால அரசியல்
பக்கம் 627, 628 இலங்கையில் தமிழர் கட்டுரை தமிழ் நாட்டு அரசு வெளியீடு - 1983

7) மகாவம்சம் - அத்தியாயம் 35 : செய்யுள் 15-45

8) மகாவம்சம் - அத்தியாயம் 35 : செய்யுள் 59 - 60

9) மகாவம்சம் - அத்தியாயம் 35 : செய்யுள் 67 - 70

10) பண்டைய ஈழம், பாகம் I பக்கம் 103 வே.க நடராசா

11) மகாவம்சம் - அத்தியாயம் 35 : செய்யுள் 115

12) தம்பிலுவில் கண்ணகி வழிபாடு
பக்கம் 78, 79 நா. நவநாயக மூர்த்தி - 1999

13) மகாவம்சம் - அத்தியாயம் 36 : செய்யுள் 18, 19

14) மகாவம்சம் தரும் இலங்கை சரித்திரம்
பக்கம் 130, 131 கலாநிதி க. குணராசா - 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கி.பி முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில்
### மட்டக்களப்பும் சங்குமன்கண்டி இறக்காவில் சிவாலயமும்

கி.பி முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் தென் கிழக்கிலங்கையின் சமூக, சமய, அரசியல் நிலை பற்றியும் இக்கால கட்டத்தில் சங்குமன் கண்டி இறக்காவில் சிவாலயம் பற்றியும் நோக்குமிடத்து தென்கிழக்கிலங்கையில் (அம்பாரை உள்ளிட்ட மட்டக்களப்பு) தமிழரது அரசியல் செல்வாக்கும் சைவமும் சிறப்புடன் விளங்கி வந்த இக்கால கட்டத்தில் சங்கமன் கண்டி பிரதேசத்தில் தமிழர் ஆட்சி நிலவியிருந்ததுடன், சைவசமயமும் செழிப்புடன் விளங்கி வந்ததை அறிய முடிகின்றது.

சோரநாகன் (கி.மு. 3 - கி.பி 9) என்பவன் இலங்கையில் ஆட்சிபுரிந்த காலத்தில், இரஞ்சலன் என்பவன் மட்டக்களப்பில் ஆட்சி புரிந்தான் கலிங்க குலத்து அரசனான இவன் மட்டக்களப்பில் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து மீண்டும் சைவசமயம் இப்பிரதேசத்தில் புத்துயிர் பெற்று செழிப்புறத் தொடங்கியது சுதந்திரமுள்ள சிற்றரசனாக இரஞ்சலன் மட்டக்களப்பில் ஆட்சி புரிந்தான்.

இவனுக்குப்பின் ஸ்ரீகுலன் (கி.பி 9 - 59) என்பவன் ஆட்சிக்கு வந்தான் படையாட்சித் தலைவனான இவன் இரஞ்சலனின் படைப்பிரிவு ஒன்றிற்கு தலைமைவகித்த சோழநாட்டினனாகவோ அல்லது தொண்டை நாட்டினனாகவோ கொள்ள முடியும் 1 மட்டக்களப்பில் ஆட்சி புரிந்த ஸ்ரீகுலனின் அரசியல் செல்வாக்கு தெற்கே மாணிக்க கங்கை வரை பரந்திருந்தது 2

இவன் ஏராளமான வயற்காணிகளை அபிவிருத்தி செய்து நெற்பயிர்ச் செய்கையை விரிவு படுத்தினான். தமிழ்ச்சைவனான ஸ்ரீகுலனது ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பில் தமிழும், சைவமும் முன்னிலை பெற்றிருந்த போதும் பௌத்தமும் நிலவியிருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த தமிழர்களும் வாழ்ந்திருந்தனர் பௌத்த சமயத்துக்கும் ஸ்ரீகுலன் ஆதரவளித்து வந்தான் ஐம்பது வருட நீண்ட கால இவனது ஆட்சியில் தெற்கே மாணிக்ககங்கை வரை இவனது சமயப் பணிகள் விரிவு பெற்றிருந்தன.

இவனுக்குப் பின், இவனது மகனான வாசூரன் (கி.பி59 - 99) என்பவன் மட்டக்களப்பு மன்னனானான் நாற்பது வருடங்கள் சுதந்திரமுள்ள சிற்றசனாக இவன் மட்டக்களப்பை ஆட்சி புரிந்தான் இவனது ஆட்சி தெற்கே மாணிக்க கங்கை வரை பரவியிருந்தது பல நீர்பாசனத் திட்டங்கள் இவனது காலத்தில் முன்னெடுக்கப் பட்டிருந்தன. இதன் மூலம் நீர்ப்பாசனம் பெற்ற ஒரு பிரதேசம் வாசூர வட்டை என அழைக்கப்பட்டிருந்தது 3 ஸ்ரீகுலன் வாசூரன் ஆகிய மன்னர்களது ஆட்சிக் காலத்தில் (கி.பி 9 - 99) இம் மன்னர்களது அரசியல் ஆதிக்கம் தெற்கே மாணிக்க கங்கை வரை நிலவியிருந்தது.

கி.பி முதலாம் நூற்றாண்டில் மட்டக்களப்பில் தமிழரது அரசியல் செல்வாக்கு (ஆட்சி) உன்னத நிலையிலிருந்தது சங்கமன் கண்டி உள்ளிட்ட நாகர்முனை பிரதேசம் (திருக்கோவில் பிரதேசம்) மட்டக்களப்பு தமிழக வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றிருந்தது4. இப்பிரதேசத்தில் அமைந்திருந்த சைவாலயங்கள் சிறப்புடன் விளங்கியிருந்தன இவ்வேளை சங்குமன் கண்டிமுனை இறக்காவில் சிவாலயம் பொலிவுடன் விளங்கியிருந்த தெனலாம்.

இறக்காவில் ஊரில் வாழ்ந்து வந்த தமிழ்ச் சைவர்களான, கலிங்கர், பாண்டியர், நாகர் என்ற திராவிடக்குடியினரின் பக்திக்கும், நம்பிக் கைக்கும் உரிய தெய்வமாக இறக்காவில் ஆலயத்தில் குடி கொண்டு அருள்பாலித்து வந்த சிவலிங்கப் பெருமான் விளங்கியிருந்தார்.

வாசூரனைத் தொடர்ந்து, இவனது மகனான பிரசன்னசித்து (கி.பி 99 - 139) என்பவன் ஆட்சிக்கு வந்தான் மட்டக்களப்பு நகரைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சம்மாந்துறை) தனது அரசிருக்கையாகக் கொண்டு ஆட்சி செலுத்தி வந்த இவனது காலத்தில், கலிங்க குலத்து இளவரசன் புவனேய கஜபாகு என்பவனால், திருக்கோணேஸ் வரத்தில் ஆட்சி உரிமை பெற்றுக் கொடுத்ததுடன் நாகர்முனை (திருக்கோவில்) சுப்பிரமணியர் ஆலயத் திருப்பணியும் இடம் பெற்றுள்ளது.

சோழ நாட்டிலிருந்து சிற்பிகளை வரவழைத்து புவனேயகஜபாகு இத்திருப்பணியை பூர்த்தி செய்து கொடுத்ததின் பிரதிபலனான மட்டக்களப்பின் தென்பகுதியில் 'உன்னரசகிரி' என்னும் ஆட்சிப் பிரிவை உருவாக்கிப் புவனேய கஜபாகுக்கு பிரசன்ன சித்து கையளித்தான். இக்காலம் தொட்டு உன்னரசுகிரி ஆட்சிப்பிரிவு மட்டக்களப்பு அரசுக்கு அனுசரணையாக இருந்து வந்ததுடன் தனியரசாக இயங்கி வந்தது.5

இதனைத் தொடர்ந்து புவனேய கஜபாகுவால் சோழ நாட்டிலிருந்து குடிமக்கள் வரவழைக்கப்பட்டு உன்னரசுகிரி இராச்சியப் பிரதேசத்தில் குடியேற்றப்பட்டனர். உன்னரசுகிரி இராச்சியம் அக்காலத்தில் தெற்கே மாணிக்கக் கங்கையும் வடக்கே பாணகையையும் மேற்கே கடவத்தையையும் கிழக்கே வங்காள விரிகுடாவையும் எல்லைகளாகக் கொண்டிருந்தது.

இவ்வேளை வடஇலங்கை இலம்பகர்ண மன்னன் வசபன் (கி.பி 124 - 168) அனுராதபுரியிலிருந்து ஆட்சி புரிந்து வந்தான் இவனது அரசியல் செல்வாக்கு வட இலங்கையில் நிலவியிருந்தது இவனது மேலாதிக்கத்தை ஏற்று 'இசிகிரியன்' என்ற தமிழ் அரசன் (வட இலங்கை) நாகதீபத்தை ஆட்சி புரிந்து வந்துள்ளான் என்பதை முன்னர் கண்டோம். வசபனது ஆட்சிக்காலத்தில் உறுகுணையில் அரசியல் அதிகாரம் பெற்றிருந்த சிற்றரசர்கள் இவனது மேலாதிக்கத்தைப் பெயரளவில் ஏற்றிருந்த போதும் சுதந்திர மன்னர்களாகவே இப்பிரதேசத்தில் செயற்பட்டு வந்தனர் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கி.பி இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்

பிரசன்ன சித்துவின் மறைவினையடுத்து இவனது மகனான தாசகன் (கலி 3150) என்பவன் மட்டக்களப்பு நகரைத் தனது இராஜதானியாகக் கொண்டு தென்கிழக்கிலங்கையின் வடபகுதியை ஆட்சி புரிந்து வந்தான் இவனைத் தாசுதன் என்று சில ஏட்டுப் பிரதிகள் குறிப்பிடுகின்றன. இவ்வேளை தென்கிழக்கிலங்கையின் தென் பகுதியை உன்னரசு கிரியிலிருந்து புவனேயகஜபாகுவின் மகனான மேகவர்ணன் என்ற மனுனேய கஜபாகு ஆட்சி புரிந்து வந்தான் இக்காலத்தில் இதன் ஆட்சிப்பரப்பு பாணகை தொடக்கம் குமுக்கன் ஓயாவரை பரந்திருந்தது. 6

இம் மன்னர்களது ஆட்சிக் காலத்தில் இவர்களிவரும் சேர்ந்து சங்கமன் கண்டி உள்ளிட்ட நாகர்முனை என்ற திருக்கோவில் பிரதேசத்தில் பல சமூக சமயப் பணிகளை மேற் கொண்டனர் சங்கமன் கண்டி தொடக்கம் (இறக்காவில் உள்ளிட்ட) சாகாமம் மொட்டைகல் (தாடகிரி) வரை இவர்கள் மேற்கொண்ட நீர்ப் பாசனத் திட்டங்கள் பற்றி அறிய முடிகின்றது. 7

மட்டக்களப்பு மன்னன் தாசகனின் சம்மதத்தோடு உன்னரசுகிரி மன்னன் புவனேயகஜபாகு என்ற மேகவர்ணனால் திருக்கோவில் ஆலயம் புனரமைப்பு செய்யப்பட்டதுடன், இவ்வாலயக் குடமுழுக்கானது அனுராதபுரம், யாழ்ப்பாண அரசர்களுக்கும் மற்றும் தென்னிந்திய அரசர்களுக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டு மிகவும் சிறப்பாக நடாத்தப்பட்டதாக மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் தொடர்பான ஏட்டுத்தகவல்கள் தெரிவிக்கின்றன. (வெல்லவூர் கோபால் - 2005) இவ்வாலயத்துக் காக சங்கமன் கண்டி தொடக்கம் தாடகிரி வரை பெருமளவு நெற்காணிகள் செப்பனிடப்பட்டு வழங்கப்பட்ட தற்கான சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் திருக்கோவில் சுப்பிரமணியர் ஆலய வளாகத்தில் சிவாலயமொன்று அமைந்திருந்தது என்பதை உறுதி செய்ய முடிகின்றது. இவ்வாலயத்துக்குப் பணிகள் செய்ய வேண்டி சோழநாட்டிலிருந்து பல குடிகள் இங்கு வரவழைக்கப்பட்டு ஆலய வளாகத்தை அண்டிய பகுதியில் குடியேற்றப்பட்டனர். மேலும் இச்சிவாலயத்தில் பூசைகள் புரிவதற்காக சைவ அந்தணர்களான (சிவப்பிராமணர்) வீரசைவக்குருமார் என்ற சங்கமர்களை மல்லிகார் சுனத்திலிருந்து வரவழைத்து தம்பட்டையில் குடியேற்றினர்.

கலிங்க குலத்து மனனர்களான மனுநேயகஜபாகு, தாசகன் ஆகியோரது சமூக, சமய செயற்பாடுகள் தென் கிழக்கிலங்கையில் தமிழ் மதமான சைவம் செழிப்புற வேண்டும் என்ற நோக்கிலேயே அமைந்திருந்தன. 8 இதனடிப்படையில் இம்மன்னர்கள் மேற்கொண்ட சைவப்பணிகள் சங்கமன்கண்டி உள்ளிட்ட இன்றைய திருக்கோவில் பிரதேசத்திலேயே குவிந்திருந்தன இவர்களது ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பு ஆட்சிப்பிரிவின் எல்லை பாணகையை உள்ளடக் கியிருந்தது.

மேலும் இவர்களது காலத்திலேயே பாலர்நகை நாடு என்ற பெயருடன் இக்கிராமம் தோற்றுவிக்கப்பட்டிருந்ததுடன் மட்டக்களப்பு ஆட்சியின் கீழ் உள்ளடங்கியிருந்தது.

மட்டக்களப்பை ஆட்சிபுரிந்து வந்த பிரசன்னசித்து, தாசகன் ஆகிய மன்னர்கள் சங்கமன் கண்டி நகரையும், தங்கள் அரசிருக்கையாகக் கொண்டிருந்தனர். கி.மு மூன்றாம் நூற்றாண்டில் கதிர்காம தமிழ் அரசர்களால் சங்கமன் கண்டி மலையில் நிர்மாணிக்கப்பட்ட அரசமாளிகையை புனரமைத்த இவர்கள் தங்கள் வாசஸ்தலங்களி லொன்றாக இம்மாளிகையையும் கொண்டிருந்தனர். இம்மாளிகையில் தங்கியிருந்தே உன்னரசுகிரி மன்னர்களான புவனேய கஜபாகு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுநேய கஜபாகு என்போர் தங்கள் சைவப்பணிகளை இப்பிர தேசத்தில் (நாகர்முனை) மேற் கொண்டு வந்தனர். 9

இக்காலத்தில் (கி.பி 2ஆம் நூற்றாண்டு) தென்கிழக்கிலங்கையில் வாழ்ந்திருந்த மக்களிடையே பௌத்தம், சைவம் ஆகியன நிலவி வந்த போதும் சைவசமயமே முன்னிலை பெற்று சிறப்புடன் விளங்கியிருந்தது இங்கு வாழ்ந்திருந்த பௌத்த தமிழர், பௌத்த சிங்களர் என்போர் பௌத்தர்களாக வாழ்ந்திருந்த போதும் தங்கள் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த இந்து சமய நம்பிக்கைகளையும் தொடர்ந்து இவர்கள் பேணிவந்தனர் ஆதலால், சைவமும், பௌத்தமும் அருகருகாய் நிலவி வந்தன.

ஆயினும், கரையோரப் பகுதிகளில் சைவசமயம் முன்னிலை பெற்றிருந்ததுடன் சிவாலயங்களும் சிறப்புடன் விளங்கி வந்தன. இதேவேளை தென்கிழக்கிலங்கையின் உட்பிரதேசங்களில், சைவமும், பௌத்தமும் மக்களிடையே நிலவி வந்ததுடன் சைவலாயமும், பௌத்த ஆலயமும் அருகருகாய் நிலவி வந்தன.

இக்காலத்தில், திருக்கோவில் சிவாலயம், இறக்காவில் சிவாயம், (ஏரகாவில்) சங்கமன்கண்டி மலை சிவாலயம், துவட்டா முனிவர் குகைக் கோவில் (சிவாலயம்) என்பன நாகர்முனை பிரதேசத்தில் புகழ் பெற்றிருந்த சிவாலயங்களாம். இவ்வேளை கலிங்கர் பாண்டியர் நாகர் என்ற திராவிடக் குடியினர் நிறைந்திருந்த இறக்காவில் கிராமத்தில் சைவர்களே தனிப் பெரும்பான்மையினராக வாழ்ந்தி ருந்ததுடன் கிழக்குக் கரையில் அமைந்திருந்த புகழ் பூத்த சிவாலயங்களிலொன்றாக சங்கமன் கண்டி முனை இறக்காவில் சிவாலயம் விளங்கியிருந்தது.

இக்கால கட்டத்தில் கிரேக்க வானவியல், புவியியல் அறிஞரான தொலமி (கி.பி 90 - 168) என்பவர் கி.பி 150இல் வரைந்த தேசப்படத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தீவு குறிக்கப்பட்டுள்ளது கி.மு இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க வானவியல், புவியியல் அறிஞரான ஏ. றாதோஸ் தீனிஸ் வரைந்த தேசப்படத்தைப் பின்பற்றி வரைந்த தொலமியும் இலங்கைத் தீவுக்கு தம்ரபேன் என்ற பண்டைய பெயரையே குறித்துள்ளார்.

தொலமிவரைந்த இலங்கைப் படத்தில் இலங்கையின் கரையோரம் முழுவதும் கோயில்களின் படங்களுடன் பெயர்களும் குறிப்பிடப் பட்டுள்ளன. (Inptolemy's Geography - 1968 Colombo Sinnathamby J.R - (EYLON) இப்படத்திலே தெற்கே டொஸ்ரா (Dagana) என தேவேந்திரமுனை காட்டப்பட்டுள்ளது தென் கிழக்கு முனையாக Bacbi Cinitas என்ற பெயருடன் கோயில்களின் படமும் Cetau promont என்ற முனையையும் காட்டியுள்ளார் அதற்குச் சிறிது மேலே Nanigiri எனக் காட்டியுள்ளார் Cetaupromont இவை என்பது சங்கமன் கண்டி முனையையும் அக்காலத்து இருந்த திருக்கோவில் போன்ற பழமையான கோயில்களையும் குறிப்பதாகக் கருதமுடியும்.

டொன்ரா (Dogana) கோயிலானது சந்திரனுக்குரிய (Sacraluna) கோயில் எனவும் ஆயிரம் பிராமணர்கள் இருந்துயாகம் செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார் இது டொன்ராவில் இருந்த சந்திரமௌியர் கோயில் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். ஆகவே சங்கமன் கண்டி முனையும் அங்கிருந்த கோயிலும் தொலமி காலத்தில் புகழ்பெற்றி ருந்தது என்பதற்கு தொலமியின் வரைபடம் முக்கியசான்றா கின்றது.

மேலும் தொலமியின் வரைபடத்தில் குமண Bacani எனவும் உரோகணம் Rhogandani எனவும் கோடிட்டுக் காட்டியுள்ளார் எனவே தொலமி காலத்தில் சங்கமன் கண்டியும் இதனைச் சூழவுள்ள பிரதேசங்களும் முக்கியம் வாய்ந்த இடங்களாக இருந்துள்ளன. என்பது தெளிவாகின்றது. 10 தொலமியின் வரைபடத்தில் சங்கமன் கண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனையும் இங்கிருந்த கோயிலும் எனக் குறிக்கப்படுவது அக்காலத்தில் கிழக்குக் கரையில் புகழ்பெற்றிருந்த சிவாலயங்களி லொன்றான இறக்காவில் சிவாலயமாகும். மேலும் அக்காலத்தில் சங்கமன் கண்டியிலும் இதனைச் சூழவுள்ள இடங்களிலும் பல கோயில்கள் அமைந்திருந்ததை தொலமியின் வரைபடம் உறுதி செய்கின்றது.

கி.பி இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் கஜபாகுவுக்குப் பின் இவனுடைய மாமனான மகலக்க நாகன் (கி.பி 193 199) என்பவனது ஆட்சிக்காலத்தில் கி.பி 193 இல் நாகர்முனை பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு அறிமுகமானது தமிழகத்தின் பாண்டி நாட்டிலிருந்து எடுத்து வரப்பட்ட செண்பகச் செல்வி என்ற கண்ணகி விக்கிரகம் சாகாமம் ஊரக்கையில் ஆலயமொன்று நிர்மாணிக்கப்பட்டுப் பிரதிஸ்டை செய்யப்பட்டது இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பின் தென் பகுதியில் பௌத்த தமிழர்கள் பெருமளவில் வாழ்ந்திருந்த லகுகல, நாவுல்ல (நாவலாறு) மீகாங்கொட (பாணகை) கூமுனை ஹபிலவத்தை முதலான இடங்களிலும் கண்ணகிவழிபாடு பரவியது (ஆலயங்கள்) பாண்டிய நாட்டிலிருந்து தென்கிழக்குத் துறைகளூடாக இது இடம் பெற்றது.

இதுவரை குறிப்பிடப்பட்டவற்றின் வாயிலாக கி.பி முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் இறக்காவில் உள்ளிட்ட நாகர்முனை என்ற பிரதேசத்தில் தமிழரது அரசியல் செல்வாக்கு நிலை பெற்றிருந்ததையும் நாகரீகத்தில் இப்பிரதேசம் மேம்பாடுற்று விளங்கியதையும். மேலும் தமிழகத்துக்கும், இப்பிரதேசத்துக்கு மிடையில் நெருக்கமான சமூகசமய, கலாசார மற்றும் வாணிகத் தொடர்புகள் இருந்து வந்ததையும் அறிந்து கொள்ளலாம். 11 வரலாற்றாய்வுகள் மூலமாக நோக்குமிடத்து இக்கால கட்டத்தில் திருக்கோவில் துறை (துங்ககோள) பிரபல்யம் பெற்றிருந்ததையும் இத்துறையூடாக தமிழகத்துக்கும் இப் பிரதேசத்தைச் சேர்ந்த சங்கமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி வில்காமம், றூபஸ், கஞ்சிகுடி ஆறு, சாகாமம் ஆகிய நகரப் பகுதிகளுக்குமிடையில் போக்குவரத்து வாணிபம் என்பன இடம் பெற்று வந்ததையும் அறிய முடிகின்றது.

கி.பி இரண்டாம் நூற்றாண்டில் வந்த கோவலன் சங்கமன் கண்டியுடன் வர்த்தகத் தொடர்பினை வைத்திருந்ததாக மரபுரை யொன்று கூறும் கண்ணகியின் காற்சிலம்புக்கு கந்தப்பாணந்துறை யூடாகவே நாகமணி எடுத்துச் செல்லப்பட்டதாக கிராமிய இலக்கிய மொன்று குறிப்பிடுகின்றது.12 இக்காலத்தில் நாகர் பாண்டியர், கலிங்கர் ஆகிய திராவிடக் குடியினர் சங்குமன் கண்டி நகரில் வாழ்ந்திருந்த போதும் பூர்வ குடியினரான நாகர் குலத்தினரே பெரும் பான்மை யினராக வாழ்ந்திருந்தனர்.

## குறிப்புக்கள்

1) மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம்.
பக்கம் 49, 50 வெல்லவூர் கோபால் - 2005

2) மட்டக்களப்பு மான்மியம் - பக் 23 பதிப்பாசிரியர் எப். எக்ஸி. நடராசா - 1962

3) இப்பகுதி இன்று வாகூரவெட்டை எனத்திரிபுபட:டு வழங்கி வருகின்றது.

4) தம்பிலுவில் கண்ணகி வழிபாடு
பக்கம் 59, 60 நா.நவநாயக மூர்த்தி - 1999

5) மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி
பக்கம் 31 திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம் - 1993

6) உன்னரசுகிரி இராஜதானி உகந்தை குடும்பிமலை பகுதியாகும், சுமார் ஐந்நூறு ஏக்கர் பரப்பளவில் இந்நகர் அமைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) மட்டக்களப்பு மான்மியம்

பக்கம் 27, 28 பதிப்பாசிரியர் எப். எக்ஸி, நடராசா - 1962

8) மட்டக்களப்பு மான்மியம்

பக்கம் 26, எப்.எக்ஸி. நடடராசா - 1962

9) இம்மாளிகையை கி.பி பத்தாம், பதினோராம் நூற்றாண்டுகளில் சோழரும், இதனைத் தொடர்ந்து முதலாம் விஜயபாகுவின் மனைவியரில் ஒருத்தியும் கலிங்க குலத்து அரசியுமான திரிலோக சுந்தரியும் புனர் நிர்மாணம் செய்து தங்கியுள்ளனர்.

இம்மாளிகையின் இடிபாடுகளை சங்கமன் கண்டி காட்டில் இன்றும் காணலாம் இதன் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள குளியல் நீர்த்தடாகம் இதனைச் சூழக் காணக் கிடைக்கும் கட்டிட இடிபாடுகள் தொல்லியல் சின்னங்கள் ஆகியன இம்மாளிகை சகல வசதிகளும் உள்ளிட்ட ஆடம்பரமான வாசஸ்தலமாக அக்காலத்தில் விளங்கியிருந்ததை தெளிவுறுத்துகின்றன.

10) சங்குமன் கண்டி பண்டைய வரலாறு

கட்டுரை, செல்வி, க.தங்கேஸ்வரி மஹாகும்பாபிஷேக மலர் அருள்மிகு சங்கமன் கண்டி காட்டு பிள்ளையார் ஆலயம் - 2009

11) கி.பி முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தின் செல்வாக்கு இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பரந்திருந்ததை தொல்லியல் சான்றுகள் உறுதி செய்கின்றன.

12) தொல்லியல் சிந்தனைகள்

பக்கம் 50 நா. நவநாயக மூர்த்தி - 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி.பி மூன்றாம் நூற்றாண்டில் மட்டக்களப்பும் சங்குமன் கண்டி இறக்காவில் சிவாலயமும்

கி.பி இரண்டாம் நூற்றாண்டில் இறுதிக் காலத்தில் உன்னரசு கிரியில் ஆட்சி செலுத்தி வந்தமேகவர்ணன் என்ற மனுநேய கஜபாகுவுக்குப் பின்னர் இவனது வளர்ப்பு மகளான ஆடகசௌந்தரி என்பவள் உன்னரசு கிரியில் ஆட்சிக்கு வந்தாள் இவளது ஆட்சிக் காலத்தில் தென்கிழக்கிலங்கையின் வட பகுதியில் முறையே தமணன், தனசேனன் என்போர் மட்டக்களப்பு (சம்மாந்துறை) நகரிலிருந்து பரிபாலித்து வந்துள்ளனர். ஆடகசௌந்தரிக்கும் இவர்கள் உதவியாகவும் இருந்தது. வந்துள்ளனர்.

இப்பெண்ணரசியின் அரசியல் செல்வாக்கு திருகோண மலைவரை பரவியிருந்தது என்பதை அறியமுடிகின்றது இதேவேளை இவ்வரசியோடு தொடர்புபடும் வரலாற்றுக் குறிப்புக்கள் அனைத்தும் அதீத கற்பனையின் பால் இணைவுற்றிருப்பதை உணரமுடியும் இதனையொத்த குறிப்புக்கள் சிங்கள வரலாற்று நூல்களிலும் காணக்கிடைக் கின்றன. யாழ்ப்பாண வரலாற்றிலே சொல்லப்படுகின்ற மாருதப்புரவி வல்லியின் கதையும் பெரும்பாலும் இதேபோன்ற தொடக்கத்தையே கொண்டிருக்கின்றது. *1*

ஆதலால் இவ்வரசியின் வரவானது, எத்தகையது என்பதனை முழுமையாகக் கண்டறிய முடியா விட்டாலும் காணக் கிடைக்கின்ற வரலாற்றுத் தகவல்களின் அடிப்படையில் இவளது ஆட்சி பற்றியும் சமூக, சமய, செயற்பாடுகள் பற்றியும் அறியமுடிகின்றது. மட்டக்களப்பின் மாமாங்கம் தாந்தாமலை, திருக்கோவில் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலங்களோடு திருக்கோணேஸ்வரமும் இவள் வரலாற்றிலே இணைக்கப்படுவதை மரபுரைகளும் உணர்த்தும் மேலும் சங்கமன்கண்டி, சாகாமம் போன்ற நகரங்களுடனும் இவ்வரசி கொண்டிருந்த தொடர்புகள் பற்றியும் வரலாற்றுச் செய்திகள் மூலமாக அறிய முடிகின்றது.

இவற்றின் அடிப்படையிலேயே, இவ்வரசியின் வரலாறுபதிவு செய்யப்பட வேண்டியுள்ளது ஆட்கசௌந்தரி உன்னரசுகிரியிலிருந்து ஆட்சி செலுத்தி வந்த காலத்தில் (கி.பி மூன்றாம் நூற்றாண்டு) மட்டக்களப்பில் ஆட்சி செலுத்தி வந்த தமணன் என்ற மன்னனுக்கு நகர அபிவிருத்தி மற்றும் சமூக சமய மேம்பாட்டுப் பணிகளுக்கு இவ்வரசி ஆதரவளித்து வந்தாள் 2. இவளது அரசியல் செல்வாக்கு வடக்கே திருக்கோணேஸ்வரம் வரை அக்காலத்தில் பரந்திருந்தது.2A

ஆடகசௌந்தரியின் காலத்தில் மாமங்கேஸ்வரம் தோற்றம் பெற்றதுடன் மாமாங்கம் தீர்த்தக் குளத்திலிருந்து தீர்த்தம் எடுத்து வந்து ஆடிஅமாவாசைத் தினத்தன்று திருக்கோவில் சமுத்திரத்திலிட்டு தீர்த்தம் ஆடும் வழக்கமும் ஆரம்பமானது இவ்வேளை திருக்கோவில் திருத்தலத்தில் முருகன் சிவன் ஆலயங்கள் அமைந்திருந்தன. 3. தமணனுக்குப் பின்னர் மட்டக்களப்பு இராஜதானியிலிருந்து ஆட்சி செலுத்தி வந்த தனசேனனும் இவனது சந்ததியினரும் ஆடக சௌந்தரிக்குத் தங்கள் முழு ஆதரவை நல்கி வந்துள்ளனர்.

இப்பெண் அரசியின் நீண்டகால ஆட்சியில் இவள் மேற்கொண்ட சமயப் பணிகள் பற்றியும் அறியமுடிகின்றது பௌத்தசமய வளர்ச்சியிலும் அக்கறை கொண்டிருந்த இவள் ஒவ்வொர பௌத்த விகாரைகளிலும் ஒவ்வொரு கதிரேசன் ஆலயத்தை நிறுவியுள்ளாள் 4 உன்னரசுகிரி அரசியான ஆடகசௌந்தரி சங்கமன் கண்டி, சாகாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாந்தாமலை ஆகிய பண்டைய நகரங்களுடன் கொண்டிருந்த தொடர்புகள் பற்றி மரபுரைகள் குறிப்பிடும்.

சாகாமம் மேற்கு புறநகர்ப் பகுதியான பொத்தானை கீத்துப்பத்து பகுதியில் கிழவியூர் மலைச்சாரலில் இவ்வரசியின் ஓய்வுகால வாசஸ்தலமொன்று அமைந்திருந்ததாகவும், இவ்வரசி இங்கு வந்து தங்கிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்ததாகவும், இதன் காரணமாகவே கிழவியூர் மலை என இந்த இடம் பிற்காலத்தில் பெயர் வழங்கி வந்ததாகவும் கூறப்படுகின்றது இன்றும் இந்த இடம் கிழவியூர்மலை என்று பெயர் நிலவி வருவதும் குறிப்பிடத்தக்கது. 5

இதே போன்று சங்கமன் கண்டிகாட்டுப்பகுதியில் காணப்படும் அழிவுற்ற பண்டைக்கால ஆடம்பர அரண்மனை யுடனும் இவ்வரசி தொடர்பு படுத்தப்படுகின்றார். அத்துடன் தாந்தாமலையிலும் இவ்வரசியின் வாசஸ்தலமொன்று அமைந்திருந்ததாகவும் கூறப் படுகின்றது. இவ்வற்றையெல்லாம் நாம் நோக்குமிடத்து இவ்வரசியின் (நீண்டகால) ஆட்சிக் காலத்தில் உரோகணத்தின் வடக்கு கிழக்கு பகுதி முழுவதிலும் இவளது அரசியல் செல்வாக்கு நிலவி வந்துள்ளது. என்பதையும் இவ்வரசியின் சமயப் பணிகள் கோணேஸ்வரம்வரை பரந்திருந் தென்பதும் தெளிவு.

ஆதலால், இவ்வரசியின் ஆட்சிக் காலத்தில் சங்கமன் கண்டி உள்ளிட்ட நாகர்முனையில் அனைத்திருந்த சைவால யங்கள் சிறப்புடன் விளங்கி வந்துள்ளன. என்று கொள்ள முடியும் மேலும் இவ்வேளை மகாவம்சம் கூறும் 'ஏரகாவில்' சிவாலயம் என்ற சங்கமன் கண்டிமுனை இறக்காவில் ஊர் சிவாலயமும் இக்காலத்தில் சிறப்புடன் விளங்கி வந்துள்ள தென்பதில் ஐயமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை, மட்டக்களப்பு 'பூர்வசரித்திரம்' என்ற மட்டக்களப்ப மான்மியம் நூல் அனுராதபுரி மன்னன் மகாசேனனை ஆடக சௌந்திரியுடன் தொடர்பு படுத்துகின்றது (பக்கம் 34, 35) மகாசேனனை இந்நூல் திரிகயிலையுடன் தொடர்பு படுத்துகின்றது. மகாவம்சம் வேறோர் வகையில் மகாசேனனைத் தொடர்பு படுத்துவதைக் காணலாம் (மகாவம்சம் அத்தியாயம் 37 : 41) கோகர்ணத்திலிருந்த சிவாலயத்தை இடித்து கோகர்ண விகாரையைக் குறிப்பிட்டபோதும் இன்னோரிடத்தில் (மகாவம்சம் அத்தியாயம் 36 : 112) வைதூலியக் கொள்கையுடையோர் புத்தருடைய போதனை களுக்கு கேடுவிளைப் பவர்களாக இருந்தார்கள் என்று கூறும்.

இவ்வாறு. இருநூல்களும் முரண்பட்டு நிற்பதால் வரலாற்றுத் திரிபுபடுத்திக் கூறும் நூல் எது என்பது கேள்விக் குறியாகவுள்ளது 6 மேலும் ஆடக சௌந்தரியின் ஆட்சிக்காலமும் மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடும் ஆட்சிக் காலமும் காலக கணிப்பில் முரணாகவுள்ளது ஆதலால் அறிவியல் ரீதியில் வரலாற்றுப்பதிவை மேற்கொள்ள வேண்டிய அவசியமாகின்றது.

ஆடகசொந்தரிக்கு பின் இவளது மகனான சிங்ககுமாரன் என்பவன் (கலி 3370) உன்னரசுகிரி மன்னனானான். இவனது மேலாதிக்கத்தை மட்டக்களப்பு தெட்சணாபதி (திருகோணமலை) ஆகிய சிற்றசுகள் ஏற்றியிருந்தன சிங்ககுமாரன் உன்னரசுகிரியை இராஜதானியாகக் கொண்டு தெட்சணாபதியைத் தன்கீழ் இருத்தி மட்டக்களப்பை பிரசேது என்பவனுக்கு பட்டங்கட்டி முகமன் கொண்டாடி உன்னரசு கிரியிலிருந்து நல்லாட்சி புரிந்து வந்தான்.

இவன் கனக சுந்தரன் என்பவனை திருகோணமலைக்கு அதிபதி ஆக்கி ஆட்சி புரிந்தான் ஆதலால் கிழக்கிலங்கையில் இம்மன்னனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப் பணிகள் பரந்திருந்த இக் காலத்தில் கிழக்கின் தென்பகுதியான சங்கமன்கண்டி இறக்காவில் சிவாலயம், கலந்தன் ஊர் சிவாலயம் என்பனவும் இம்மன்னனது ஆதரவைப் பெற்று வந்துள்ளன. என்று நம்பலாம். இக்காலத்தில் கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் போன்ற சிவாலயங்கள் சிறப்புடன் விளங்கி வந்துள்ளதுடன் இந்திய யாத்திரீகர்கள் இத்தலங்களைத் திரிசித்து செல்லும் வழக்கத்தினையும் கொண்டிருந்தனர். 7

சிங்ககுமாரன் உகந்தை மலையில் சிவாலயம் ஒன்றை நிர்மாணித்ததுடன் விஷ்ணு ஆலயம், பிரம்மா ஆலயம் என்பனவற்றை வடநாட:டுச் சிற்பிகளை வரவழைத்து அமைத்தான் மேலும் மலையடி வாரத்து எட்டுத் திக்கிலும் இந்திரன் அக்கினி, இயமன் கிருதி, வருணன், வாயு குபேரன், ஈசானியன் ஆகிய எட்டு ஆலயங்களை நிர்மாணித்தான்.

செப்புக் கொடித்தம்பம் ஒவ்வொன்றுக்கும் நிறுத்தி மலையுச்சியில் மூன்று ஆலயத்துக்கும் நடுவிலே ஒரு தங்கக் கொடித்தம்பம் நிறுத்தி அந்தணர் ஆலோசனைப்படி அபிஷேகமும் செய்து ஆயிரம் அவணநெல்களனிகள் திருத்தி குமுக்கன் வெட்டு வாய்க்காலிருந்து நீர் எடுத்து ஏரியில் தேக்கி வைத்து செந்நெல் செழித்தோங்கும் படி செய்து உகந்தைத் திருப்பணிக்கு ஐந்நூறு அவணத் தறையுமீந்து அந்தணர் முதலான ஆலய ஊழியர்களுக்கு இருநூறு அவணத்தறை மீந்து புவனத்திருப்பணி அதிகாரரே எக்காலமும் கடமைக்காரெனத் திட்டம் செய்து மட்டக்களப்பை அரசுபுரியும் பிரசேது விடம் முகமன் கொண்டாடி ஆடித்திங்கள் அமாவாசை இரு தினமும் இராவணேஸ்வரன் பெயரில் உகந்தை திருப்பதியில் பெரிய தீபம் ஒன்று ஏற்றும்படி திட்டம் செய்தான். 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இம்மன்னனது சைவப்பணிகள் கிழக்கிலங்கையில் பரந்திருந்த இக்காலத்தில் கிழக்குக் கரையில் புகழ் பெற்றிருந்த சங்கமன் கண்டி றக்காவில் சிவாலயம் கலந்தன் ஊர் (கலந்தகாமம்) சிவாலயம் ஆகிய சைவாலயங்களும் இம்மன்னனது ஆதரவைப் பெற்று வந்துள்ளன. என்பதில் ஐயமில்லை மேலும் சங்கமன் கண்டி மலை சிவாலயம் திருக்கோவில் சிவாலயம், சங்கமன் கண்டி துவட்டாமுனிகுகைக் கோயில் (சிவாலயம்) ஆகியனவும் இவ்வேளை சிறப்புடன் விளங்கி வந்துள்ளன.

கலிங்க குலத்துத் தமிழ்ச் சைவனான சிங்ககுமாரனின் அரசியல் செல்வாக்கு தெற்கே யாளவரை பரவியிருந்ததுடன் இவனது ஆட்சிப்பரப்பின் வடக்கு எல்லை வடக்கே மீகாங்கொட வரை பரந்திருந்தது பாணகை உகந்தையாள துறைகளினூடாக பிற இடங்களுடன் வாணிபம், போக்குவரத்து ஆகியன இடம் பெற்று வந்துள்ளன. சிங்க குமாரன் தனக்குப் பின் தன்மகன் சிறிசிங்கள் என்பவனுக்கு உன்னரசுகிரியை பட்டம்கட்டிய சில காலத்தின் பின் மரணமடைந்தான் இது நிகழ்ந்தது கி.பி 312ஆம் ஆண்டாகும்.

இக்காலத்தில் (கி.பி. 3ஆம் நூற்றாண்டு) அனுராதபுரி அரசின் கிழக்கு மாகாணமாக (மாகாண ஆட்சி) திருகோணமலை பிராந்தியம் இருந்து வந்த போதும் தமிழரது அரசியல் செல்வாக்கே இங்கு நிலவியிருந்தது அத்துடன் இந்து சமயமே முன்னிலை பெற்றிருந்தது திராவிடரான நாகர், இயக்கர், வேடர் என்ற தமிழ்க் குலங்களே இங்கு வாழ்ந்திருந்தனர். திருகோணமலை துறைமுகம் பிரபல்யம் பெற்றிருந்ததுடன், வர்த்தகம், போக்குவரத்து என்பனவும் சிறந்திருந்தன இநது சமயத்தின் மையப்பகுதியாக திருகோணமலை நகரப் பகுதியும் புகழ் பெற்ற சிவாலயமாக திருக்கோணேஸ்வரமும் விளங்கியிருந்தன மேலும் தமிழகத்துடன் நெருக்கமான உறவுகளையும் இப்பிராந்தியம் கொண்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை நகரைச் சூழவுள்ள இடங்களில் தமிழ்ச் சைவர்கள் நிறைந்திருந்தனர் ஏனைய இடங்களில் வாழ்ந்து வந்த தமிழர்களில் (நாகர், இயக்கர், வேடர்) பௌத்தர்களும் அடங்குவர் கட்டுக்குளம். சேருவில போன்ற இடங்களில் தமிழ்ப் பௌத்தர்கள் வாழ்ந்திருந்தனர் இவர்கள் பௌத்த சமயத்தைக் கைக் கொண்டிருந்த போதிலும் தங்கள் மூதாதையர் கொண்டிருந்த இந்து சமய நம்பிக்கைகளையும் போற்றி வந்தனர் சுருங்கக் கூறுமிடத்து தமிழர் பிராந்தியத்தின் சைவமதப் பண்பாட்டின் மையமாகவே இக்காலத்தில் திருகோணமலை விளங்கியிருந்தது. கோணேஸ்வரம் செல்வாக்கு மிக்க சைவாலயமாகச் செழித்திருந்தது. 9

இவ்வேளை, வெருகல் தொடக்கம், கூமுனை வரை பரந்திருந்த தென்கிழக்கிலங்கையில் (பண்டைய மட்டக்களப்பு) வாழ்ந்து வந்த மக்களிடையே சைவமும் பௌத்தமும் நிலவி வந்த போதும், சைவசமயமே முன்னிலை பெற்றிருந்ததுடன் இப்பிராந்தியத்தில் சைவாலயங்களும் சிறந்திருந்தன உகந்தை, பாணகை, கலந்தககாமம், சங்கமன்கண்டி, போன்ற இடங்களிலிருந்த சிவாலயங்கள் சிறப்புடன் வளிங்கியிருந்தன.

இதேவேளை கி.பி முதலாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி மூன்றாம் நூற்றாண்டு வரையுள்ள அதாவது இக்காலம் வரையுள்ள தென்கிழக்கிலங்கை சமூக, சமய, அரசியல் நிலைபற்றி சுருக்கமாகக் குறிப்பிடுமிடத்து இக்காலத்தில் தென்கிழக்கிலங்கையில் உன்னரசு கிரிமட்டக்களப்பு என இரு ஆட்சிப் பிரிவுகள் நிலவி வந்துள்ளன. கலிங்க குலத்து தமிழ் அரசர்களது ஆட்சியில் இவை செழித்திருந்தன. இவ் வேளையில் உன்னரசுகிரி அரசின் இராஜதானியாக குடும்பிகல விளங்கி வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் (கி.பி 1ஆம் நூற்றாண்டு கி.பி 3ஆம் நூற்றாண்டு) உகந்தை பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பி கலவைச் சூழவுள்ள இடங்களில் தமிழர்களே வாழ்ந்திருந்தனர் இவர்களில் பெருமளவினர் பௌத்தர்களாவர் பெருங்கற் காலத்தில் (கி.மு 1000 - 300) இந்த இடங்களில் வாழ்ந்திருத்த திராவிடர் (நாகர், இயக்கர், பாண்டியர்) என்ற தமிழர்களின் சந்ததியினரான இவர்களில் ஒருசாரார் சைவர்களாக வாழ்ந்திருந்தனர் பம்பராகஸ்தலாவ வில் கண்டெடுக்கப்பட்ட சாசனம் ஒன்று இப்பகுதியில் வாழ்ந்திருந்த மக்களில் ஒரு சாரார் இந்துமத நம்பிக்கைகளைக் கொண்டிருந்தனர் என்பதை உறுதி செய்கின்றது (செ. குணசிங்கம் - 1972) 9A

அக்காலத்தில் தென்கிழக்கிலக்கிலங்கையில் நகரங்களாக விளங்கி வந்த சங்குமன்கண்டி சாகாமம் போன்ற இடங்களிலும், வில்காமம், கஞ்சிகுடி ஆறு, தாந்தாமலை கோயில் குளம், இலுப்படிச்சேனை, பளுகாமம், போரதீவு, மதுறுஓயா பகுதி ஆகிய இடங்களில் வாழ்ந்திருந்த தமிழர்களில் ஒருசாரார் பௌத்தர்களாக வாழ்ந்து வந்தனர் இதேவேளை நியந்தவறாகல, ரஜகல, தமண, ஆகிய இடங்களில் வாழ்ந்து வந்த தமிழர்களில் ஒருசாரார் சைவர்களாக வாழ்ந்து வந்தனர் என்பதை பிராமிச் சாசனங்கள் உணர்த்துகின்றன. 10 இவர்களுடன் அக்காலத்தில் தென்கிழக்கிலங்கையில் மேற் குறிப்பிட்ட இடங்கள் சிலவற்றில் பௌத்த சிங்கள மக்களும் சிறு தொகையினராக வாழ்ந்து வந்தனர். இவர்கள் பௌத்தத்தைப் பின்பற்றி வாழ்ந்து வந்த போதும், இந்து சமய நம்பிக்கைகளையும் கைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புக்கள்

1) மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம்.
பக்கம் 51, 52 வெல்லவூர் கோபால் - 2005

2) மட்டக்களப்பு மான்மியம்
பக்கம், 30 பதிப்பாசிரியர் எப்.எக்ஸி - நடராசா - 1962

2A) இக்காலத்தில் கொட்டியாபுரத்திலிருந்து கொட்டாயன் (கி.பி 238) என்ற நாகர் குல சிற்றரசன் ஆட்சி புரிந்துள்ளான்" (கிழக்கிழங்கை பூர்வீக வரலாறு பக்கம் 64, செல்வி க. தங்கேஸ்வரி - 2007)

3) இத்தீர்த்த விழா நெடுங்காலமாகப் பேணப்பட்டு வந்ததென்றும் கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே கைவிடப்பட்ட தென்றும் பண்டிதர் திரு. வி.சி கந்தையா அவர்கள் குறிப்பிடுகின்றார்.

4) லகுகலை காட்டுப் பகுதியில் ஆய்வுகள் மேற்கொண்ட வேளை கதிரேசன் ஆலயமும், விகாரையும் அருகருகாய் அமைந்திருந்த இடிபாடுகளைக் கண்டதாக் பண்டிதர் வி.சி கந்தையர் அவர்கள் (மட்டக்களப்பு தமிழகம் பக்கம் 417) குறிப்பிடுகின்றார் வடமொழி, கல்வெட்டுக்கள், சிதைந்த நிலையில் தமிழ் எழுத்து கல்வெட்டுக்கள் ஆகியனவும் காணப்பட்டதாக அவர் மேலும் கூறுகின்றார்.

5) கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் அக்கரைப்பற்று பகுதியில் வாழ்ந்திருந்த முதியோர்கள் சிலர் கூற இதனை நான் கேட்டுள்ளேன். மேலும், ஆடகசௌந்தரியின் நீண்ட ஆயுள் வாழ்க்கை, சமயப்பணி ஆகியவற்றில் அசைக்கமுடியாத நம்பிக்கை இவர்களது உள்ளங்களில் ஆழப்பதிந்திருந்ததையும் அக்காலத்தில் என்னால் உணர முடிந்தது.

6) மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி
பக்கம் 70 ஜி. தனபாக்கியம் - 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) மட்டக்களப்பு மான்மியம்

பக்கம் 36 பதிப்பாசிரியர் எப். எக்ஸி நடராசா - 1962

8) மட்டக்களப்பு மான்மியம்

பக்கம் 38, 39 பதிப்பாசிரியர் எப்.எக்ஸி நடராசா - 1962

9) கி.பி மூன்றாம், நாலாம் நூற்றாண்டுகளில் கிழக்கு இலங்கையில் இந்து மதம்.

கட்டுரை, நா.நவநாயக மூர்த்தி இந்து நதி 2003/2004 கிழக்கு பல்கலைக்கழக இந்துமாணவர் மன்றம் வெளியீடு,

9A) கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலும் கி.பி 1ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலத்திலும் இப்பிரதேசத்தில் சிவவழிபாடு செல்வாக்குப் பெற்றிருந்தது கல்வெட்டுக்கள் இதனை உறுதி செய்கின்றன. குடும்பி மலையில் காணக்கிடைக்கும் கல்வெட்டுக்களில் தமிழ்பிராமிக் சொற்களும், சிவன் சம்பந்தமான பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன. நதிக என்ற சொல் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்றில் நந்தியின் பாதம் காணப்படுகின்றது இதன் மூலம் இங்கு சிவவழிபாடு நிலவியதாக பேராசிரியர். சி. க.சிற்றம்பலம் கூறுகின்றார். நூற்றுக் கணக்கான, மலைக்குகைகள் இங்கு காணப்படுகின்றன. சிலவற்றில் கல்வெட்டுக்கள் எழுதப்பட்டுள்ளன. சில குகைகளில் மயில், நாகம் போன்றவற்றின் சித்திரங்கள் காணப்படுகின்றன. (திரு. திருச்செல்வம் - 2013)

10) "கிழக்கு இலங்கையில் தமிழ்ப் பெளத்தர்கள்"

'கட்டுரை' நா. நவநாயக மூர்த்தி ஏப்ரல்25, - 2004

(தினக்குரல் வார மலர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி.பி நாலாம் நூற்றாண்டில் சங்கமன் கண்டி இறக்காவில் சிவாலயம்

கி.பி மூன்றாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் உன்னரசு கிரியிலிருந்து ஆட்சி புரிந்து வந்த சிறிசிங்கன் மன்னன் மட்டக்களப்பு நகரிலிருந்து ஆட்சி செலுத்தி வந்த பிரசேதுசித்து மன்னனின் மகளான 'அரசனாட்சி' என்பவளைத் தனது தேவியாகக் கொண்டிருந்தான் இவன் மனுநீதிதவறாது நல்லாட்சி புரிந்து வந்த வேளை இவனுக்கு முதல் மகனாகப் 'பானுசிங்கன்' என்பவன் பிறந்தான்.

கி.பி நாலாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் "சிறிசிங்கனுக்குப் பின் இவனது மகனான பானுசிங்கன் (கி.பி 318) உன்னரசுகிரி மன்னனானான் இக்காலத்தில் மட்டக்களப்பை ஆட்சி புரிந்து வந்த பிரசேதுவுக்குபின் அவன் மகன் தினகரசேனனுக்கு வாரிசு இல்லாமையால் சிங்ககுமாரனின் பூட்டனாகிய (பேரன்) பானுசிங்கன் உன்னர சுகிரியையும், மட்டக்களப்பையும் இணைத்து (அம்பாரை உள்ளடக்கியிருந்த பண்டைய மட்டக்களப்பு) ஒரு குடையின் கீழ் ஆட்சி புரிந்து வந்தான்.

பானுசிங்கனுக்குப் பின் இவனது மகனான "அமரசேனன்" என்பவன் கி.பி நாலாம், நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆட்சிக்கு வந்தான் இவனைத் தொடர்ந்து கி.பி நாலாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 'மட்டக்களப்பு' முழுவதுக்கும் அமரசேனனின் மகன் குணசிங்கன் என்பவன் மன்னனானான் தெற்கே குமுக்கன் ஓயா தொடக்கம் வடக்கே வெருகல் ஆறு வரை இவனது அரசியல் ஆதிக்கம் பரந்திருந்தது இவனது ஆட்சிக்காலத்தை அனுராதபுரி மன்னன் ஸ்ரீமேகவண்ணன் ஆட்சிக் காலத்தோடு "மட்டக்களப்பு மான்மியம் (பக்கம் 42 இணைக்கின்றது).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மன்னன் குணசிங்கனும் அனுராதபுரி மன்னன் ஸ்ரீமேகவண்ணனும் சமகால மன்னர்கள் என்றும் இவர்களிருவரும் நண்பர்கள் என்றும் குறிப்பிடும் இந்நூல் இக்காலத்தில் அதாவது இவர்களது காலத்தில் நிகழ்ந்த வரலாற்று (சமய) முக்கிய நிகழ்வுகள் பற்றியும் விபரிக்கின்றது. (பக்கம் 42, 43) இலங்கையின் முன்னைய வரலாற்று நூல்களில் சில இதனை கி.பி 330 எனக் குறிப்பிட அண்மைய ஆய்வாளர்கள் சிலர் கி.பி 382 எனக் குறிப்பிடுகின்றனர்.

இங்கு வரலாற்றுக் காலம் ஐம்பது ஆண்டுகள் இடைவெளியைக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது ஆதலால் ஆட்கசௌந்தரியின் ஆட்சிக் காலம் தொடக்கம், வரலாற்றுக் காலம் திருத்தி அமைக்கப்படுதல் வரலாற்று ஆசிரியர்களின் கடமையாகின்றது.2 மகாவம்சம் நூலின் (கைகர் பதிப்பு) காலக் கணிப்பின் படி கோதபாயன் கி.பி 302ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி 315ஆம் ஆண்டு வரையும், ஜெத்ததீசன் கி.பி 315ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி 325ஆம் ஆண்டு வரையும் இவனைதத் தொடர்ந்து மகாசேனன் கி.பி 325ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி 352ஆம் ஆண்டு வரையும் அனுராதபுரியில் ஆட்சிபுரிந்ததாக குறிப்பிடுகின்றது.

இவர்களைத் தொடர்ந்து மகாவம்சத்தின் இறுதி அதிகாரத்தின் (xxxvii) தொடர்ச்சியாக சூளவம்சத்தின் முதலாவது அதிகாரம் அமைகின்றது. மகாசேனனின் இருபத்தேழு வருட ஆட்சியின் இறுதியில் அவன் இறந்து போக அவனது மகன் ஸ்ரீமேகவண்ணன் முடி தரித்துக் கொண்டான். இவன் கி.பி 352ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி 389ஆம் ஆண்டு வரை அனுராதபுரியில் ஆட்சி செலுத்தினான்.

இவனது காலத்திலேயே கலிங்கத்தில் வழிபடப்பட்டு வந்த புத்தருடைய புனித தந்ததாது இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் இதற்கெனத் தனியானதொரு ஆலயத்தை நிர்மாணித்து இதனை இங்கு பிரதிஸ்டை பண்ணினான் 3 கலிங்கத்திலிருந்து புத்தரின் புனித பற்சின்னம் இலங்கைக்கு எடுத்து வரப்பட்டு ஸ்ரீமேகவண்ணனிடம் கையளிக்கப்பட்டமை பற்றி மட்டக்களப்பு பூர்வசரித்திரம் நூலும் குறிப்பிடும்.

மகாவம்சம் கைகர் பதிப்பு கணக்கின் படி இக்கால கட்டத்தில் மட்டக்களப்பில் ஆட்சி செலுத்திய பானுசிங்கன் கி.பி 318ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி 343ஆம் ஆண்டு வரையும் இவனுக்குப் பின் ஆட்சி செலுத்திய அமரசேனன் என்பவன் கி.பி 343ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி 377ஆம் ஆண்டு வரையும் இவனுக்குப் பின் ஆட்சி புரிந்த குணசிங்கன் கி.பி 377ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி 407ஆம் ஆண்டு வரையும் ஆட்சி புரிந்துள்ளனர் என்று கணிக்கலாம்.

## பானுசிங்கன் காலத்தில் இறக்காவில் சிவாலயம், செழிப்பும், அழிப்பும்

கி.பி நாலாம் நூற்றாண்டின் முற்பகுதியில், உரோகண மண்டலத்தின் வடக்கு, கிழக்கு பகுதியாகவும் தனியானதொரு ஆட்சிப் பிரிவாகவும் விளங்கி வந்த தென்கிழக்கிலங்கையை (மட்டக்களப்பு, அம்பாரை மாவட்டங்கள்) பானு சிங்கன் (கி.பி 318 - 343) என்ற கலிங்க குலத்துத் தமிழ்ச் சிற்றரசன் ஆட்சி புரிந்து வந்தான் இவன் தனக்குக் கீழ் அதிகாரிகள் பலரை நியமித்து இப்பிராந்தியத்தைப் பரிபாலித்து வந்தான் இவன் ஆட்சிக்கு வந்த காலத்தில் (கி.பி 318இல்) அனுராதபுரியிலிருந்து தெத்தீசன் என்ற மன்னன் ஆட்சி செலுத்தி வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளை, பலமொழி, பலசமயம், பலபண்பாட்டுக் கூறுகளின் மையமாக விளங்கியிருந்த அனுராதபுரியுடன் தென் கிழக்கிலங்கை நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தது.

தென்கிழக்கிலங்கை சிற்றரசனான பானுசிங்கன் (கி.பி 318 - 343) இப்பிரதேசத்தின் தென் பகுதியிலிருந்த 'உன்னரசுகிரி' (குடும்பிகல்) சம்மாந்துறை பிரதேசத்தில் அமைந்திருந்த பண்டைய மட்டக்களப்பு ஆகிய நகரங்களைத் தனது அரசிருக்கைகளாகக் கொண்டிருந்தான் 4 இவன் சங்கமன் கண்டி சாகாமம் கிழவியூர்மலை, தாந்தாமலை ஆகிய இடங்களையும் தனது ஓய்வு கால இருப்பிடங்களாகக் கொண்டிருந்தான் என்பதை அறிய முடிகின்றது இந்த இடங்களில் அரச மாளிகைகள் நிலவியிருந்தன. அனுராதபுரி அரசின், மேலாதிக்கத்தைப் பெயரளவில் பானுசிங்கன் ஏற்றிருந்த போதும் சுதந்திரமுள்ள வனாகவே இப்பிரதேசத்தில் செயற்பட்டு வந்தான்.

தமிழ்ச் சைவனான பானுசிங்கன் சைவசமய வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டிருந்தவனாக வாழ்ந்திருந்த போதும் பௌத்த சமயத்துக்கும் ஆதரவளித்து வந்தான் இவ்வேளை குடும்பிகல, லகுகல, தீகவாபி, போன்ற பௌத்த தலங்கள் சிறப்புடன் விளங்கியிருந்தன. இந்த இடங்களில் வாழ்ந்து வந்த தமிழ்ச் சைவர்கள், தமிழ்ப் பௌத்தர்கள் என்போர் பௌத்த சிங்களவர்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்திருந்தனர். இவ்வேளை யிலேயே கி.பி 325இல் மகாசேனன் அனுராதபுரியில் ஆட்சிக்கு வந்தான் இவனது ஆட்சிக்காலத்தில் (கி.பி 325 - 352) நிகழ்ந்த சம்பவமே கிழக்கிலங்கை இந்துசமய வரலாற்றில் மிக முக்கிய தடயமாகக் கருதப்படுகின்றது.

மகாசேனன் அனுராதபுரியில் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து தென்கிழக்கிலங்கையில் ஆட்சிபுரிந்து வந்து பானுசிங்கன் (கி.பி 318 - 343) அனுராதபுரி மன்னன் மகாசேனனின் (கி.பி 325 - 352)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாதிக்கத்தை ஏற்றிருந்ததுடன் இலங்கை முழுவதிலும் ஆட்சி புரிந்து வந்த மன்னர்களுடனும் நட்பாக விருந்து வந்தான் மகாசேனனின் ஆட்சிக் காலத்தில் ஆட்சிமையமாக அனுராதபுரி விளங்கி வந்த போதும் அனுராதபுரி மன்னனின் அதிகார வரையறைகளை ஏற்றுப் பலசிற்றரசுகள் இலங்கையின் நாலாபகுதிகளிலும் நிலை பெற்றிருந்தன் (சூளவம்சம், அத்தியாயம் 1) இவற்றில் மட்டக்களப்பு சிற்றரசும் ஒன்றாக நிலைபெற்றிருந்தது.

இக்காலத்தில், தென்கிழக்கிலங்கையின் வரலாற்றுமை யங்களிலொன்றான சங்கமன் கண்டி நகரிலும், இந்நகரினைச் சூழவிருந்த மேற்கு, கிழக்கு, வடக்கு புறநகர் பகுதிகளிலும் வாழ்ந்திருந்த நாகர், இயக்கர், பாண்டியர், கலிங்கர் என்ற தமிழ்க் குலங்களைச் சேர்ந்த மக்களிடையே சைவமும், பௌத்தமும் நிலவியிருந்ததுடன் சைவாலயங்களும் பௌத்த ஆலயங்களும் (விகாரை) அருகருகாய் இருந்து வந்தன. இதேவேளை சங்கமன் கண்டி புற நகர் பகுதியான தென்கிழக்கே அமைந்திருந்த இறக்காவில் கிராமத்தில் சைவசமயமே முன்னிலை பெற்றிருந்தது.

ஏரகாவில் என்று மகாவம்சம் குறிப்பிடும் 'இறக்காவில் ஊரில்' வாழ்ந்திருத்த நாகர், இயக்கர் பாண்டியர், கலிங்கர் என்போரிடையே இக்காலத்தில் சைவசமயமே முன்னிலை பெற்றிருந்ததுடன் சங்கமன் கண்டிமுனை இறக்காவில் சிவன் ஆலயமும் புகழ் பெற்றுச் சிறப்புடன் விளங்கியிருந்தது.

மகாசேனன் ஆட்சிக்கு வந்த காலத்தில் பௌத்த சமயத்தில் பல பிரிவுகள் இருந்தன இவற்றிலொன்று மகாயான பௌத்தமாகும் மகாசேனன் ஆட்சிக்கு வந்த ஆரம்ப காலத்தில் மகாயான பௌத்தர்களின் போதனைகளால் கவரப் பெற்றான். இதன்பயனாக மகாவிகாரையைச் சேர்ந்த தேரமத பௌத்த பிக்குகளோடு பகைமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அவர்களது பீடங்களைச் சீர்குலைத்தான். இவ்வேளையில் சைவசமயத்தின் மீதும் பகைமை கொண்டு சமய விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டான்.

மகாவிகாரைக்குச் சொந்தமான கட்டிடங்களைத் தரைமட்ட மாக்கியதைப் போன்று கிழக்கிழங்கையில் புகழ் பெற்றிருந்த சிவாலயங்கள் மூன்று இவனால் இடித்தழிக்கப்பட்டன. இந்த இடங்களில் விகாரைகள் நிர்மாணிக்கப்பட்டன. அனுராதபுரியில் ஆட்சி புரிந்த மகாசேனன் கோகர்ண, ஏரகாவில, பிராமணன் கலந்தனின் ஊர், ஆகிய இடங்களிலிருந்த பிராமணத் தெய்வங்களின் கோயில்களை அழித்து அவ்விடங்களில் மூன்று விகாரைகளை கட்டினான் எனமகாவம்சம் கூறும் 5, இந்த இடங்கள்யாவும் கிழங்கிலங்கையில் இருந்தன.

மேலும், இவ்வாலயங்கள் யாவும் சிவாலயங்களாகும் இவை முறையே, திருக்கோணேஸ்வரம், சங்கமன் கண்டிமுனை இறக்காவில் ஊர் சிவாலயம் கலந்தன் ஊர் சிவாலயம் (சாஸ்திரிவெளி) என்பனவாகும்.

இந்த மூன்று இடங்களும் தவறான நம்பிக்கையுடையோரின் (சமய) இருப்பிடங்களாக இருந்தன என்று மகாவம்ச உரை நூலான மகாவம்சதீக உரைக்கின்றது. இதன் வாயிலாக இந்த இடங்களில் தமிழ்ச் சைவர்களே அக்காலத்தில் பெருமளவில் வாழ்ந்திருந்தனர் என்பதையும், இவர்களைப் பௌத்தர்களாக மாற்றும் நோக்குடனேயே மகாசேனன் தனது அரசியல் மேலாதிக்கத்தை பிரயோகித்தான் என்பதையும் அறிய முடிகின்றது.

இதேவேளை ஏனைய இடங்களில் வாழ்ந்திருந்த தமிழர்களில் ஒரு சாரார் பௌத்த தமிழர்களாக வாழ்ந்திருந்தனர் என்பதும் தெளிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு முந்திய காலத்திலிருந்து கிழக்கிலங்கையில் பௌத்த தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதையும், பௌத்த தமிழர்களின் வழிபாட்டிற்காகவே மகாசேனன் இம்மூன்று விகாரைகளையும் நிர்மாணித்தான் என்பதையும் மகாவம்சம் (அத்தியாயம் 37 : செய்யுள் 41) உறுதி செய்கின்றது 6. இவ்வாறு கிழக்கிலங்கையில் கரையோரப் பகுதியில் புகழ் பெற்றிருந்த இம் மூன்று சிவாலயங்களையும் மகாசேனன் அழித்து விகாரைகள் நிர்மாணித்த போதும் கிழக்கிலங்கையில் குறிப்பாகக் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்து வந்த தமிழர்களில் ஒருசாரார் தொடர்ந்து சைவர்களாகவே வாழ்ந்து வந்தனர்.

தென் கிழக்கிலங்கையில் ஆட்சி புரிந்துவந்த பானுசிங்கன் அனுரதபுரி மன்னன் மகாசேனனின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்ததுடன் இலங்கை முழுவதிலும் அதிகாரம் செலுத்தி வந்த மன்னர்களுடன் நட்புடன் செயற்பட்டு வந்த போதும் தனது ஆட்சிப்பிரிவில் சிறப்புடன் விளங்கி வந்த இறக்காவில் சிவாலயம் (ஏரகாவில) கலந்தன் ஊர்சிவாலயம் ஆகிய இலிங்கக் கோயில்களை மதவெறிகொண்ட மகாசேனன் இடித்தழித்த வேளை கலிங்க குலத்துத் தமிழ்ச் சைவனான பானுசிங்கனால் தடுத்து நிறுத்த முடியாது போயிற்று என்பது வரலாற்றுண்மையாகும்.

அனுராதபுரி மன்னனான மகாசேனனால் கிழகிலங்கையில் அழிக்கப்பட்ட மூன்று சிவாலயங்கள் பற்றியே மகாவம்சம் (அத்தியாயம் 37 : செய்யுள் 40, 41) குறிப்பிடுகின்றது இதே வேளை, சைவசமயம் முன்னிலை பெற்றிருந்த கிழக்கிலங்கையின் கரையோரப் பகுதியில் நிலைத்திருந்த மேலும் பல சைவாலயங்கள் மகாசேனனால் அழிக்கப் பட்டிருக்கலாம் என்று எண்ண இடமுண்டு இலங்கை எங்கும் பௌத்த விகாரைகளை அவ்விடங்களிலிருந்த பௌத்தத்தை நம்பாதவர்களின் கோயில்களைத் தரை மட்டமாக்கி நிறுவியுள்ளான். சிவனின் அடையாளங்கள் அனைத்தையும், அவ்விடங்களிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகற்றினான் என மகாவம்சதிக்கா கூறும் 7 இவ் வரலாற்றுக் குறிப்புக்கள் மூலமாக இதனை உறுதிசெய்யலாம்.

மகாசேனால் அழிக்கப்பட்ட மூன்று சிவாலயங்களுள் ஒன்றான கோணேஸ்வரம் மட்டும் மகாசேனனுக்குப் பின்னர் அனுராதபுரியில் மன்னனான மேகவண்ணன் காலத்தில் புத்துயிர் பெற்று சிறப்புடன் விளங்கி வந்தது இதே வேளை உரோகணத்தின் வடக்கு கிழக்கு பகுதியான மட்டக்களப்பின் தென் கரையோரப் பகுதியில் அமைந்திருந்த இறக்காவில் (ஏரகாவில) சிவாலயம், கலந்தன் ஊர் சிவாலயம் ஆகியன மீண்டும் நிர்மாணிக்கப்படவில்லை, மகாசேனனது ஆட்சியைத் தொடர்ந்து இப்பகுதிகளில் வாழ்ந்திருந்த மக்களிடையே பௌத்தம் கால் கொண்டு வளர்ச்சியுற்று வந்ததே இதற்கான காரணம் எனலாம் 8 மகாசேனனால் நிர்மாணிக்கப்பட்ட இறக்காவில் மிககாம விகாரை வளர்ச்சியுற்று வந்தது.

## குறிப்புக்கள்

1) இக்கால கட்ட மட்டக்களப்பு நகரப் பகுதி என்பது சம்மாந்துறை வீரமுனை பிரதேசமாகும். உன்னரசுகிரி நகர் என்பது உகந்தை (குடும்பிகல) பிரதேசமாகும் (கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு, பக்கம் 65, செல்வி க. தங்கேஸ்வரி - 2007)

2) மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம். பக்கம் 53, வெல்லவூர் கோபால் - 2005

3) நம்முன்னோரளித்த அருஞ்செல்வம் பக்கம் 82, ஜி. சி மெண்டிஸ் - 1969

4) கி.பி மூன்றாம், நாலாம் நூற்றாண்டுகளில் கிழக்கிலங்கையில் இந்து மதம் 'கட்டுரை' நா. நவநாயக மூர்த்தி இந்து நதி விசேட மலர் கிழக்கு பல்கலைக் கழகம் - 2003/2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) மகாவம்சம் - C.W. Geiger - 1986 அதிகாரம் xxxvii : வரி 40, 41 பக்கம் 270

6) கிழக்கு இலங்கையில் தமிழ்ப் பௌத்தர்கள் 'கட்டுரை' நா. நவநாயக மூர்த்தி 'தினக்குரல் வாரமலர்', 25.04.2004

7) மகாவம்சம் தரும் இலங்கை சரித்திரம் பக்கம் 136, கலாநிதி. க. குணராசா - 2003

8) • பிற்காலத்தில் ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்கள் தென்கிழக்கிலங்கையிலும் பௌத்த சமய வளர்ச்சிக்கான தங்கள் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளனர்.

   • கி.பி ஏழாம் நூற்றாண்டில் உறுகுணையிலிருந்து படை திரட்டி அனுராதபுரியிலிருந்து ஆட்சிபுரிந்த மொகலானன் சாகாமம் நகரில் விகாரையொன்றை நிர்மாணித்ததுடன் சங்கமன் கண்டி இறக்காவில் (றக்கா) விகாரைக்கு சேத்தியமனையொன்றையும் நிர்மாணித்துக் கொடுத்துள்ளான்.

   (இலங்கை சுருக்க வரலாறு பக்கம் 112 கலாசிதி க. குணராசா திருமதி கமலா குணராசா - 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி.பி நாலாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மட்டக்களப்பு

அனுராதபுரி மன்னனான மகாசேனன் (கி.பி 325 - 352) மேற்கொண்ட சமய விரோத நடவடிக்கைகளின் காரணமாக கிழக்கிலங்கையில் வாழ்ந்து வந்த தமிழர்களில் பெருமளவினர் தமிழ்ப் பௌத்தர்களாக மாறியிருந்த போதும் மகாசேனனுக்குப் பின் அனுராதபுரியில் ஆட்சி புரிந்த மேகவண்ணனது (கி.பி 352 - 389) ஆட்சிக் காலத்தில் தமிழ்ப் பௌத்தர்களில் பெருமளவினர் மீண்டும் சைவர்களாக மாறினர்.

மேக வண்ணனது ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பு உள்ளிட்ட கிழக்கிலங்கையில் சைவம் முன்னிலை பெற்றிருந்தது. இதனை சமூக, சமய வரலாற்றாய்வுகள் உறுதி செய்கின்றன. ஆயினும் கிழக்கிலங்கையில் இக்காலத்தில் வாழ்ந்துவந்த தமிழர்களில் ஒரு சாரார் குறிப்பாக கிழக்கிழங்கையின் உட்பகுதிகளில் வாழ்ந்து வந்த தமிழர்களில் பெரும் பாலானோர் பௌத்த தமிழர்களாக வாழ்ந்திருந்ததை வரலாற்று சான்றுகள் உணர்த்து கின்றன. இவர்கள் பௌத்தர்களாக வாழ்ந்திருந்த போதும் இந்துமத நம்பிக்கைகளையும் பேணி வந்தனர் இதனைத் தொல்லியல் சான்றுகள் உணர்த்து கின்றன.

மகாசேனனால் அழிக்கப்பட்ட கோணேஸ்வரம் பின்வந்த மன்னர்களால் புனரமைக்கப்பட்டு அது மீண்டும் பழைய செல்வாக்கைத் திரும்பப் பெற்றது கி.பி 4ஆம் 5ஆம் நூற்றாண்டுகளில் இறுதி வடிவம் பெற்ற வாயு புராணம் இத்தலத்தைக் குறிப்பிடுவதன் மூலம் மகாசேனனின் பின்னரும் இது பழைய படி தனது முக்கியத்துவத்தைப் பெற்றது உறுதியாகின்றது (கலாநிதி சி.க. சிற்றம்பலம் - 1974) மகாசேனனுக்குப் பின் அனுராதபுரியில் ஆட்சி புரிந்த ஸ்ரீமகவண்ணன் காலத்தில் கோணேஸ்வரம் தனது செல்வாக்கை மீண்டும் பெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதுடன் இலங்கை வரலாற்றில் நிலையானதொரு இடத்தைப் பெற்று கொண்டது.

இதனை சமூக, சமய வரலாற்றாய்வுகள் உறுதி செய்கின்றன. மேலும் திருகோணமலை பிராந்தியத்தைப் பொறுத்த வரையில் மகாசேனனின் மதவிரோத நடவடிக்கையால் இந்து மதம் தனது தனித்துவத்தை இப்பிராந்தியத்தில் இழக்கவில்லை என்பதைப் பிற்கால பாளி, சிங்கள, இலக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன. *1*

கோகர்ணம் என்பது திருகோணமலையின் புராதன பெயர்களில் ஒன்றாகும் இங்கு குடிகொண்டிருக்கும் சிவனை கோணேஸ்வரர் (கோகர்ணேஸ்வரர்) கோகர்ணநாதர் என்றெல்லாம் போற்றிச் சைவர்கள் வழிபட்டு வருகின்றனர். இந்தியாவில் குப்த பேரரசர் காலத்தில் எழுதப்பட்ட புராணங்களில் ஒன்றான வாயு புராணம் மலயதீவு என்னும் நாட்டின் கிழக்கு கரையிலுள்ள கோகர்ண என்ற சிவனுடைய பெயரைக் கொண்ட சிவாலயத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்றது.

"தஸ்ய த்வீபஸ்ய வை பூர்வே தீரே
நதன மஹீபதே கோகர்ண நாமதேயஸ்ய
சங்கரஸ்ய ஆலயம் மஹத்

(செகுணசிங்கம், கோணேஸ்வரம்,
பேராதனை, 1973 பக்கம் 55)

வாயு புராணத்தில் வர்ணிக்கப்பட்டுள்ள மலயதீவு பல்வகையான மணிகளும் இரத்தினங்களும், பொன்னும், கடல்படுதிரவியங்களும் கிடைக்கின்ற நாடு அது மிலேச்சர், ராசஷஸர்கள் முதலியோரை மிகுதியாகக் கொண்டுள்ளது அங்கே, அகஸ்திய பவனமும் திரிகூட நிலையமும் அமைந்திருக்கின்றன. இவ்விவரங்கள் எல்லாம் இலக்கியங் களிலுள்ள இலங்கையைப் பற்றிய மரபுவழியான வர்ணனைகளைப் பெரிதும் ஒத்துள்ளதால் வாயு புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெருஞ்சிவாலயம் (ஸிவாலயம் மஹத்) இலங்கையிலுள்ள கோணேஸ்வரம் என்று கொள்வது எவ்வகையிலும் பொருந்தும். 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயுபுராணம் எழுதப்பட்ட காலத்தில் வடஇந்தியச் சைவர்களினால் பாராட்டப் படத்தக்க வகையிலே கோணேஸ்வரத்தின் புகழ் பரவியிருந்தது.

## மட்டக்களப்பு சமூக, சமய அரசியல் நிலை

அனுராதபுரி மன்னன் மேற்கொண்ட சமய விரோத நடவடிக்கைகளின் பயனாகத் தென்கிழக்கிலங்கையில் (மட்டக்களப்பு) பௌத்தம் ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்த போதும், இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த மக்களிடையே இந்து சமய நம்பிக்கைகளும் தொடர்ந்து நிலவியிருந்தன இங்கு வாழ்ந்திருந்த மக்களில் ஒரு சாரார் சைவர்களாக வாழ்ந்திருந்தனர் இவ் வேளையில் பானுசிங்கனின் மகனான அமரசேனன் (கி.பி 343 - 377) தென் கிழக்கிலங்கையில் ஆட்சிக்கு வந்தான்.

கலிங்க குலத்துத் தமிழனான இவனது ஆட்சிக்காலத்தின் முற்பகுதியில் தென்கிழக்கிலங்கையில் சைவசமய வளர்ச்சி நலிவுற்றிருந்ததுடன் சைவாலயங்களும் பொலிவிழந்து காட்சியளித்தன, மகாசேனனின் இறுதிக் காலம் வரை (கி.பி 352) இந்நிலை நீடித்திருந்தது மகாசேனனைத் தொடர்ந்து அவனது மகனான ஸ்ரீமேகவண்ணன் (கி.பி 352 - 389) அனுராதபுரி மன்னனானான் இவனது முழுப்பெயர், ஸ்ரீமேகவண்ண அபயா என்பதாகும் சமாதானப் பிரியனான இவனது அரசியல் செல்வாக்கு இலங்கையின் வடபகுதி, மேற்கு பகுதி, தென்கிழக்கு பகுதி என்பனவற்றில் நிலவியிருந்தது.3

ஸ்ரீமேகவண்ணன் அரியனை ஏறியதும் முதலில் செய்தகாரியம் தன் தந்தை மகாவிகாரைக்கு இழைத்த தீமைகளுக்குப் பரிகாரம் காணவேண்டி மகாசேனனால் அழிக்கப்பட்ட லோவமகாபாயா முதலான கட்டிடங்களை திரும்பக் கட்டு வித்தான். 4 தந்தையால் அழிக்கப்பட்டிருந்த பிரிவேனாக்கள், விகாரைகள் என்பனவற்றினை முன்னைய பொலிவோடு புனர்நிர்மாணம் செய்வித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாசேனனால் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாத திருப்பணியான ஜெத்தவன விகாரையைகட்டி முடிப்பித்தான் இலங்கைக்கு பௌத்ததர்மத்தினை எடுத்து வந்த மகிந்த தேரரின் உருவத்தை தங்கச் சிலையாக வடிப்பித்து அம்பத்தல சேத்தியத்தில் நிறுவினான். 5 ஸ்ரீமேகவண்ணன் அனுராதபுரியில் முடிசூடிக் கொண்டதைத் தொடர்ந்து தென் கிழக்கிலங்கையில் இந்து சமய வளர்ச்சியில் புதிய மறுமலர்ச்சிதோன்றியது எனலாம்.

மகாசேனனின் சமய விரோத நடவடிக்கைகள் காரணமாக தென்கிழக்கிலங்கையில் செழிப்பிழந்து அருகிய நிலையிலிருந்த சைவசமயம் ஸ்ரீ மேக வண்ணனது காலத்தில் புத்துயிர் பெற்று மீண்டும் சிறப்புடன் விளங்கத் தொடங்கியது புதிய சைவாலயங்களும் தோன்றின இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த பௌத்த தமிழர்களில் ஒரு பிரிவினர் மீண்டும் சைவர்களாயினர். இதனை விரிவாக நோக்க வேண்டியது அவசியமெனலாம்.

கி.பி 352ல் ஸ்ரீமேகவண்ணன் அனுராதபுரி மன்னனாக முடிசூட்டிக் கொண்டதைத் தொடர்ந்து மட்டக்களப்பில் அதிகாரம் செலுத்தி வந்த அமரசேனன் (கி.பி 343 - 377) அனுராதபுரியின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டான். ஆயினும் ஓரளவு சுதந்திரமுள்ளவனாகவே இவன் செயற்பட்டு வந்தான். தமிழ்ச்சைவனான அமரசேனன் சைவசமய வளர்ச்சியில் ஆர்வம் காட்டி வந்த போதும், பௌத்தத்திற்கும் ஆதரவளித்து வந்தான். அதனைத் தொடர்ந்து தென் கிழக்கிலங்கையில் நலிவுற்றிருந்த சைவம் மீண்டும் செழிப்புறத் தொடங்கியது. தமிழகத்திலிருந்து சைவக் குடியினர் பலர் இப்பிராந்தியத்திலே வந்து குடியேறினர். 6

இக் காலத்தில் தமிழகம் இராமநாத புரத்திலிருந்து அரசகுலத்தைச் சேர்ந்த ஏழு பெண்கள் தலைமையில் குடியேற்றமொன்று தென்கிழக்கிலங்கையில் நிகழ்ந்துள்ளது. கலைவஞ்சி, மங்கி அம்மை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டிச்சி, மகிளரசி, பாலம்மை, இராசம்மை, வீரமுத்து என்பன இப்பெண்களின் பெயர்களாகும்.

இவர்கள் எழுவரும், தங்கள் கணவர்களுடன் மற்றும் குடிமக்கள் சிலருடன் ஒன்று சேர்ந்து இராமேஸ்வரத்திலிருந்து படகுகள் மூலமாக மாதோட்டத்தில் (மகாதித்த) வந்து இறங்கினர் திருக்கேதீஸ்வரம் ஆலயம் சென்றடைந்த இவர்கள் கேதிச்வரரைத் தரிசித்துப் பின்னர் கோணேஸ்வரம் வந்தடைந்து கோணேசப் பெருமானைத் தரிசித்து மட்டக்களப்பு நகரினை வந்தடைந்து மன்னன் அமரசேனனைக் கண்டதாக மட்டக்களப்பு மான்மியம் (பக்கம் 40, 41) குறிப்பிடுகின்றது.

இவ்வேளையில், தன்னை வந்தடைந்து ஆதரவு வேண்டி நின்ற தமிழ்ச் சைவர்களான ஏழு பெண்களுக்கும் அவர்களுடன் வந்திருந்த ஏனைய தமிழ்க் குடியினருக்கும் மட்டக்களப்பு சிற்றரசனான அமரசேனன் ஏழு இடங்களை (ஊர்) வழங்கி அந்த இடங்களில் அவர்களைக் குடியேற்றினான் அவர்கள் அந்த இடங்களில் விவசாயத்தில் (நெற்பயிர்ச் செய்கை) ஈடுபட்டு வாழ்ந்து வரலாயினர் இவர்கள் குடியிருந்த ஊர்கள் பிற்காலத்தில் அவர்கள் பெயர்களால் வழங்கின 7 அமரசேனனது காலத்தில் கம்பரின் இராமகதை 'மட்டக்களப்பில் பரப்பப்பட்டதாக மட்டக்களப்பு மான்மியம் (பக்கம் 40, 41) குறிப்பிடுகின்றது. கம்பர் பிற்பட்ட காலத்தவர் என்பதால் இதை கம்பரின் கதையாகக் கருதமுடியாது.

இக்காலத்தில் இராமன் பற்றியகதை (தசதர ஜாதககதை) தமிழ் நாட்டில் நிலவியமை தெரிகின்றது எனவே அக்கால கட்டத்தில் இராமநாத புரத்திலிருந்து வந்து மட்டக்களப்பில் குடியேறியவர் களுடனாகவே இக்கதை மட்டக்களப்பில் பரவியதாகக் கொள்ள முடியும். 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரசிங்கனுக்குப் பின் அவனது மகனான குணசிங்கன் (கி.பி 377 - 407) என்பவன் தென் கிழக்கிலங்கையில் ஆட்சிக்கு வந்தான். மட்டக்களப்பு நகரிலிருந்து (சம்மாந்துறை வீரமுனை பிரதேசம்) ஆட்சி புரிந்து வந்த இவன் சுதந்திரமுள்ள சிற்றரசனாக ஆட்சி புரிந்து வந்தான். இவனும் அனுராதபுரி மன்னன் மேகவண்ணனும் (கி.பி 352 - 389) நெருங்கிய நண்பர்களாக விருந்து வந்தனர் இந்த இரு மன்னர்களது ஆட்சிக் காலத்திவ் அனுராதபுரிக்கும் தென்கிழக் கிலங்கையான மட்டக்களப்புக்கு மிடையில் நெருங்கிய சமூக, சமய, கலாசார உறவுகளும் நிலவியிருந்தன. குணசிங்கனது ஆட்சிக் காலத்தில் ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாக கலிங்க இளவரசி உலகநாச்சியின் வரவைக் குறிப்பிடலாம்.

குணசிங்கனது ஆட்சிக் காலத்தில் கலிங்க ஒரிசாதேசத்தை அரசுபுரியும் குகசேனனுடைய புத்திரி உலக நாச்சி என்பவள் கௌதம் புத்தருடைய தசனத்தை தனது நெடுங்கூந்தலுக்குள் மறைத்துக் கொண்டு கைலயங்கிரியில் குகவம்சத்தார் முற்காலத்தில் எடுத்து வைத்திருந்த சிவலிங்கத்தையும் எடுத்துக் கொண்டு தனது சகோதரன் உலக நாதனுடன் வர்த்தகரின் கப்பலேறி மணிபுரத்தில் இறங்கி அனுராதபுரி வந்து, ஸ்ரீமேகவண்ணனைச் சந்தித்து அவனிடம் புத்தருடைய தசனத்தைக் கையளித்தாள்.

இதனைத் தொடர்ந்து, கலிங்க இளவரசியான உலக நாச்சி, தனது குலம் கோத்திரங்களையெல்லாம், மன்னனிடம் எடுத்துரைத்தாள் மேகவண்ணனும் பௌத்தத்திற்கு, இனிப்பாதிப்பில்லையென்று, உளம் மகிழ்ச்சியுற்றவனாய், உலக நாச்சியை நோக்கி உமக்கு வேண்டியதைக் கேளும் என்று கூறினான் உலகநாச்சியும், அரசனே! இந்த இலங்கையில் காடு செறிந்து குடிவாழ்வில்லாத கிராமமொன்று தரும்படி வேண்டினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கேட்ட ஸ்ரீமேகவண்ணன் மட்டக்களப்பை அரசு புரியும் குணசிங்கன் தனது நண்பனானதால் ஒரு திருமுகம் வரைந்து அதில் உனது உன்னரசுகிரி மட்டக்களப்பு, இவைகளில் காடு செறிந்து குடி வாழ்வில்லாத இடம் ஒன்று இந்த உலக நாச்சிக்கு கொடுக்கும்படி வேண்டி, உலகநாச்சிக்குக் கொடுக்கும் உபகாரங்களையும் இரத்தினமாலையையும் அளித்து மட்டக்களப்புக்கு அனுப்பி வைத்தான்.

குணசிங்கனும் திருமுகத்தைப் படித்துச் சந்ததியுரிமை கொண்டாடி, மட்டக்களப்புக்கு வடபாகமாகவுள்ள அம்பலான்துறைக்கப்பால் மண்ணேறிமுனை வளர்ந்து காடு செறிந்து குடிவாழ்வற்ற பகுதியை நிந்தமாயீந்து ஒரு இடத்தில் குடிகளை அனுப்பி, வெட்டித் தூர்த்து மாளிகை நிர்மாணித்து உலகநாச்சிக்கு அளித்தான் உலக நாச்சியும் குடிவாழ்ந்து சிலகாலம் சென்றபின் தனது தம்பி சிவநாதனை, தந்தையிடத்தில் அனுப்பி குகன் குடும்பம் நூற்றாறும், சிறைக்குடும்பம் (பணியாட்கள்) முப்பதும் எடுப்பித்தாள்.

ஒரிசாவிலிருந்து வருவித்த குகக்குடும்பங்களைத் தன் அருகாய் குடியமாத்தி இந்த இடத்தில் ஒரு கோயில் நிர்மாணித்து அதில் தான் கொண்டு வந்த படிகலிங்கத்தைப் பிரதிஸ்டை செய்தாள் இதனை அனைவரும் வணங்கி வந்தனர் இதன் பின்னர் இன்னும் ஒரிசா நகரத்திலிருந்து அனேகக் குகக் குடும்பங்களை அழைத்து காப்புமுனைக்காட்டை அழித்துச் செப்பனிட:டுக் குடியேற்றி அப்பகுதிக்கு அரசியாகி மண்முனை என் நாமம் சூட்டி வாழ்ந்து வந்தாள். இவ்வாறு மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்றது. 9 மண்முனை இராச்சியம் தோன்றியதைத் தொடர்ந்து மட்டக்களப்பு இராச்சியத்தின் இராஜதானிக்கும் (சம்மாந்துறை வீரமுனை பிரதேசம்) மண்முனை இராஜதானிக்குமிடையில் நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலிங்க இளவரசி உலக நாச்சியின் வரவு பற்றி மேற்படி கதை மகாவம்சம் இறுதி அத்தியாயத்தின் (அத்தியாயம் 37) தொடர்ச்சியான சூளவம்சம் முதலாம் அத்தியாயத்திலும் கூறப்பட்டுள்ளது. இதனை "டொனால்ட்அபயசேகர" எழுதிய இலங்கைச் சரித்திரம் என்னும் நூல்மூலமும் அறிய முடிகின்றது. இதேவேளை, இக்கதையை, மட்டக்களப்பு மான்மியம் உலக நாச்சி, உலக நாதன் என்று கூற இலங்கைச் சரித்திரம் இக்கதையை வேறு பெயர்களுடன் கூறு கின்றது.

இக்கதை "வாலனம் குமாரி" பெண் வேடம் பூண்டு தனது நெடிய கூந்தலுக்குள் புத்த தந்தத்தை மறைத்து எடுத்துக் கொண்டு தனது கணவன் கந்தனம் குமாரனுடன் வந்தாள். எனக் கூறுகின்றது 10 ஸ்ரீமேகவண்ணனின் ஒன்பதாவது வருடத்தில் ஒரு பிராமணப் பெண் துறவி கலிங்க தேசத்திலிருந்து புத்தரின் தந்ததாது ஒன்றினை எடுத்து வந்தாள் அதனை மன்னன் வெகு கௌரவத்தோடு ஏற்றுக் கொண்டான். இவ்வாறு சூளவம்சம் (அத்தியாயம் 1) கூறும் 11 இதனை பேராசிரியர் பரணவிதான அவர்களும் இலங்கை வரலாறு என்ற நூலில் குறிப்பிடுகின்றார். 12

பகை வேந்தன் ஒருவனது கைகளுக்கு அகப்படாமல் இருப்பதற் காகவே கலிங்க மன்னன் குகசிவன் தனது மகளும் இளவரசியுமான பெண்ணிடம் புத்ததந்தத்தை இலங்கைக்கு அனுப்பிவைத்தான் என ஆய்வாளர் நந்ததேவ விசயசேகர அவர்கள் முன்னைச் சிங்கள ஓவியம் (1965) என்ற நூலில் குறிப்பிடுகின்றார் இதனை வரலாற்று நூலாசிரியர் எச். டபிள்யு. கொடிறின்றன் அவர்களும் தனது நூலில் குறிப்பிடுகின்றார். 13.

வரலாற்று பேராசிரியரான த.சி. வெங்கிடராமன் அவர்கள் எழுதிய 'நமது பாரதம்' என்ற நூலில் மேகவண்ணன் என்னும் மன்னன் காலத்தில் புத்தருடைய பல் ஒன்றைத் தன் கேசத்தில் மறைத்துக் கொண்டு தன் சத்துருக்களிட மிருந்து தப்பிய கலிங்க நாட்டு இளவரசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையை அடைந்தாள். இந்தப் பல்லை மரியாதையுடன் வரவேற்று இலங்கையின் இராஜதானியான அனுராதபுரத்தில் வைத்து ஒரு ஆலயம் எழுப்பினார்களாம் என்று கூறுகின்றார். 14. இவ்வாறு கலிங்க இளவரசி உலக நாச்சியின் கதையை வரலாற்று நூல்கள் கூறுகின்றன. ஆதலால் உலகநாச்சியின் வரவானது பண்டைய மட்டக்களப்பு வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

கலிங்க நாட்டிலிருந்து கௌதம புத்தரின் புனித சின்னத்தைக் கலிங்க இளவரசியாகிய உலகநாச்சி எடுத்து வந்த வேளையில் கொண்டு வந்த சிவலிங்கம் தமிழ்ச் சைவர்கள் நிறைந்திருந்த தென்கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு மன்னன் குணசிங்கனின் ஆதரவுடன் ஆலயமொன்று நீர்மாணித்து பிரதிஸ்டை செய்யப்பட்டது. இப்பிரதேசம் முழுவதையும் துப்பரவு செய்வித்து உலக நாச்சியுடன் அவளது கூட்டத்தினரும் முதன்முதலில் குடியேறிய இப்பிரதேசம் தற்போதைய கோயிற் குளம் பகுதியாகும் இவ்வரசியால் நிர்மாணிக்கப்பட்ட சிவாலயம் பிற்காலத்தில் "மண்முனை கோயில் குளம் சிவாலயம்" எனப் புகழ் பெற்றது. 15

மண்முனை அரசியான உலகநாச்சி மட்டக்களப்பு மன்னன் குணசிங்கனின் தம்பியான கிரசரன் என்பவனை மணம்புரிந்து மண்முனையிலிருந்து ஆட்சி புரிந்து வந்த காலத்தில் "தான்தோன்றீஸ்வரர் ஆலயம் தோற்றம் பெற்றது (மட்டக்களப்பு மான்மியம் பக்கம் 43) களப்பு முனைக்குத் தென்பாகமுள்ள காட்டை அழிப்பிக்கும் போது திடகன் என்பவன் வெட்டிய கொக்கு நெட்டி மரத்திலிருந்து இரத்தம் வெளிப்பட்டது இதைக் கண்ட திடகன் தனது உடைத்துணியால் மரத்து வெட்டுவாயை கட்டி வைத்துப் போட்டு உலகநாச்சியிடத்தில் வந்து இந்தச் செய்தியை அறிவித்தான்.

உலக நாச்சியும், இந்த இடத்தில் போய்ப்பார்க்கும் போது அந்தக் கொக்கு நெட்டி மரத்தடியில் சிவலிங்கம் ஒன்று தோன்றி யிருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலனாகியது மற்றவர் கண்களுக்கு புலப்படாத படியால் உலக நாச்சியும் சிவலிங்கமெனத் தீர்மானம் செய்து அக்காட்டை அழிப்பித்து துப்பரவு செய்து அந்த இடத்தில் ஆலயம் ஒன்றை நிர்மாணித்து பூசை, வழிபாடுகள் இடம் பெற ஏற்பாடுகள் செய்தாள். கொக்கட்டி மரங்கள் நிறைந்த இடமாதலால் அப்பகுதி கொக்கட்டிச் சோலை ஆயிற்று தான் தோன்றிய சிவலிங்கமாகிய சுயம்பு இலிங்கம் மூலமூர்த்தியாக அமைந்ததால் அவ்வாலயம் "தான் தோன்றீஸ்வரர்" ஆலயம் எனப் பெயர் பெற்றது.

இக்கால கட்டத்தில் (கி.பி நாலாம் நூற்றாண்டு) தமிழகத்தில் மூவேந்தர் ஆட்சி கவிழ்க்கப்பட்டு களப்பிரர் ஆட்சி நிலவியிருந்தது இவ்வேளையில் அங்கு வாழ்ந்திருந்த தமிழரிடையே பௌத்தம் செல்வாக்குப் பெற்றிருந்தது. இந்து சமயம் நலிவுற்றிருந்தது இதேவேளை கிழக்கிலங்கையில் இந்து சமயம் மீண்டும் தனது செல்வாக்கை நிலை பெறச் செய்திருந்தது அழிக்கப்பட்ட கலந்தன் ஊர் சிவாலயம் இறக்காவில் (ஏரகாவில்) சிவாலயம் போன்றவற்றைத் தவிர ஏனைய சிவலாயங்கள் புத்துயிர் பெற்றிருந்தன.

கோணேஸ்வரம் மீண்டும் பனரமைக்கப்பட்டுச் சிறப்புடன் விளங்கியிருந்த இக்காலத்தில் கிழக்கிலங்கையில் சைவம் முன்னிலை பெற்றிருந்த போதும் பௌத்த சமயமும் நிலவியிருந்தது பௌத்த தமிழர்களும் வாழ்ந்திருந்தனர். இவ் வேளையில் கிழக்கிலங்கையின் கரையோரப்பகுதிகளில் வாழ்ந்திருந்த மக்கள் பெரும்பாலும் தமிழ்ச் சைவர்களாவர்.

## குறிப்புக்கள்

1) கி.பி மூன்றாம் நாலாம் நூற்றாண்டுகளில் கிழக்கிலங்கையில் இந்துமதம்
'கட்டுரை' நா. நவநாயக மூர்த்தி 'இந்துநதி' விசேடமலர் கிழக்கு பல்கலைக்கழகம் - *2003/2004*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) இலங்கையில் இந்து கலாசாரம் பகுதி I
பக்கம் 31, 32 கலாநிதி சி. பத்மநாதன் - 2000

3) History of ceylon - Page 89. S. Paranavithana - 1969

4) நம்முன்னோரளித்த அருஞ்செல்வம்
பக்கம் 82, ஜி.சி. மெண்டிஸ் - 1969

5) சூளவம்சம் கூறும் இலங்கை வரலாறு
பக்கம் 3, கலாநிதி க. குணராசா - 2008

6) கி.பி மூன்றாம், நாலாம் நூற்றாண்டுகளில் கிழக்கிலங்கையில் இந்து மதம்.
கட்டுரை நா. நவநாயக மூர்த்தி இந்துநதி விசேட மலர் கிழக்கு பல்கலைகழகம் - 2003/2004

7) கலைவஞ்சி குடியிருந்த இடமே, களுவாஞ்சிகுடி என இன்று பெயர் வழங்குகின்றது மங்கி அம்மை செட்டிச்சி மகிளரசி, பாலம்மைஆகியோர் குடியிருந்த இடங்கள் முறையே மங்கிக் கட்டுசெட்டிகுளம் (கன்னன்குடா அருகில்) மகிளூர் பாலமின் கட்டு, என்றும் பெயர்கள் வழங்கின இவை போன்று வீரமுத்து குடியிருந்த இடம் முத்துக்கல் (மன்னம் பிட்டிக்கு அண்மையில்) ஆகும். இராசம்மை குடியிருந்த இடமே இராசம் மாதறையாகிப் பேச்சு வழக்கதில் அம்மாதறையாகிக் காலப்போக்கில் அம்பாரை எனத்திரிபு பெற்றது (மட்டக்களப்பு மான்மியம் - ஓர் ஆராயச்சி பக்கம் 72 திருமதி தனபாக்கியம் குணபால சிங்கம், தொல்லியல் எம். ஏ - 1993)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரை வெளிவந்த ஆசிரியரின் பிற நூல்கள் :

- தமிழரும் முருகவழிபாடும்! (ஆய்வு)
- தொல்லியல் சிந்தனைகள். (ஆய்வு)
- பண்டைத் தமிழர் பண்பாட்டுக் கோலங்கள். (ஆய்வு)
- பண்டைய ஈழத்தமிழர்! (ஆய்வு)
- தம்பிலுவில் கண்ணகி வழிபாடு! (ஆய்வு)
- ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள்! (ஆய்வு)
- பழந்தமிழர் நடுகற் பண்பாடு!. (ஆய்வு)
- திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு. (ஆய்வு)
- 'பனங்காடு ஸ்ரீ பாசுபதேஸ்வரர் அருட் பாமாலை! (இசைப்பாடல்கள்)
- உகந்தை மலை ஸ்ரீ வேல்முருகன் பேரில் பாமாலை! (இசைப்பாடல்கள்)
- தம்பிலுவில் கண்ணகையம்மன் பாமாலை (இசைப்பாடல்கள்)
- கருங்கொடித்தீவு சின்னக்குளம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் அருளமுதம்! (இசைப்பாடல்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்மன் கண்டி காட்டுப் பிள்ளையார் ஆலயம்



சங்கமன் கண்டி காட்டுப்பிள்ளையார் ஆலயத்திலுள்ள சிவலிங்க பிள்ளையார், பண்டைய சங்கமன் கண்டி நகர் சிவாலயத்தில் மூலராக நிலவிவந்த பழமை வாய்ந்த சிவலிங்கம் இதுவாகும். மேலும் ஒரு இலிங்கமும் இங்கு உண்டு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டைய சாகாம நகரின் தென்கிழக்கு பகுதியில் 1972இல் திரு.சின்னத்துரை என்பவரது காணியில் கிணறு ஒன்றை நிர்மாணிப்பதற்காக திரு.க.வை.சரவணமுத்து (வைத்தியர்) சோதிடரால் நிலம் குறித்தவேளை இந்த இடத்தில் நீவழிபடத் தெய்வம் ஒன்று கிடைக்கும் என்று சோதிடரான பெரியவரால் கூறப்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து கிணறு நிர்மாணிக்கும் பணி இடம் பெற்றவேளை இச்சிவலிங்கம் நிலத்தின் கீழ் கண்டெடுக்கப்பட்டதாக அறியமுடிகின்றது மிகப்பழமை வாய்ந்த இச் சிவலிங்கம் தற்போது சாகாமம் பொத்துவில் வீதியின் அருகாய்கோயில் கொண்டு பாலவினாயகர் என்ற பெயரில் வழிபடப்பட்டு வருகின்றது (தகவலும், படமும். திரு.க.பத்மநாதன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாகாமம் மொட்டையாகல் மலை, இதனை "தாடகிரி" என மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் கூறும் மொட்டையா கல்லுஎன வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன.



இறக்காவில்லு குளத்தின் கிழக்கு கரைப்பகுதி நீர்வற்றிய நிலையில் (23.06.2017) பின் புறத்தில் மணற்சேனை கிராமத்தின் வடக்கு பிரதேசம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாகாமம்
கிழவியூர்மலை,
கீத்துப்பத்து பகுதியில்
கண்டெடுக்கப்பட்டது
பழமை வாய்ந்த
இச்சிவலிங்கம்
திரு.நா.பால சூரியம்
அவர்களது
இல்லத்தில்
(பனங்காடு)
வழிபடப்பட்டு
வருகினறது.




இறக்காவில்லு (குளம்) தற்போதைய தோற்றம் நீர்வற்றி வரண்ட (23.06.2017) நிலையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டைய இறக்கரவில் குளத்தின் மேற்கு பகுதி
நெல்வயல்களாகத் தற்காலத்தில் காட்சியளிக்கின்றது.



வரலாற்றுச் சிறப்பினைக் கொண்ட இறக்காவில்
பொக்கிஷமலையின் எழில் தோற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படிவெட்டின மலை தெற்கு சரிவின் ஊடாக ஏறி மலையுச்சிக்குச் செல்லும் பாதைப் படிக்கட்டு உச்சிப் பகுதியில் சிதைவடைந்த நிலையில் தூபியின் எச்சங்கள்.




படிவெட்டின மலையின் கிழக்குப் புறத்தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படிவெட்டின மலை மேற்கு புறத்தோற்றம்



படிவெட்டின மலை மேற்குச் சரிவினூடாக மலையுச்சியைச் சென்றடைய பயன்படுத்தப்பட்ட பிறிதொரு படிக்கட்டு




படிவெட்டின மலையுச்சியின் விசாலமான பரப்பில் அருகருகாய் சிதைவடைந்த தூபியின் வடபகுதி, மண்டபத்தின் தென் பகுதி தொல்லியல் எச்சங்கள்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலையுச்சியில் விசாலமான பரப்பில் காணப்படும் சிதைவடைந்த மண்டபத்தின் அடித்தள தொல்லியல் எச்சங்கள்



படிவெட்டின மலைக்கு அருகாய் காணப்படும் குகை,




படிவெட்டின மலையுச்சியில் காணப்படும் சிதைவடைந்த துபியின் எச்சங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியர் பற்றி

தம்பிலுவில் பழம்பதியில் நாட்டுக் கூத்துக் கலைஞர் நாகமுத்து சீவரெத்தினம் தம்பதியினரின் மூத்த புதல்வராக அவதரித்தவர் பல்கலை வித்தகர் சோதிடர் வில்லியம்பிள்ளை விதானையாரால் நவநாயகமூர்த்தி என நாமம் சூட்டப் பெற்றவர் சிறுவயதிலிருந்து இவரைநான் அறிவேன் இவர் என் உறவினருமாவார்.

கால் நூற்றாண்டுக்கு மேலாக எழுதி ஆய்வுத்துறையில் முத்திரை பதித்துள்ள இவர் மனிதனுக்கு அமைய வேண்டிய ஐம்பெருங்குணாங் களாகிய நகைச் சுவை, நேர்மை, சமயோசிதம் இன்முகம், விட்டுக் கொடுத் தல் ஆகிய நற்பண்புகள் நிரம்பப் பெற்றவர் எடுத்த கருமத்தை திறம்பட முடிக்கும் ஆற்றலுள்ளவர்.

இத்தமிழ் ஆர்வலர் இதுகாலவரை ஆற்றிய தமிழ்ப் பணிகளுக்காக இவரை வாழ்த்திப் போற்றுவதுடன் இவரது சீரிய தமிழ்ப்பணி பல்லாண்டு காலம் தொடர அருள்புரிய வேண்டுமென இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**சீனித்தம்பி சபாரெத்தினம்**
ஓய்வு நிலை அதிபர்,
சமாதானநீதவான்
முன்னாள் தலைவர் முருகனாலயம் (ஆலையடிவேம்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org